November 2012
Issue : 59

# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை

இலங்கையிலிருந்து வெளிவரும்
கலை - இலக்கிய - பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழ்



தொழிலதிபர் திரு.பொன்.நடராசா



**"கு.சின்னப்பபாரதி இலக்கியக் கருத்தரங்க நினைவு அறக்கட்டளை"** வழங்கிய "(4ம் ஆண்டு இலக்கியப் பரிசு – 2012)" 2011ஆம் ஆண்டு வெளிவந்த சிறந்த சிற்றிதழ்களுக்கான விருது இலங்கையிலிருந்து வெளிவரும் **'ஜீவநதி'** சஞ்சிகைக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வு தமிழ்நாடு நாமக்கல்லில் 02.10.2012 அன்று நடைபெற்றது. 'ஜீவநதி' ஆசிரியர் **க.பரணீதரனுக்கு, இரா.வீரமணி** அவர்கள் விருது வழங்கிக் கௌரவித்தார்.

கார்த்திகை 2012
வீச்சு : 59

60/=

# ‘செங்கதிர்’ ஆண்டுச் சந்தா : ரூ1000/-க்குக் குறையாத இயன்ற அன்பளிப்பு

✯ **“செங்கதிர்”** இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலம் விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் நேரில் வழங்கலாம்.

**அல்லது**

✯ மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு, நடைமுறைக் கணக்கு இல : 113100138588996 க்கு வைப்பிலிடலாம்.

**People's Bank (Town Branch) Batticaloa.**

**Current account No.: 113100138588996 - For bank deposit**

**அல்லது**

✯ அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பில் மாற்றக் கூடியவாறு காசுக்கட்டளை அனுப்பலாம்.

**Post Office, Batticaloa - For money orders**

✯ காசோலைகள் / காசுக்கட்டளைகளை த.கோபாலகிருஸ்ணன் எனப் பெயரிடுக. **Cheques / Money orders in Favour of T.Gopalakrishnan**

# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை

**தோற்றம் 30.01.2008**

59

கார்த்திகை2012(தி.வ.ஆண்டு-2043)

5வது ஆண்டு



ஆசிரியர்:

**செங்கதிரோன்**

தொ.பேசி/T.P -065-2227876

077-2602634

மின்னஞ்சல் / E.mail-

senkathirgopal@gmail.com

துணை ஆசிரியர்:

**அன்பழகன் குரூஸ்**

தொலைபேசி/T.P - 0777492861

மின்னஞ்சல்/E.mail -

croos_a@yahoo.com

**தொடர்பு முகவரி :**

**செங்கதிரோன்**

**திரு.த.கோபாலகிருஸ்ணன்**

19, மேல்மாடித் தெரு,

மட்டக்களப்பு,

இலங்கை.

**Contact :**

**Senkathiron**

**T.Gopalakrishnan**

19, Upstair Road,

Batticaloa,

Sri lanka.



◆ ஆசிரியர் பக்கம் 02

◆ அதிதிப்பக்கம் 03

◆ 'பாரதிதாசன்கள்' வேண்டும் (கவிதை) - வாகரைவாணன் 11

◆ புதிர் (சிறுகதை - ஆரையம்பதி ஆ.தங்கராசா 13

◆ வாழ்வின் நிலை (கவிதை) - ஏறாவூர் தாஹிர் 21

◆ பகல்கொள்ளை(குறுங்கதை) - வேல்அமுதன் 22

◆ சொல்வளம் பெருக்குவோம் - 39 - பன்மொழிப் புலவர் த.கனகரெத்தினம் 23

◆ ஈழமகள் தேடுகிறாள் - 03 (தொடர் கவிதை) - புதுமைவாணன் 26

◆ மீண்டும் ஒரு காதல் கதை -20 - திருக்கோவில் யோகா.யோகேந்திரன் 27

◆ 'வயிற்றெரிச்சல்' கதைகள் -இணுவை இரகு 32

◆ வாழ்க்கைத்தடம் - 08 - அன்புமணி 33

◆ கதை கூறும் குறள் - 36 - கோத்திரன் 41

◆ இயக்கம் - காசிஆனந்தன் கதை 49

◆ மட்டக்களப்பு மாநில மணவாசனைச் சொற்கள் பட்டியல் - X - செ.எதிர்மன்னசிங்கம் 50

◆ ஏனெஸ்ற் தளையசிங்கம் மக்கின்றயர் - எஸ்.பொ 51

◆ விசுவாமித்திர பக்கம் 58

◆ பேராசிரியர் மௌனகுரு பக்கம் 63

◆ விளாசல் வீரக்குட்டி 64


ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு

# ஆசிரியர் பக்கம்

அண்மைக்காலமாகப் 'புதுக்கவிதை'த் தொகுதிகள் நிறையவே வருகின்றன. புத்தகங்களின் வரவு வரவேற்கப்பட வேண்டியவைதான். ஆனாலும் புற்றீசல் போலப் புறப்படும் புதுக்கவிதைத் தொகுதிகளை நோக்கும்போது இளம் கவிஞர்களுக்கு - 'புதுக்' கவிஞர்களுக்குச் சிலவிடயங்களை நல்லெண்ணத்துடன் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

உலகின் எந்த மொழியானாலும் அதன் உச்சப்பிரயோகம் கவிதைதான். ஆனால் இன்றைய தமிழ்ச்சூழலில் அதுவும் 'புதுக்கவிதைப் போக்கு' வந்த பின் கவிதை படைப்பது எல்லோருக்கும் எளிதாகிவிட்டது. யாப்போடு எழுதுவது மரபுக்கவிதை என்றும் யாப்பில்லாமல் எழுதப்படுவது புதுக்கவிதை என்றும் ஒரு தவறான வழக்கு வந்துவிட்டது. யாப்பு மட்டுமே கவிதையாகிவிடாது. யாப்பற்றவை எல்லாம் (புதுக்) கவிதையுமல்ல. யாப்பு மட்டும் அமைந்தது வெறும் எலும்புக்கூடுதான். எனவே கவிதையை 'மரபு' என்றும் 'புதுசு' என்றும் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. நேற்றைய புதுமைதான் இன்றைய மரபு. இன்றைய புதுமைதான் நாளைய மரபு. வேரின்றி விருடசம் இல்லை. எனவே மரபில் காலூன்றி நின்று புதுமையை நோக்க வேண்டும். கவிதை கவித்துவம் நிறைந்ததாக அமையவேண்டும். கவிதை வேறு; கவித்துவம் வேறு. கனியொன்றைப் பிழியும்போது சொட்டும் சாறு போன்றது கவித்துவம். இலக்கியம் கண்டுதான் இலக்கணம். யாப்பு இயல்பாக மீறப்பட வேண்டுமேயொழிய யாப்பைத் தூக்கி எறியக்கூடாது. யாப்பு கவிதையாகிவிடாது என்ற கருத்தில் கவிக்கோ அப்துல் ரகுமான் ஓரிடத்தில் 'கரைகள் நதி ஆவதில்லை' என்றார். ஆனால் 'கரைகள் இல்லாத நதியும் இல்லை' என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டு மல்லவா?. (தொடர்) ஓசையும் அதாவது சந்தமும் உணர்ச்சி நிலையிலான உள்ளடக்கமுமே கவிதையின் வடிவமாகும். ஆகவே, இளம் கவிஞர்களே! புதுக்கவிதையாளர்களே! யாப்பைத் தெரிந்து கொண்டு - குறைந்தபட்சம் புரிந்துகொண்டு மீறுங்கள். அறிந்தவன் உடைத்தால்தான் ஆரோக்கியம் ஆகும். அப்போதுதான் தமிழ்க்கவிதை செழிக்கும்.

**- செங்கதிரோன்.**

**அன்பானவர்களே!**
**உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்கி "செங்கதிர்" இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் உதவுங்கள்.**
**– ஆசிரியர் –**

# அதிதிப்பக்கம்



'செங்கதிர்' இதழின் இம்மாத அதிதி, 19.10.2012 இல் அகவை எழுபத்தைந்தை நிறைவு செய்து பவளவிழாக் கண்ட பிரபல தொழிலதிபர் திரு.பொன்.நடராசா அவர்களாவார்.

**புனிதன்**

## ஒரு தனிமரம் தோப்பானது!

இலங்கையின் வடபுலத்தில் - யாழ் மண்ணில் ஒரு நிறுவனம் உண்டு. நீண்ட நாட்களாக நிலைத்தும் வளர்ந்தும் தடைகளைத் தகர்த்தெறிந்தும், நாளுக்கு நாள் தன்னை விரித்துக் கொண்டும், பலருக்கு நிழல் தந்தும் நிமிர்ந்து நிற்கின்றது. இன்று வடபுலத்துக்கு அப்பால் அது கொழும்பு, கிழக்கு மாகாணம், மலைநாடு என்று கிளைகளை அமைத்தும் தன்நிலையினை உயர்த்தியும் வருகிறது. அதன் பிரதான நோக்கம் அப்பகுதி மக்களுக்குத் தொழில் கொடுப்பதுடன் ஒரு கூட்டுக்கோட்பாட்டினை உருவாக்குவதுமாகும். தமிழர்களிடையே இப்படி ஒரு வணிக நிறுவனம் 'வரலாறு' ஆகியதில்லை எனலாம். ஏனெனில் இந்த நிறுவனத்தின் அதிபர் (ANNA INDUSTRIES) திரு.பொன் நடராசா அவர்கள் ஒரு முதலாளியாக இன்றித் தன் தொழிலாளர்களுடன் சமமாகப் பழகுகிறார். தன்னை மிக எளிமையாக வைத்துக் கொண்டிருக்கிறார். இடர்ப்பாடுகளையெல்லாம் தன் இதழோரப் புன்னகையுடன் எதிர்கொள்ளுகிறார். கடந்து வந்த அந்த ஐம்பத்து மூன்று ஆண்டுகால தொழிற்றுறை வாழ்வில் இதுவரை எந்தவொரு நிர்வாகப் பிரச்சனையோ - தொழிலாளர் போராட்டங்களோ நடைபெற்றிருக்கவில்லை. எந்த நீதிமன்றத்திற்கும் இவர் நீதி கேட்டுப்போனதுமில்லை. 'இயல்பினால் இல்வாழ்க்கை' என்று வள்ளுவம் சொல்லும்; இது இவர் வீட்டிலும் உண்டு, வெளியிலும் உண்டு. ஒரு தனிமரம் இன்று தோப்பாகி நிற்பதன் விஸ்வரூபத்தினை அது தடைதாண்டிய தாற்பரியத்தை இனிப்பார்க்கலாம்.

அண்ணா நடராசா அவர்களின் பிறப்பிடம் இணுவில். இயற்கை வளமும் இறை உணர்வுகளும் கலைத்துவமும் கவித்துவமும் கமழ்ந்த பூமி. அப்பா பொன்னையா ஒரு விவசாயி. அம்மாவின் பெயர் சின்னம்மா. இவரது பிறந்த தினம் 19.10.1937. ஆறு சகோதரிகள். ஒரே தம்பி. அவர் விவேகானந்தன். பதினெட்டு வயதில் தன் குடும்பத்தைச் சுமக்கப் புறப்பட்டவர். பல்வேறு துறைகளில் பணியாற்றியிருக்கிறார். கொழும்புத் துறைமுக 'டெலிகிளார்க்' வேலையிலிருந்து சவர்க்காரத் தொழிற்சாலை வரை இவர் பணி பலதரப்பட்டது. பல்வேறு அனுபவங்களைப் பாடமாகத் தந்திருக்கிறது. அப்படியான ஒரு அனுபவத்தின்போது இவரை முதலில் கண்டவரும் தன்கையால் தொட்டு விசாரித்தவரும் ஞானக்கனியான யோகர் சுவாமிகள் ஆவார். "கஷ்டப்படுகிறாய், முன்னுக்கு வருவாய்"

என்று ஒரு ஊக்கத்தை மறைமுகமாக இவர் மனதுள் ஊட்டிவிட்டார். அதன் பின்னான நாட்களில் இவரது பார்வையில் பட்டவர் 'மில்க் வைற்' அதிபர் திரு.கனகராசா அவர்கள். தனது முன்னோடியும் தொழில் குருவுமானவர் என இவரே அவரை நினைவு கூருகின்றார். அவர் பற்றி இவர் பேசாத நாட்களில்லை. அத்துணை நன்றியுணர்வு. அதன்பின் இவரால் ஈர்க்கப்பட்டவர் அண்ணாமலைப்பரியாரியார். யாழ் மண்ணில் சித்த வைத்தியப் பரம்பரையில் மிகவும் பிரபலமான பெயர் அண்ணாமலையார் என்பது. அவரே இவரது ஆன்மீகக் குரு எனலாம். அண்ணாமலையாரின் 'பாணி'யில் உருவாக்கப்பட்டதே 'அண்ணா பற்பொடி'. இதுவே அண்ணா தொழிலகத்தின் முதலாவது தயாரிப்பு. 'அண்ணா இன்டஸ்றீஸ்' என்ற பெயருள் அடங்கியிருக்கும் 'அண்ணா' பரியாரியாரை மறக்காத பக்தியின் வெளிப்பாடு. இது பலருக்குத் தெரியாது.

அண்ணா தொழிலகத்தின் மற்றய தயாரிப்பான 'அண்ணா காப்பி'யின் 'பாணி' மில்க்வைற் அதிபரின் அறிவுரையும் வழிகாட்டலும் கொண்டது. இரண்டும் வீட்டிலேயே உருவாக்கம் பெற்று விற்பனைக்கு வந்தவை. உழைப்பாளிகளாக உடன்பிறப்புக்கள். வெளிக்கள விற்பனையாளரும் விநியோகித்தரும் இவரே. வீட்டின் தயாரிப்பு என்பதால் சுத்தமும் சுவையும் நிறைந்திருந்தது. விற்பனை நகர்வும் வேகமானது. கையால் செய்த உற்பத்தி சந்தைப்படுத்தலைச் சமாளிக்க முடியாமல் போக 'கிரைண்டர்' மூலத் தயாரிப்பாக மாற்றமடைந்தது. (இவற்றையும் நிறுவனரையும் சுமந்து சென்ற மிதிவண்டியை இப்போதும் அண்ணா தொழிலக முன் அறையில் பார்க்கமுடிகிறது) இதன்பின்னான சரித்திரம் அண்ணா தொழிலகத்தின் அபரிமிதமான வளர்ச்சியின் வரலாறாகிப் போனதை இன்று காணமுடிகிறது. உணவு உற்பத்திகள். அன்றாட தேவைக்கான சிறு பொருட்கள், விலங்குகள் உற்பத்தி, விலங்குணவுகள் ஆக்கம், தென்னை - வாழைப் பண்ணைகள், பறவை வளர்ப்பு (மூன்றுமாடி கொண்டதான கோழிப் பண்ணையை இங்குதான் பார்க்க முடிகிறது.), பால் உற்பத்தி, காற்றாடி மூலம் நீர் இறைக்கும் அறிமுகம், உயிர்வாயு உற்பத்தி (Biogas), நாற்று மேடைகள், தானிய உற்பத்தி, அவற்றினை விளைவிப்போரிடமிருந்து கொள்வனவு என்று பல்வகைத் துறைகளாக விழுதுவிட்டு விரிந்து நிற்கிறது. பணியாற்றும் பல குடும்பங்களைப் பாதுகாத்தும் வருகிறது.

1985ல் யாழ் மக்கள் போர்நிலைகளாலும் பொருளாதாரத் தடைகளாலும் நிலைகுலைந்திருந்தார்கள். குழந்தைகட்கான உணவுக் குறைபாடுகள் பல குடும்பங்களைப் பாதித்திருந்தன. அந்த மோசமான காலகட்டத்துள் பேராசிரியரும் குழந்தை வைத்திய நிபுணருமான டாக்டர் ராமதாஸ் அவர்களுடன் ஆலோசிக்கிறார் அண்ணா நடராசா. அதன் வெளிப்பாடே 'ஜீவாகாரம்' ஆக உற்பத்தியானது. பல மருத்துவர்களின் பாராட்டையும் அது பெற்றுக் கொண்டது. குழந்தைகளும் முதியோருமாகப் பலரின் வாழ்வைக் காப்பாற்றிய பெருமை அன்று ஜீவாகாரத்துக்கிருந்தது. இது வெறும் புகழ்ச்சி அல்ல. குறிப்பாக 1995ல் யாழ் இடம்பெயர்வில்

இணுவிலில் இருந்து மக்களுடன் இடம்பெயர்ந்து தொழில் தொடர்ந்த அண்ணா நிறுவனமும் அதன் நிறுவனர் அண்ணா நடராசா அவர்களும் கொண்டு சென்றதும், இடையில் உற்பத்திசெய்து இடர்பட்ட மக்களை பட்டினியிலிருந்து பாதுகாத்ததும் இந்த 'ஜீவாகாரம்'தான். 1959 - 2012 வரையான ஐம்பத்துமூன்று வருட உழைப்பும் உன்னதமான சேவையுமே இந்நிறுவனம் நின்று நிலைக்கக் காரணமாகிறது. வடபுலத்துள் ஏற்பட்ட மாற்றங்களூடே இது தன்னை மகத்துவமாக வளர்த்துக் கொண்டிருக்கிறது. மாற்றிடம் தேடி ஓடாமல் இருந்திருக்கிறது. இது ஒரு 'கின்னஸ்' சாதனை எனலாம்.

முன்னாள் அமைச்சர் அமரர் தொண்டமான் அவர்கட்குக் கால்நடை வளர்ப்பிலும் உற்பத்தியிலும் ஆழ்ந்த அறிவுண்டு - அனுபவமும் உண்டு. ஒருமுறை அண்ணா தொழிலகத்துள் அவர் நுழைந்தார். அப்படியே அசந்து போனார். "நீங்கள் எப்போ இந்தியாவிலிருந்து இங்கு வந்து தங்கினீர்கள்" என்று கேட்டிருக்கிறார். காரணம், இங்கு ஏற்பட்டிருந்த பண்ணை முறைகளும் பால் உற்பத்தியும்தான். கோழி வளர்ப்பு முறையும் அமைச்சரைக் கவர்ந்திருந்தது. புதிய அனுபவமாகவுமிருந்தது. யாழ்ப்பாணத்தில் இப்படி ஒருவர் இருக்கமுடியுமா? இப்படி ஒழுங்கு ஆற்ற முடியுமா? என்ற ஆச்சரியமே அந்தக் கேள்வியானது. அமைச்சர் தொண்டமானின் வருகையின்பின் அண்ணா நிறுவனத்தின் சில தேவைகள் நிறைவேற்றப்பட்டன. திரு. நடராசா அவர்களைப் பார்க்கும்போது இயற்கை விஞ்ஞானி ஜி.டீ.நாயுடு அவர்களின் நினைவு வருகிறது.

எப்போதும் அண்ணா நடராசா அவர்கள் தன் நினைவிலிருக்கும் 'இருவர்' ஞாபகங்களை நன்றியுடன் நினைவுகூருகிறார். ஒருவர் மில்க்வைற் அதிபர் கனகராசா அவர்கள். அவரே தனது ஊக்கத்துக்கும் உயர்வுக்கும் காரணமானவர் என்கிறார். ஒரு ஆசானாக இருந்து தன்னை அரவணைத்து ஆசீர்வதித்து ஆளாக்கியவர் என்கிறார். மற்றயவர் இவரது ஒரே தம்பி விவேகானந்தன் அவர்கள் அண்ணா நடராசா அவர்கள் மூளையும் முயற்சியும் மூலதனமுமானவர். விவேகானந்தன் உழைப்பும், ஓர்மமும், நிருவாகத்தருமானவர். அவரது கடின உழைப்பும் நிர்வாகத் திறனுமே அண்ணா நிறுவனம் உயரக்காரணம் எனவும் சில உற்பத்திகளின் மூலகர்த்தரும் அவர்தானெனவும் தன் தம்பியின் நினைவுகளை மீட்டு நெஞ்சம் நெகிழ்கிறார். இந்த இராம லட்சுமணர்கள் ஊருக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்கள். கூட்டுக் குடும்ப வாழ்வின் குதூகலம் கண்டவர்கள்.

19.10.2012ல் தனது எழுபத்தைந்தாவது அகவையை அண்ணா நடராசா எட்டியிருக்கிறார். அன்றைய தினம் இணுவில் விழாக்கோலம் பூண்டிருந்தது. இவரது நிறுவன ஊழியர்கள் இவரை வாழ்த்தி விழாக் கொண்டாடினார்கள். இவ்விழா சாதாரண பிறந்ததின விழாவாக அன்றி வேறுபட்டதாக இருந்தது. பல்வகை நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தன. பெரியார்கள், கல்விமான்கள்,

வர்த்தக விற்பன்னர்கள், மதாச்சாரியார்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் என்று நிறைந்த கூட்டம். வித்தியாசமான ஒரு நிகழ்வாக கேள்வி பதில் இடம்பெற்றிருந்தது. இவரது மருகர் பொறியியலாளர் 'மதிமகன் வேல் அமுதன்' கேள்விகளுக்கு இவர் பதில் அளித்தார்.

கேள்வி 01 :-

*உங்களுக்குப்பிடித்தமான வடபகுதியைச் சார்ந்த தொழில் அதிபர்கள் பற்றி....?*

**ஒருவர் "அமரர் மில்க்வைற் கனகராசா அவர்கள். மற்றவர் திரு.தி. இராசதுரை அவர்கள். இவர் முன்னாள் அரச அதிபர். இன உணர்வாளர். மானிப்பாய் 'றோஸ்' பிராண்ட் டொபி/மொடோர்ன் 'பிளாஸ்டிக்' வேக்ஸ்/ஜெனரல் ஏஜன்ஜீஸ் என்பனவற்றின் நிறுவனர்.**

கேள்வி 02:-

*வடமாகாணத்தில் தங்கட்குப்பிடித்தமான அண்ணா அடையாள உற்பத்தி தவிர்ந்த ஒரு அடையாளம் எது?*

**'றோஸ் பிராண்ட்'**

கேள்வி 03:-

*நீங்கள் வாழ்க்கையில் மிகவும் சந்தோசமாக இருந்த தருணம் எது?*

**"எனது தயாரிப்புகள் மக்கள் மத்தியில் அங்கீகரிக்கப்பட்ட சமயத்தில்."**

கேள்வி 04:-

*நீங்கள் வாழ்க்கையில் துயரமடைந்த தருணம் எது?*

**"இருதடவைகள். ஒன்று மில்க்வைற் அதிபர் மறைந்தபோது. மற்றயது எனது தம்பி விவேகானந்தன் இறந்தபோது."**

கேள்வி 05:-

*இன்றைய இளைஞர்கட்கு நீங்கள் தெரிவிக்க விரும்புவது என்ன?*

**"முன்னரைப்போல் இல்லாமல் இன்று நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி முன்னேற முயற்சிக்க வேண்டும்."**

கேள்வி 06:-

*வாழ்க்கையில் முன்னேறத் தேவையான மூன்று பழக்க வழக்கங்கள்?*

**"நேரம் தவறாமை, வாய்மை, விடாமுயற்சி"**

கேள்வி 07:-

*சந்தைப்படுத்தல் பற்றிய உங்கள் கருத்து?*

**"எமது காலத்தில் மிகவும் சிரமப்பட்டுச் செய்தோம். இன்றைய காலத்தில் இலகுவாகச் செய்யக்கூடியதாக இருக்கிறது."**

கேள்வி 08:-

*ஏறக்குறைய ஐம்பது வருடங்களாக வடமாகாணத்தில் உங்கள்*

*நிறுவனத்தை மிகுந்த பிரச்சனைகள் போர்க்கால இடர்ப்பாடுகள் மத்தியில் இயக்கி இருக்கிறீர்கள். இது எப்படிச் சாத்தியமானது?*
**"தொடங்கப்பட்ட ஒன்றைத் தொடர்ந்து செய்யும் உழைப் புடனான ஓர்மம்தான் காரணம். 'செய்யும் தொழில் தெய்வம்' எனப்படுகிறதே அதனால்"**

கேள்வி 09:-

*கூட்டு உழைப்பு (Team Work) பற்றிய உங்கள் எண்ணம் என்ன?*
**"முன்னய காலங்களில் நான் நினைத்ததை எனது தம்பி, முகாமையாளர், சந்தைப்படுத்தும் மேலாளர் ஆகியோர் முன்வந்து செய்துவந்தனர். தற்போது எனது மகன்மார், அவர்களின் முகாமையாளர்கள் ஊழியர்களின் உதவியுடன் சிறப்பாகச் செய்கின்றனர். குழுவாக இயங்கினால் மட்டுமே வெற்றி நிச்சயம்."**

கேள்வி 10:-

*நீங்கள் உங்களது ஊழியர்கட்குத் தெரிவிக்க விரும்புவது என்ன?*
**"எங்களுடன் உண்மையாக உழைத்துவந்தால் முன்னுக்கு வரமுடியும். எனது இன்றய 75வது பிறந்ததினத்தில் ஒவ்வொரு கிளை நிறுவனத்திலும் உள்ள ஊழியர்களின் பிள்ளைகளில் ஒருவரைத் தெரிவு செய்து - அவர் ஊக்கமாகப் படிப்பவர் ஆயின் உதவி வழங்குவது என எண்ணியுள்ளேன்"**

மேற்கண்ட பதில்கள் தெரிவிக்கும் உண்மையான வெளிப்பாடு இவரது பாதையின் பதிவுகள் என ஏற்றுக்கொண்டால், இனிவருங்காலத்தில் இளைஞர்கள் இவற்றை ஒரு பாடமாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அயராத உழைப்பு, தளராத ஊக்கம், உயர்வான எண்ணம் தன் மண்ணுக்கும் மக்களுக்குமான பரிவு, இந்த மனிதரிடம் எப்போதும் இழைந்தோடும் இதழோரச் சிரிப்பு - சகிப்பு என்பனவே இவரது வெற்றியின் இரகசியங்கள்.

யாழ்ப்பாணத்தில் 'அண்ணா தொழிலகம்' எனவும் கொழும்பில் 'அண்ணா இன்ரர் நஷனல் லிமிட்' என்றும் இன்று கிளை பரப்பி இவரது குழந்தைகளால் நிர்வகிக்கப்படுகிறது.

**'மக்களின் தேவை வளர்ந்திடும் அளவுக்குத்**
**தக்கவாறு தளிர்த்திடுகின்ற**
**அறிவிலே தோன்றுவை; அறத்தோள் தழுவுவை**
**மறுவிலாக் கருவியில் வாய்விட்டுச் சிரிப்பை**
**பொருள்பல நல்கிஅப் பொருள் தோறும் கலைத்திறம்**
**அருள்புரிந்து குறைபாடகற்றுவை'**

***- பாவேந்தர் பாரதிதாசன்***

# தெறிகதிர்-31

கலாநிதி கோணாமலை
கோணேசர்,
மண்டூர்.

'செங்கதிர்' 56ஆம் வீச்சில் பேராசிரியர் மௌனகுரு அவர்கள் சில முன்னாள் அதிபர்களின் ஆளுமையைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். இது முக்கியமான கருத்து.

ஐம்பது அறுபதுகளுக்குச் சற்றுப் பின் சென்று நாற்பது ஐம்பதுகளுக்குச் செல்வோம். நாற்பது ஐம்பதுகளில் மட்டக்களப்பு சென் மிக்கல் கல்லூரியின் அதிபராக வணக்கத்துக்குரிய பிதா கிறௌதர் பணியாற்றினார். இவர் சிறந்த அறிஞர் மாத்திரமல்ல அன்பு நிறைந்த நிர்வாகியுமாவார். மெதடிஸ்த மத்திய கல்லூரியில் திரு. எஸ்.வி.ஓ. சோமநாதர் அதிபராகப் பணியாற்றினார். இவர் பொறுமை நிறைந்த நிர்வாகி மாத்திரமல்ல சிறந்த எழுத்தாளருமாவார். மட்டக்களப்பு தொடர்பான பல விடயங்களை ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளார். சிவாநந்த வித்தியாலயத்தில் திரு. ச.அம்பலவாணர் அதிபராகப் பணியாற்றினார். இவர் லண்டன் பல்கலைக் கழகத்து விஞ்ஞான சிறப்புப் பட்டதாரி. இந்த அதிபர்கள் யாவரும் அகில இலங்கை புகழ் பெற்றவர்கள். இப்பாடசாலைகள் எல்லாம் மதம் சார்ந்த அமைப்புகளால் நடத்தப் பெற்றவை. இந்த பாடசாலைகளில் தியாகசிந்தனை உள்ளவர்கள் அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் பணியாற்ற முன் வந்தார்கள். மாணவர்களின் விருத்தியே இவர்களின் இலட்சியமாக இருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது ஆசிரியரும் அதிபருமான திரு. அம்பலவாணர் அவர்களைப்பற்றிச் சில குறிப்புகள் கூற மனம் துடிக்கிறது. நான் சிவாநந்த வித்தியாலயத்தில் படிக்கும்போது திரு. அம்பலவாணர் , திரு.வ. நல்லையா, திரு. முருகுப்பிள்ளை , பண்டிதர் வி.சீ. கந்தையா, திரு. க. கணபதிப்பிள்ளை, திரு.சி. கந்தசாமி, திரு. வி. திருநாவுக்கரசு, திரு. இரத்தினராஜா ஆகியோரிடம் பாடம் கேட்கும் வாய்ப்புக்கிடைத்தது. சர்வதேச ரீதியில் நோக்கும் போது இவர்கள் மிகச் சிறந்த ஆசிரியர்கள் என்று கூறலாம். இவர்களெல்லாம் அர்ப்பணிப்போடும் ஆர்வத்தோடும் அன்போடும் பணியாற்றியவர்கள். அதிபராய் இருந்த அம்பலவாணர் அதிபர் பதவியோடு முழு நேர ஆசிரியராகவும் அமைந்திருந்தார். இவரே கணிதம், பௌதீகம், இரசாயனம், ஆகிய பாடங்களையும் கற்பித்தார். இவரது சிறந்த கல்வித் தராதரத்தினாலும் கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றைக் கற்பிக்கும் திறமையினாலும் 1946 இல் சிவானந்த வித்தியாலயம் விஞ்ஞானம் கற்கும் முதல்தரப் பாடசாலையாக அங்கீகரிக்கப் பட்டது. கிழக்கிலங்கையில் இதுவே முதலாவது முதல்தர அந்தஸ்த்தைப் பெற்ற பாடசாலையாகும். கிழக்கிலங்கையில் அம்பலவாணர்தான் முதலாவது முதல்தர அதிபர் நியமனம் பெற்றவர். அப்போது பௌதீகம், இரசாயனம், உயிரியல், உயர்கணிதம், விசேடகணிதம், வர்த்தக கணிதம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களோடு கலைத்துறைப் பாடங்களும் சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திர வகுப்பில் கற்பிக்கப்பட்டன. உயர்கணிதம், வர்த்தக கணிதம் ஆகிய பாடங்களுக்கு நான் மாத்திரமே மாணவனாக இருந்தமையாலும் அம்பலவாணருக்கு பாடசாலை நேரத்தில் மற்றைய பாடங்களைக்

கற்பிக்கவேண்டி இருந்தமையாலும் எனது வகுப்பு அவரது வீட்டில் மாலை 5 மணிமுதல் நடைபெற்றது. தேநீருடன் வகுப்பு ஆரம்பமாகியது. சிவாநந்தா உயர் கணிதம், விசேட கணிதம், வர்த்தக கணிதம் ஆகிய பாடங்களோடு விஞ்ஞானப் பாடங்களையும் மாணவர்கள் 1947இல் நடந்த சிரேஷ்ட பாடசாலைத் தராதரத் பத்திரப் பரீட்சையில் தோற்றுவதற்கு வழிசெய்தது. இப் பாடங்களில் மாணவர்கள் சித்தியடைந்தார்கள். சிவானந்தாவுக்குப் பெருமைதேடிக் கொடுத்தார்கள். அதிபர் அம்பலவாணர், அவரோடு பணியாற்றிய ஆசிரியர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்புக்கும் மாணவர் மையமான கல்விப் பணிக்கும் சிறந்த கற்பித்தலுக்கும் இது சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த அர்ப்பணிப்பும் அன்பும் நிறைந்த சூழலில் உருவானவர்கள்தான் சாதனையாளர் கணக்காளர். திரு.கர்ணலிங்கம், ஐக்கிய நாடுகள் சபை ஆலோசகராய் பணியாற்றிய புள்ளிவிபர நிபுணர் திரு. கு. தருமரத்தினம், புகழ் பெற்ற அரசியல்வாதி ஜனாப் அப்துல் மஜீத், பரீட்சைத் திணைக்கள அத்தியட்சகராகப் பணியாற்றிய திரு.வி.சதாசிவம், பேராசிரியர் ப.சந்திரசேகரம், இங்கிலாந்து உயர்ஸ்தானிகராய்ப் பணியாற்றிய திரு. தட்சணாமூர்த்தி, பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் பாலசுந்தரம், கலாநிதி சிவபாதம், கணக்காளர் மாணிக்கவாசகர் ஆகியோர்.

திரு. அம்பலவாணர் மட்டக்களப்பு சிவாநந்தவித்தியாலயத்தில் இருந்து 1954இல் திருகோணமலை இந்துக்கல்லூரியில் பணியாற்றச் சென்றார். அவரின் அழைப்பின் நிமித்தம் நானும் 1956இல் அங்கு பணியாற்றச் சென்றேன். இது தொடர்பாக திருகோணமலை இந்துக் கல்லூரி முன்னாள் மாணவரும் கவிஞருமான பேராசிரியர் சி . சிவசேகரம் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார். “திருகோணமலை இந்துக் கல்லூரியை உய்விக்க வந்த அம்பலவாணர் அவர்கள் 1954 முதல் ஆற்றிய பணி அளப்பரியது. அப்பணிக்கு உறுதுணையாய் இருந்த ஆசிரியர்களில் கோணேசபிள்ளை அவர்கட்குச் சிறப்பான இடமுண்டு” (‘செங்கதிர்’ வீச்சு 50, பக்.56)

பாடசாலை நிர்வாக முறை மாற்றமடைந்தாலும், அர்ப்பணிப்யோடு பயன் கருதாது பணியாற்றும் அதிபர்கள் தற்போதும் பணியாற்றுகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதே. இவர்களைப் போன்றவர்களின் நற்பணியால் தமது கல்விச் செயற்பாடு முன்னேற வாய்ப்புண்டு என நம்பலாம்.

பட்டிருப்புக் கல்வி வலயத்தில் உள்ள வெல்லாவெளியில் கலைமகள் மகா வித்தியாலயம் அமைந்துள்ளது. எந்த அடிப்படை வசதிகளும் இல்லாது சிரமத்தோடு இயங்கிய இவ் வித்தியாலயத்தை வசதிகள் பல அமைந்ததும் சிறப்பான கல்விச் சூழல் மலர்ந்து மிளிரும் மகாவித்தியாலயமாக்கிய பெருமை இதன் அதிபராக 17ஆண்டுகள் அர்ப்பணிப்போடு பணியாற்றிவரும் திரு.த.விவேகாநந்தன் அவர்களைச் சேரும். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்துப் புவியில் சிறப்புப் பட்டதாரியாவார். பாடசாலை அதிபராக மாத்திரமல்லாது தன்மக்களை சான்றோராக்கும் தந்தையாகவும் விளங்குகிறார் என்பதும் வியந்து பாராட்டப்படல் வேண்டியதே. இவரது மூத்தமகன் பல்கலைக்கழகத்தில் வைத்தியக் கல்வி பெறுகிறார். இரண்டாவது மகன் பல்கலைக்கழகத்தில் பொறியியற் கல்வி பெறுகிறார். மூன்றாவது மகன் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் ஒன்பது “ஏ” க்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மண்டூர் 39 இல் சிறிய ஆரம்பப் பாடசாலை அமைந்துள்ளது. இந்தப் பாடசாலை அமைந்துள்ள சமுகத்தைப் பாடசாலையோடு இணைத்து அவர்களின் ஒத்துழைப்பையும் பாடசாலையில் தன்னோடு பணியாற்றும் ஆசிரியர்களின் அன்பையும் ஒத்துழைப்பையும் மாணவர்களின் ஆதரவையும் பெற்று இப் பாடசாலையை ஒரு அற்புதக் கல்வி நிலையமாக மாற்றி அர்ப்பணிப்போடு பணியாற்றிவருகிறார் இதன் அதிபர் திரு.ரி.சபேசன். அன்பினாலும் ஆதரவாலும் மாணவர் நடத்தையை வழிப்படுத்தலாம் என்பதற்கு இந்தப் பாடசாலையின் கட்டொழுங்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சம்மாந்துறைக் கல்வி வலயத்தில் வேப்பையடி என்னும் பகுதியில் கலைமகள் வித்தியாலயம் அமைந்துள்ளது. மண்டூரில் இருந்து கல்முனைக்குப் போகும் பாதையில் சகலரையும் கவரும் சுவர்ச் சித்திரங்களோடு சிறப்பாக அமைந்துள்ளது இந்தப் பாடசாலை. பாடசாலைச் சமுகம், மாணவர்கள், ஆசிரியர்கள், பிரதிஅதிபர், அதிபர், நிர்வாகம், தொண்டர் நிறுவனங்கள் ஆகியன ஒன்றிணைந்தால் கல்விப் பணியைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லலாம் என்னும் குறிக்கோளோடு பணியாற்றுவர்தான் இதன் அதிபர் திரு.எஸ்.பாலசிங்கம். இவர் அதிபராகவும் ஆசிரியராகவும் அர்ப்பணிப்போடு பணியாற்றி குறுகிய காலத்துக்குள் சாதனைபடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மாத்திரமல்ல பாராட்டப்பட வேண்டியதுமாகும். ஆங்கிலத்தில் (principal is a leader among equals) என்றொரு கூற்று உண்டு. அதாவது அதிபர் என்பவர் சமனானவர்களின் தலைவர் என்பதாகும். இந்தக் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் திரு.பாலசிங்கம் அவர்கள். சகல ஆசிரியர்களையும் சமனாக மதித்து அவர்களின் உச்ச திறமையைப் பயன்படுத்துவதில் இவர் கை தேர்ந்தவர். இவருக்குப் பக்கபலமாக இருப்பது உணர்வோடும் உற்சாகத்தோடும் பணியாற்றும் இப் பாடசாலையின் பிரதி அதிபர். இந்தப் பாடசாலையின் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கட்டொழுங்குக்கு ஒரு உதாரணத்தைக் கூறலாம். இங்குள்ள மாமரங்கள் காய்த்துக் குலுங்கும். ஆனால் ஒருவரும் இந்த மாங்காய்களைப் பறிக்க மாட்டார்கள். இவ்வாறு ஆச்சரியப்படக்கூடிய கட்டொழுங்கோடு இப்பாடசாலை இயங்குகிறது.

சம்மாந்துறைக் கல்வி வலயத்தில் நாவிதன்வெளி – அன்னமலை மகா வித்தியாலயம் அமைந்துள்ளது. இதன் அதிபராக திரு. என் . பிரபாகரன் அவர்கள் அர்ப்பணிப்போடு பணியாற்றுகின்றார். இங்கு மாணவர், ஆசிரியர், பிரதி அதிபர், ஆகியோர் இணைந்து கல்விச் செயற்பாட்டை மேம்படுத்தச் செயற்படுவது வியக்கத்தக்கது. சுமார் 500 மாணவர் கல்வி கற்கும் இம் மகாவித்தியாலயத்தில் மாணவர் கட்டொழுங்கும் அவர்களின் தலைமைத்துவச் செயற்பாடுகளும் வியக்கத்தக்கவை. மாணவர் விருத்தியே இலட்சியமாகக் கொண்டு செயற்படும் அதிபர், அவரோடு இணைந்து செயற்படும் பிரதிஅதிபர் ஆசிரியர்கள் ஆகியோரின் உழைப்பின் பயன் பரீட்சைப் பெறுபேறுகளிலும் பிரதிபலிப்பது பாராட்டுக்குரியதே.

இவ்வாறு ஆர்வத்தோடும் அர்ப்பணிப்போடும் பணியாற்றும் அதிபர்களும் பிரதி அதிபர்களும் ஆசிரியர்களும் நமது நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்து வருகிறார்கள். இவர்களை மேலும் ஊக்கப்படுத்தி அவர்களின் உச்ச பயனைப் பெறுவதற்கு சமுகமும் நிர்வாகமும் மேலும் முயற்சி எடுப்பது நல்ல பயனைக் கொடுக்கும்.

# ‘பாரதிதாசன்கள்’ வேண்டும்!

பாரதிதாசன் போலும்
பாவலர் கூட்டமொன்று
ஊர் தனில் தோன்ற வேண்டும்.
உயிரெனத் தமிழை எண்ணி
காரது தோற்கும் வண்ணம்
கவிமழை பொழிய வேண்டும்.
பாரது அதனைக் கண்டு
பக்தியாய் வணங்க வேண்டும்!

கவியது ஒலிக்கக் கேட்டு
காலனும் அமைதியாவான்.
அவியது உண்ணும் தேவர்
ஆனந்தக் கடலில் ஆழ்வார்
செவியது இனிக்கும் அந்தச்
செந்தமிழ்த் தேனை உண்டு
தவிசதன் மன்னன் தானும்
தமிழனாய் மாற்றம் கொள்வான்.

மரபெனும் வழியில் நின்று
மாதாளம் தமிழை நாளும்
பரவுதல் கடனே யாகும்.
பாரதி தாசன் போல!
உறவது போலும் வேறு
ஒன்றுண்டோ தமிழினோடு?
சிறகது விரிக்கச் செய்யும்
செந்தமிழ் வாழ்க! வாழ்க!

பாரதி தாசன் தன்னைப்
படித்தவர்; அவனைப் போல
ஓர்கவி யரசைக் காணார்
உதவாத மடமை மீது
போரவன் தொடுத்தாற் போல
புலவர்யார் செய்தார் இன்று?
ஊர்தன்னைத் திருத்தாப் பாட்டு
உயிரில்லாச் சடமேயாகும்!

பழந்தமிழ் மொழியை நாமும்
பாங்குறப் படித்தல் வேண்டும்.
அளந்திட யாரும் இல்லை
அதன் ஒரு சொல்லைத் தானும்
வளந்தனைக் கூறலாமோ?
வானமும் சிறிதேயாகும்!
உளந்தனில் பதித்துக் கொள்க.
உயிரது தமிழர்க்கென்றும்!


மரபதன் சுவையைப் போல
மற்றொரு படைப்பில் இல்லை
தரமிலா எழுத்தினாலே
தமிழ்மொழி வளருமாமோ?
வரமென விளங்குமந்த
மாபெரும் கவிஞன் பாட்டு
கரமது குவிப்போம் எங்கள்
கவிப்பே ரரசன் வாழ்க!



- வாகரை வாணன்

சிறுகதை

# புதிர்



**(இன்று பழைய சம்பிரதாயங்கள், கலாசாரம் பேணுகின்ற சடங்குகள் அருகிப்போய் மறையும் நிலைக்கு வந்துவிட்டது. அன்றைய 'புதிர்' சாப்பிடும் பொற்காலத்தை ஒரு தரம் நினைத்துப் பார்த்தேன். அதன் மகிமைகளையும், விருந்தோம்பல் பண்பாட்டையும் நாம் தொலைத்துவிட்டுத் தேடுகிறகாலம் வந்துவிடுமோ? என்ற தணியாத ஏக்கத்தினால் இந்தச் சிறுகதையை எழுதுகிறேன். பட்டணத்தில் வாழும் இயந்திரத்தனமான வாழ்க்கை வாழுகின்ற எம் தமிழர்கள் இதை மறந்தாலும் நமது தமிழ்க் கிராமங்களும், மட்டக்களப்புப் படுவான்கரையும் அந்தச் சம்பிரதாயச் சடங்குகளிலிருந்து நழுவிப் போகாமல் இன்றும் விருந்தோம்பலுக்கு முக்கியத்துவம் அளிப்ப தனால் நாம் மனத்திருப்தியோடு ஆறுதல் அடையமுடிகிறது.)**

**- ஆரையம்பதி ஆ.தங்கராசா**



"தம்பி நம்மிட மாமியவையும் நெற்கதிர் எடுத்து நாளுக்குப் 'புதிர்' எடுத்து ஊட்டுக்குள்ள வெச்சித்தாங்களாம். நாமளும் நல்ல நாள் பாத்து 'புதிர்'எடுக்கவேணும் மகன். அப்பா எங்கடா! அவர்தான் 'புதிர்' எடுக்கிற விஷயங்களுக்கு முன்னுக்கு நிக்கிறவர்."

"அப்பா ஆத்தோரம் நிக்கிற இளந்தென்னங் கண்டில, துறட்டியால பழுத்த தேங்காய்கள ஆயிறார் அம்ம."

"சரி மகன்! தேங்காய்கள அவர் ஆஞ்சி வந்ததும் 'புதிர்' எடுக்கிற வேலையப்பாருங்க. வெள்ளாம வெட்டத் துவங்கித்தானுகள். இனி புது அரிசி வந்திடும். சிவன்ராத்திரி கழிச்சு நாமளும் நல்லநாளாப் பாத்து 'புதிர்' தின்னவேணும்."

"சரி அம்ம. அப்பா தேங்காஞ்சி வந்ததும் 'புதிர்' எடுக்கிற வேலையப் பார்க்கச் சொல்றன்."

"இன்டைக்கு வெள்ளிக்கிழமையும் நல்ல நாளுமாகக் கிடக்கு. எப்படியாவது கதிர் எடுத்து 'புதிர' ஊட்டுக்க கொண்டு வெய்க்க வேணும்." என்று கூறியவாறு தாய் தங்கமணி மண்டபத்துக்குள் புகுந்து கொள்ள; கடைசி மகன் உயர்தர வகுப்பில் படிக்கும் தனஞ்சயன் ஆற்றங்கரையோரம் தேங்காய் ஆயும் தகப்பன் சாமித்தம்பி வாத்தியாரை நாடிச் செல்லுகிறான்.

சாமித்தம்பி வாத்தியார் 'சைக்கிளி'லபோய் மண்முனைத்துறைக்குப் போற வழியில; பிஞ்சும் காயுமாக வெளிறிய மஞ்சள் நிறத்தில் வேளாண்மை

வயலுக்குள்ள 'கொலு' கொண்டு கிடந்த நெற்கதிர்களில் கைகொள்ளத் தக்கவாறு பிடுங்கிக் கொண்டு வீட்டுக்கு 'கேற்'றடிக்கு வந்து "டேய் தம்பி! உள்ஊட்டுக்க தேங்கா எண்ண விளக்கக் கொழுத்திப்போட்டு, புதுப் பொட்டியில போனவருஷம் புதிர் எடுத்த கதிரில நாலஞ்சப் போட்டுத்து, வெள்ளச்சீலத்துண்டால மூடித்து அம்மாவப் பொட்டிய எடுத்துவரச் சொல்லு" என்றார்.

புருசனாரின் அன்புக்கட்டளையைக் காதிலே வாங்கிக் கொண்டு, சகலதையும் ஆயத்தமாகச் சாமி ஊட்டுக்குள்ள வைத்தவாறு புதுப் பெட்டியோடு 'கேற்'றடிக்குப் பொஞ்சாதி தங்கமணிவர, சாமித்தம்பி வாத்தியார் மனைவி கொண்டுவந்த புதுப் பெட்டிக்குள் வயலுக்குள் எடுத்து வந்த புதுக்கற்றைகளைப் பக்குவமாய் வைக்க, தங்கமணி ஆனந்தம் முகத்தில் கொப்பளிக்க கோவில் 'கும்பம்' எடுத்துப்போறவர்களின் பக்தி உணர்வோடு ஆடாமல் அசையாமல் தெய்வீக உணர்வோடு போவதுபோல் உள்வீட்டுக்குள் சென்று தேங்காய் எண்ணெய் விளக்கின் சுடர் ஒளியில் 'புதிர்'ப் பெட்டியை வைத்தவாறு மூன்றுமுறை 'தோப்புக்கரணம்' போட்டுக் கும்பிட்டுவிட்டு வெளிமண்டபத்துக்குவர சாமித்தம்பி வாத்தியாரும் பொஞ்சாதியை வைத்தகண் வாங்காமல் பார்த்துவிட்டுச் சாமி அறைக்குள் புகுந்து கொள்ளுகிறார்.

படுவான்கரைப் பக்கம் வேளாண்மை வெட்டத்துவங்கிவிட்டார்கள். ஊரெல்லாம் படுவான்கரைப் பெண்கள் புதுஅரிசிச் சாக்கோடு பவனிவரத் தொடங்கிவிட்டார்கள். சிவராத்திரி வந்து போனதும் நல்ல நாளாய்ப் பார்த்துப் 'புதிர்' சாப்பிடவேண்டுமென்று சாமித்தம்பி வாத்தியார் நினைத்துக் கொள்ளுகிறார். இப்பொழுதெல்லாம் 'புதிர்' தின்னும் விருந்தோம்பல் சம்பிரதாயம் அருகிப்போய் விட்டது. பழசு, புதிசு என்று பார்த்துச் சாப்பிடும் நிலமை மறந்துபோன பழங்கதையாகிவிட்டது. காசிருந்தால் அரிசிக் கடைகளில் அரிசி மூட்டையை எடுத்து வந்தால் சோறுதான் என்ற நடைமுறை இந்த நவீனமான அவசரகால வாழ்க்கையிலே கருக்கொண்டு கிடக்கிறது. 'புதிர்' என்றால் என்னவென்று புரியாத சமுதாயமொன்று உருவாகிவிட்டது. ஒருசிலர் சம்பிரதாய கலாசார உணர்வுகளில் ஊறித் திளைத்தவர்கள் பழசை ஒதுக்கிவிடாமல் வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கும் மரபுரீதியான சம்பிரதாய சடங்குமுறைகளுக்கு மதிப்புக் கொடுத்து அதனை வாழ்க்கையிலும் கடைப்பிடித்துக் கொண்டு வருகின்றார்கள். சாமித்தம்பி வாத்தியாரும் இன்னுமொரு சிலரும் 'புதிர்' சாப்பிடும் விருந்தோம்பல் கலையை ஒதுக்கிச் சமாதிகட்டிவிடாமல் இன்றும் அவைகளை முறையாக நடத்திக் கொண்டுவருகிறார்கள். ஆனால் ஊரிலுள்ள பலபேர் 'புதிர்' சாப்பிடும் விருந்தோம்பலை முற்றாக மறந்தாலும் கோவில்களுக்கு 'புதிர்' சாப்பிடும் ஞாபகார்த்தத்துக்காக 'பூசைப்பெட்டி' கொடுத்து பழசை மறக்காமல் காலத்தை ஓட்டிவருவதை ஊரை அவதானிப் போரால் புரிந்துகொள்ளமுடியும். நகரத்தில் வாழும் தமிழர்கள் இதனை மறந்தாலும் மட்டக்களப்பு கிராமப்புறங்களிலும் படுவான்கரைப் பகுதிகளிலும் புதிர் சாப்பிடும் விருந்தோம்பல் இன்றுவரை தொலைந்து போகவில்லை.

சாமித்தம்பி வாத்தியார் சிறுவனாக இருந்த காலத்தில் 'புதிர்' சாப்பிடும் விருந்தோம்பல் சடங்கை ஒரு தரம் நினைத்துப்பார்த்துக் கொள்ளுகிறார்.. "அடடா! அந்தக்காலந்தான் எவ்வளவு எழுச்சியான சம்பிரதாயபூர்வமான சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த பொற்காலம். மழைகாலமான மார்கழி மாதம் ஓடிப்போக "தைபிறந்தால் வழிபிறக்கும்" என்ற நம்பிக்கையின் சின்னமான தைமாதமும் பிறந்துவிடும். விதைத்த வேளாண்மை அறுவடைகாணும் இந்த இனியகாலத்தில் புது அரிசியும் புழக்கத்துக்கு வந்துவிடும். பழைய அரிசி முடிந்தால் எப்படியாவது 'புதிர்' சாப்பிடுவதற்கு புது அரிசிவாங்கும் நிகழ்வு ஊரெல்லாம் இனிய தென்றலாக உலாவந்துவிடும். 'புதிர்' சாப்பிடப்போகிறோமென்று நினைத்தாலே சாமித்தம்பி போன்ற சிறு பொடியனுகளுக்கு வருஷம் பிறந்ததுபோல் ஒரே கொண்டாட்டம்தான். எப்ப 'புதிர்' சாப்பிடுவார்கள்! எப்ப 'புதிர்' சாப்பிடுவார்கள் என்ற தணியாத ஏக்கத்தில் சாமித்தம்பியும், அவனது கூட்டாளிமாரும் பலவிதமான விளையாட்டுகளில் காலத்தைக் கடத்துவார்கள். சாமித்தம்பியின் தாய் மாமாவான செல்லத்துரைக்குச் செண்பகம் என்ற பெயருடைய ஒரு மகள் இருந்தாள். அவள் சாமித்தம்பியைவிட மூன்று வயது இளையவள். மின்மினிப் பூச்சியைப் போலக் கண்களைச் சிமிட்டி வண்ணாத்திப் பூச்சியைப்போல ஓடித்திரிவாள். பொம்மை போன்ற கவர்ச்சிகரமான - எவரையும் ஒரு தரம் நிமிர்ந்து பார்க்க வைக்கும் அழகான சிலை போன்ற பெண் அவள். மச்சான் சாமித்தம்பியோடுதான் எந்த நேரமும் ஒட்டிக் கொண்டு திரிவாள். செண்பகத்தின் கூட்டாளிச் சிறுமிகளான அன்னம், சின்னது, உமையாத்த, பொட்டுப்புள்ள போன்றவர்களும் சாமித்தம்பியோடும் அவனது கூட்டாளிப் பொடியன்மாரோடும்தான் விளையாட வருவார்கள். சாமித்தம்பிக்கு அப்போது பன்னிரண்டு வயது. மச்சாள் செண்பகத்துக்கும் அவளது கூட்டாளிப் பொடிச்சிகளுக்கும் பத்துக்கும் ஒன்பதுக்கும் இடைப்பட்ட வயதாயிருந்தது. சொண்டு சிவந்து மதமதப்பாக வளர்ந்து கூவத்துடிக்கும் இளம் கன்னிச்சேவல் போல் வளர்ந்துவரும் பருவம் அந்தப் பெண் குட்டிகளுக்கு. சாமித்தம்பியோடும் அவனது கூட்டாளிமார்களுடனும் எந்த நேரமும் விளையாடி விளையாடி கூச்சமென்பதே அந்தச் சிறிய பொடிச்சிகளுக்கு மருந்துக்கும் இல்லாமல் போய்விட்டது.

அந்த ஊரின் மத்தியிலேயிருக்கும் 'மாரிர திட்டியில்' ஒரு ஒதுக்குப் புறமாக வெள்ளெருக்கு, தகர, கார, முடிதும்பை, மஞ்சனாமரம், வாகை, பூவரசு போன்ற செடிகளும் மரங்களும் நிறைந்து பொலிந்து மறைப்பாக இருட்டுப்பகுதியாக வளர்ந்துகிடக்கும் இடத்திலே, வண்ணாத்திப் பூச்சிகள் தகரப் பற்றைகளிலும் முடிதும்பை மரங்களிலும் இறக்கை விரித்து வர்ணப்பூக்களாகப் படிந்து கிடக்கும். அந்த வண்ணாத்திப்பூச்சிகளைப் பிடித்து வெள்ளை நூலிலே கட்டி விளையாடுவதற்காகச் சாமித்தம்பியும் கூட்டாளிமாரும் பறந்து வருவார்கள். பம்பரம்போல் ஓடி ஓடி வண்ணாத்திப் பூச்சிகளைப் பிடிப்பதில் சாமித்தம்பி கைதேர்ந்தவன். மச்சாள் செண்பகம் "எனக்கும் பிடித்துத்தாடா! எனக்கும் பிடித்துத்தாடா!" என்று சத்தம்போட்டுக்

கத்தியவாறு சாமித்தம்பியைப் பின்தொடர அவனும் அவளுக்கு வண்ணாத்திப்பூச்சியை லாவகமாக இறக்கைகள் பிய்ந்து போகாமல் பிடித்துக் கொடுப்பான். வண்ணாத்திப்பூச்சிகளைப் பிடிக்கும்போதே 'புதிர்' சாப்பிடும்காலம் நெருங்கிவிட்டதை ஒரு தரம் நினைத்துப் பார்த்துச் சாமித்தம்பி துள்ளிக் குதிக்க மற்றப் பொடியனுகளும் சிறு பொடிச்சிகளும் ஆரவாரமாகச் சத்தம்போட்டுத் துள்ளிக்குதித்துக் கூத்தாடுவார்கள். வாகை மரக்கிளைகளில் இலைகளோடு இலையாக பதுங்கிக்கிடக்கும், தங்கநிறத்தை அப்பிவிட்டதுபோல் கோலம் காட்டும், தோல் உரிக்காத பாக்குப் பழமாகக் காட்சிதரும் 'பொன் வண்டு'களை மெல்ல மெல்லக் காலடி ஓசை எழும்பாத வண்ணம் கைகளிலே பொத்திப்பிடிக்கும்போது அவர்களது காலடியில் சொர்க்க வாசல் திறந்துவிட்டது போலிருக்கும்.

தகரப்பற்றைகளுக்குள் மண்ணிலே புதையுண்டுகிடக்கும் 'வெட்டுக்கிளி' களைத் தோண்டி எடுப்பதற்குச் சாமித்தம்பி பற்றைகளை விலக்கிச் சூத்து அரைபடப் பதுங்கிப் போகும் பொழுது மற்றவர்கள் வேடிக்கையாக வெளியே நின்று பார்த்துக் கொண்டிருக்க, பேசாமல் தகரப்பற்றைக்குள் மறைந்து மறைந்து செண்பகமும் சாமித்தம்பி 'வெட்டுக்கிளி'களைத் தோண்டி எடுக்கும்போது அவனுக்குப் பக்கத்திலே சம்மாணம் கொட்டி இருந்துவிடுவாள். 'வெட்டுக்கிளி'களை மெதுவாகத் தோண்டி எடுத்துக் கைகளால் சாதுரியமாகப் பொத்தி எடுக்கும் அற்புத வேளையில் கூட 'புதிர்' சாப்பிடப் போகிறோம் என்ற தேன்வதையைப் பிழிந்து வாயில் ஊற்றும் இன்பநினைவே நெஞ்சில் ஓவியம் தீட்டும். பிடித்த வெட்டுக் கிளிகளைக் கைகளிலே பொத்திப் பிடித்தவாறு பார்க்கும்பொழுது செண்பகம் ரகசியமாக வந்து சம்மாணம் கொட்டிச் சிரித்த முகத்துடன் தனக்கருகில் இருப்பதைக் கண்டுவிடுவான் சாமித்தம்பி. செண்பகத்தின் அழகு 'செங்காந்தள்' பூவாக விரிந்தாட அவனது மனதுக்குள்ளே 'கிறுக்கூஞ்சல்' வேகத்தில் ஏதோ சொல்லமுடியாத அபரிதமான உணர்வு நரம்புபின்னி மேனியெல்லாம் மின்சாரம் பாய்ச்ச அவளது பிஞ்சு உடலை இறுக அணைத்து அவளது முல்லை மொட்டுப்போல் குவிந்து கிடக்கும் இளமை மார்புகளைக் கையினால் திருகும்போது அவளது கண்கள் கொவ்வைப் பழங்களாகச் சிவக்க "உடுடா! நோகுது" என்று மச்சாள் செல்லக் கோபம் காட்ட, கமுகம்பாளை விரிந்து கிடப்பதுபோல் அவளது அழகிய கூந்தல் குலைந்து பரவிக்கிடக்க மீண்டும் அவளது சிறு குரும்பட்டியாகத் தள்ளிநிற்கும் இளம் முலைகளைக் கைகளால் ஆவேசமாகத் திருகும்போது, "போடா! நாயே! வம்புப்பழக்கம் செய்யிற உன்னோட இனிமேல் பேசமாட்டன் நான்" என்று சிணுங்கிச் சிணுங்கிக் கத்திக் கோபங்காட்டிச் சிலிர்ப்பிக் கொண்டு கன்னிச் சேவலாகத் துள்ளி வெளியே ஓடும்மச்சாள் செண்பகத்தைப் பயம் ஈரல் குலையை ஆட்டுவதுபோல் பேய் அறைந்தவன் போல் பார்த்து நிற்பான். அவனுக்குப் பயம் வந்து ஆட்டிஅலைக்களிக்க என்ன செய்வதென்று தெரியாமல் சிலையாக நிற்பான். இந்தப் புதினம் ஒன்றும் தெரியாத கூட்டாளிமார்கள் வெளியே அவன் வருகைக்காகக் காத்துக்கொண்டு நிற்பார்கள்.

தான் செய்த 'வம்பு விளையாட்டை' மாமாவிடம் சொல்லிவிட்டால் பிறகு அப்பா கமுகமரத்திலே கட்டிவைத்து உரி உரி என்று உரிப்பார். உனக்கு இந்த வயதில பொண் தேவப்படுதிரா எண்டு மாட்டுக்கு மரைக்கு அடிக்கிறதுபோல அடிப்பார். சாமித்தம்பி பயத்தால் எதையெல்லாமோ நினைத்து ஏங்கி நிற்பான். ஆனால் வெளியே ஓடிப்போன மச்சாள் செண்பகமோ ஒருவித சலனமும் இல்லாத முகத்தோடு திரும்பவும் அவனருகில் வந்து "தாடா! வெட்டுக்கிளிய" என்று கொடுப்புக்குள் சிரித்தவாறு கேட்க, சாமித்தம்பிக்குப் பயமெல்லாம் ஒரே வேகத்தில் ஓடிப்போக, மச்சாளிடம் தான் பிடித்த வெட்டுக்கிளியைக் கொடுத்து மெதுவாக அவளது பொன் வண்ண நிறமான கைகளைக் கிள்ள செண்பகமும் வெட்டுக்கிளியோடு புன்னகை சிந்தியவாறு தாவித்தாவி ஓடித்திரிவாள். வெட்டுக்கிளியை பிடிப்பதும், பொன்வண்டுகளைப் பிடித்துப் பவித்திரமாகக் கொண்டு ஆனந்தக் கூத்தாடுவதும், வண்ணாத்திப் பூச்சிகளைப் பிடித்து நூலிலே கட்டி ஓடி ஓடி விளையாடித்திரிவதும் சில்லுக்கட்டை விளையாடுவதும், வார்த்தட்டு அடிப்பதும், கிறுக்கூஞ்சல் செய்து ஊஞ்சல் ஆடுவதும், படிக்கல் கொண்டு முந்திரியம் கொட்டை அடித்து விளையாடுவதும், களிமண்ணைப் பிசைந்து உருவங்கள் செய்து சிறுகோவில்கட்டி விளையாடுவதும். தென்னைமரத்துக் குரும்பட்டிகளைப் பொறுக்கி எடுத்து அழகான சிறு தேர்களைக் கட்டி ஆற்றில கொண்டு அந்தக் குரும்பட்டித் தேரை போட்டுத் தேரை ஆற்றுநீரிலே எறிந்து நீந்தி நீந்தி ஆற்றிலே கும்மாளம் கொட்டுவதும், பொஞ்சாதி, புருஷன், புள்ளையள், பொலிஸ், விதான என்று விளையாடி இலைகளையும், குரும்பட்டிகளையும், பூக்களையும் மண்ணையும் கொண்டு சோறு கறியாக்கி விளையாடுவதும், வெள்ளமாய் ஓடும் ஆற்றிலே கடதாசிக்கப்பல் செய்து அதிலே விட்டு ஆனந்தப்பள்ளுப் பாடுவதும், தெய்வம் ஆடிக் கட்டுச் சொல்லி வேப்ப இலைக் கொத்துகளைக் கொண்டு ஆடுவதும், 'புதிர்' தின்னும் காலங்களில் சாமித்தம்பியும் கூட்டாளிமாரும் இப்படியான மரபுரீதியான மண்வாசனை வீசும் விளையாட்டுக்களை விளையாடிப் புதிர்ச் சாப்பாட்டுக்காக 'அர்ச்சுனதவம்' செய்து கிடப்பார்கள்.

'புதிர்' தின்னும் காலம் நெருங்கிவர சாமித்தம்பியின் அப்பா மார்க்கண்டு 'புதிர்' ஆக்குவதற்குக் காட்டிலே கொள்ளிகள் எடுப்பதற்காகத் தனது சிறு வள்ளம் போல் காட்சிதரும் காட்டுமா மரத்துத் தோணியைக் கட்டிக் கொண்டு ஆற்றில் தீவாக விளங்கும் 'இறக்கத்து வாசல்' காட்டுக்குப் போக எத்தனிக்கும்போது அவருக்கு உதவியாக மகன் சாமித்தம்பியும் கோடாலியையும், பெரிய வெட்டுக்கத்தியையும் எடுத்துக்கொண்டு 'அணியப்பலகை'யில் ஏறிக்குந்திக் கொள்ள, "நானும் வாறன் என்னையும் கூட்டித்துப் போங்க." என்று சத்தம் போட்டுக் கத்தியவாறு ஓடி வருகிறாள் செண்பகம். "போடி! மூதேசி. கொள்ளிவெட்ட பொம்புளப்பிள்ளயள காட்டுக்குக் கூட்டிப்போறல்ல. உண்ட அப்பன் எங்களுக்குத்தான் ஏசுவான். பேசாம மாமியோடபோய் இரு." என்று சாமித்தம்பியின் அப்பா மார்க்கண்டர் சினத்துடன் கூற; "இல்ல நானும் வரப்போறன். நானும் வரப்போறன். அப்பாதான் போகச் சொன்ன" என்று பொய் கூறி பெரிய சத்தமாக ஒப்பாரி வைத்துக்கத்த "சரி அவளக் கூட்டித்துப்போங்க. அண்ணன் வந்து

கேட்டா நான் சொல்லிக்குவன்'' என்று சாமித்தம்பியின் அம்மா தங்கமணி செண்பகத்துக்குப் பரிந்து பேச, "ஆண் தோற! காட்டில வெச்சுக் கஸ்ரப்படுத்தினா காட்டுக்குள்ள பேய் புடிக்க உட்டுப்போட்டு தோணியத் தள்ளித்து வந்திடுவன்'' என்று மாமா மார்க்கண்டர் பயங்காட்டிப்பேசிவிட்டு, செண்பகத்தையும் ஏற்றிக் கொண்டு, 'இறக்கத்துவாசல்' காட்டை நோக்கித் தோணியை வேகமாகத் தொடுத்தவாறு போகிறார்.

'இறக்கத்துவாசல்' தீவின் காடு கண்ணாமரங்களாலும் தில்லை மரங்களாலும் கிண்ணை மரங்களாலும் இன்னும் பெயர் தெரியாத பலபல காட்டுமரங்களாலும் அடர்ந்து பரந்து செறிந்து 'இருட்டுச் சாம்ராச்சியமாக' முல்லை என்று இலக்கணப்படுத்தப்பட்ட அந்தவனப் பகுதி விளங்கியது. முறுக்கேறிக் காய்ந்து போய்க்கிடக்கும் பட்ட மரங்களிலே மார்க்கண்டர் கொள்ளிகளை வெட்டி எடுக்க, பச்சையும் மஞ்சளுமாகக் கிளைகள் பெருத்த இலைகள் செறிந்த பெரும் பெரும் மரங்களிலே - தாவிப்பரந்து கிடக்கும் பற்றைக்காடுகளிலே விதம் விதமான பறவைகளும் பால் போன்ற வெண்நிறக் கொக்குகளும், கொச்சிப்பழம் போல் சிவந்த சொண்டுகளை உடைய கண்ணைப்பறிக்கும் பச்சை நிறக்கிளிகளும், விதம் விதமான புறாக்கூட்டங்களும், அழகிய கூடு கட்டிய தூக்கணாங் குருவிகளும் குடி கொண்டு குடும்பம் நடத்தும் அழகைக் கண்டு சாமித்தம்பியும், செண்பகமும் அடங்க முடியாத ஆனந்தக் கடலிலே நீச்சல் அடிப்பார்கள். அந்தக் காடெங்கும் பறவைகளின் ஓயாத இனங்கானமுடியாத சங்கீதச் சிதறல்கள், இரைச்சல்கள், அனுங்கல்கள், முனகல்கள் அப்பாடா! காதுகளில் முட்டி அடைத்துக் கொள்ள அழகிய பெருத்த முயல்கள் பளிங்குக் கண்களைக் காட்டியபடி குறுக்கும் மறுக்கும் ஓடுவதும் காட்டுக் கோழிகள் அழகாகத் தத்தித் தத்திப் பறப்பதும், தூரத்தே காட்டுப் பன்றிகளின் உறுமலும் அவர்களை வியப்பில் ஆழ்த்திவிடும். இருண்ட 'ஆபிரிக்கக் காட்டின்' பகுதிபோல் அந்தத் தீவு விளங்கியது.

மார்க்கண்டர் வெட்டி எடுத்த கொள்ளிகளைத் தோணியிலே பவித்திரமாக அடுக்கிவைத்துவிட்டு; நான்கு குஞ்சுப் பருவமான கொக்குக் குஞ்சுகளை மரக்கிளையிலிருந்து பிடித்துக்கொண்டு வந்து மரப்பட்டையை உரித்து கயிறாகத் திரித்துக் கொக்குக் குஞ்சுகளின் கால்களில் கட்டி மகன் சாமித்தம்பியிடம் கொடுத்துவிட்டுத் தோணியைத் தள்ளிக்கொண்டு சவளால் வேகமாகத் தொடுத்தவாறு ஊர்க்கரையை நோக்கிவர சாமித்தம்பியும், செண்பகமும் கொக்குக் குஞ்சுகள் கிடைத்த சந்தோசத்தில் ஊர்க்கரையை நோக்கிக் கண்களைப்பதித்தவாறு சிரித்துக்கொண்டுவர 'விரிச்சல்' ஆற்றிலே பலவகையான மீன் இனங்கள் துள்ளிக்குதித்துப் பாட்டம் பாட்டமாக ஓடித்திரிவதையும் ரசித்தவாறு தங்களை மறந்து ஆனந்த மயக்கதில் மூழ்கிக்கிடக்கையில், கொள்ளிளை ஏற்றிவந்த தோணி அவர்களது ஆற்றங்கரைக் 'கந்தக்குட்டி வளவு'க்கரையை அடைந்து விடும்.

சாமித்தம்பியின் அம்மா தங்கமணியும் ஓடிவந்து அவர்களோடு சேர்ந்து கொள்ளிகளை அள்ள, செண்பகமும் சாமித்தம்பியும் பிடிச்சுவந்த கொக்குக்

குஞ்சுகளோடு துள்ளிக்குதித்தவாறு வளவுக்குள் ஏற, மற்றக் கூட்டாளி மார்களும் கொக்குக் குஞ்சுகளைப் பார்க்க ஓடிவருவார்கள். 'புதிர்' தின்னப்போகும் இந்த ஆனந்தமான நாட்களில் கொக்குக் குஞ்சுகளும் கிடைத்தது அவர்களுக்குத் தங்கப் புதையல் கிடைத்தது போன்ற உற்சாகம் ஏற்பட அவர்களது கோமாளிக் கூத்துக்கள் ஆற்றங்கரைச் சுற்றாடலை அதிரவைக்கும்.

சாமித்தம்பியின் அப்பா மார்க்கண்டர் திறமையான மீன்பிடிகாரர். விதம் விதமான மீன்களைப்பிடித்துத் தளப்பமில்லாமல் குடும்பத்தை நடத்தியவர் அவர். கரையாக்கன்தீவு குமாரசாமிப்போடியாரும் கொத்தியாமலைத் தயிர்க்காறச் செம்பாப்போடியாரும் மார்க்கண்டரின் நெருங்கிய கூட்டாளி மாராகும். ஒவ்வொரு வருஷமும் 'புதிர்' சாப்பிடுவதற்குக் கரையாக்கன்தீவு குமாரசாமிப்போடியார் புதுநெல் மூட்டை ஒன்று கொண்டுவந்து கொடுப்பார். அதனைப் பக்குவமாக அவித்து சொந்தக்காரப் பொண்டுகளைக் கூட்டித்துவந்து உரலிலே குத்தி எடுத்துப் 'புதிர்' சாப்பிட ஆயத்த மாகுவார்கள். குமாரசாமிப் போடியார் புதுநெல்மூட்டையைத் தோணியிலே ஏற்றி வந்து கொடுத்துவிட்டு அவர்கள் 'புதிர்' சாப்பிடுவதற்குரிய சகல சாமான்களையும் காத்தான்குடிச் சந்தையிலே வாங்கிக்கொண்டு தங்கமணி தந்த 'கந்தக்குட்டி வளவு'க்குள் இறக்கிய இனிப்புக் கள்ளை வாங்கித் தாகம் தீரக்குடித்துவிட்டுப்போக; கொத்தியாமலைச் செம்பாப்போடியாரும் 'புதிர்' சாப்பிடுவதற்கான சுவையான எருமைத் தயிர்ப்பானைகளைக் கொடுத்து விட்டுத் தங்கமணி கொடுத்த 'வச்சிக்கள்'ளை ஒரு பிடி பிடித்வாறு தனது தோணியில் ஏறித் தனது ஊரான கொத்தியாமலைக்குப் புறப்பட மார்க்கண்டரின் வீடு 'புதிரு'க்கு ஆயத்தமாகும். மார்க்கண்டர் 'புதிர்' சாப்பிடுவதற்குப் 'பொரியலு'க்கு மீன்பிடிக்க மகன் சாமித்தம்பியையும் கூட்டிக் கொண்டு மண்முனை ஆற்றிலே நாலுவீச்சு வீசி ஐந்தாறு தரவளியான 'செங்கண மணலை'களைப் பிடித்தவாறு வீட்டுக்கு வர வளவுக்குள் உற்றார் உறவினர் உற்சாகமாக வேலை செய்வதும் பெரிய அண்டாப்பானையிலே சோறு ஆக்குவதும் தங்களது 'கந்தக்குட்டி வளவு'க்குள்ளே இறைச்சிப் பொலிவோடு மதமதத்து வளர்ந்து கிடந்த சதைப்பிடிப்பான மூன்று சேவல்களைப் பிடித்து உரித்து இறைச்சிக்குழம்பு வைப்பதும், பலவிதமான மரக்கறிகளை வெட்டிச் சுவைபட ஆக்குவதும், வீசிவந்த 'செங்கண மணலை'களை அறுத்து பொரியல், ஆணம், வைப்பதும் சொந்தக்காரக் குழந்தைகளும், மகன் சாமித்தம்பியும் மருமகள் செண்பகமும் கலகலப்பாக 'புதிர்' தின்னும் ஆவலில் பாட்டுப்பாடி கூத்தாடி மகிழ்வதும் அந்தக் 'கந்தட்டி வளவு' புதிர் சாப்பிடுவதற்காக புதுவருஷம் ;பிறந்து கொண்டாட்டம் நடத்துவது'போல் வார்த்தைகளால் அளந்து கூறமுடியாத ஆனந்தப்பிரவாகம் பிரளயமாக வெடித்துச்சிதற எங்கும் பூரிப்பு. எவர் முகத்திலும் அளவிட முடியாத பூரிப்பு.

'புதிர்' சாப்பிடச் சோறு, கறிகள், கூழ், பலகாரம், பொரியல் என்று எல்லாவற்றையும் பூரணமாகச் செய்து முடித்த பிறகு மார்க்கண்டர் கிணற்றடிக்குப் போய் முழுகித் தூய்மையாக வெள்ளை வேட்டியைக்

கட்டிக் கொண்டு உள்வீட்டுக்குள்ளே கிணற்றடியில் வெட்டி எடுத்த பெரிய தலைவாழை இலையோடு போய்ச் சாப்பாணி கொட்டி இருந்தவாறு பொஞ்சாதி தங்கமணியிடம், "சோத்துப்பானையையும் தூக்கித்து 'புதிர்' பினையிற சகலசாமான்களையும் எடுத்திற்று வா" என்று அன்புக்கட்டளை இட, பொஞ்சாதி தங்கமணி அண்ணன் பொஞ்சாதி பூபதி மச்சாளோடு சேர்ந்து சோத்துப்பானையைத் தூக்கிக் கொடுத்துவிட்டுத் தயிர்ப்பானை, பிழிந்து வெண்கலச் சட்டியில் ஊத்திவைத்திருந்த தேங்காய்ப்பால், சர்க்கரை, சீனி, கற்கண்டு, பனங்குட்டான், தேன், நெய், சகலவிதமான பழவகைகள், கூழ், பலகாரங்கள் என்று எல்லாவற்றையும் காலடியில் வைக்க, பெரிய ஆள் உயரத்தில் கம்பீரமாக நிற்கும் வெண்கலத் தேய்காய் எண்ணெய் விளக்கின் பகல் போல் வெளிச்சம் காட்டும் சுடர் ஒளியில் உள்வீட்டில் பெரிய தலைவாழை இலையைப் பக்குவமாகப் போட்டு வெண்கல அகப்பையால் சோற்றை எடுத்து இலையிலே அள்ளி அள்ளிக் குவித்து தேங்காய்ப்பாலை அதற்குள்ளே ஊற்றி அதற்குமேலே தயிர்ப்பானையைக் கொட்டி மெது மெதுவாகப் பினைந்தெடுத்து, பினையப்பினைய ருசி காட்டும் சாமான்களான கூழ், பலகாரங்கள், சகலவிதமான பழவகைகள், சீனி, சர்க்கரை, கற்கண்டு, உடைத்த பனங்குட்டான். தேன், நெய் என்று எல்லாவற்றையும் எங்கும் பரவலாக போட்டுக் கையால் லாவகமாகப் பினைந்து பினைந்து 'புதிர்' பினையும் கைங்கரியத்தை முடித்துவிட்டு, கையால் பினைந்த 'புதிரி'ல் கொஞ்சத்தை எடுத்து வெண்கலத் தேங்காய் எண்ணெய் விளக்குத் திரியிலே வைத்துவிட்டு எல்லோரையும் அழைத்து கற்பூரம் கொழுத்தி தேவாரம் பாடி முடித்துவிட்டு மனைவி, மகன், மனைவியின் அண்ணன், மச்சாள் பூபதி, மருமகள் செண்பகம், உறவினர் குழந்தைகள் என்று சகலருக்கும் பினைந்த புதிரைக் கொடுக்க அவர்கள் எல்லோரும் அவற்றைச் சந்தோசமாக வாங்கிச் சாப்பிட்டுவிட்டுக் கைகளைக் கழுவிக் கொண்டு 'புதிர்' சோறு சாப்பிட மண்டபத்துக்குள் போடப்பட்ட 'பன்பாயி'ல் இருந்துவிட குழந்தைகள் அமிர்தம்போல சுவைகாட்டும் பினைந்த 'புதிரை' வாங்கிச் சாப்பிட்டு நஞ்சுவேரின் சாறைக் குடித்த 'பொட்டியான்' மீன்கள் போல கண்கள் மயங்க இனிப்புக்கிறக்கத்தில் கூட்டமாக ஒரு இடத்திலே இருந்து கொள்ளுவார்கள். மார்க்கண்டரும் 'புதிரை' வாய்க்குள் வைத்துக் கொள்ளுவார். பொஞ்சாதி தங்கமணி ஒவ்வொருவருக்கும் கழுவிய வாழை இலைகளைப் போட்டுவர மார்க்கண்டரும் பொஞ்சாதியும், அண்ணனது பொஞ்சாதி பூபதியும் சகலருக்கும் சோறு போட்டு பொரியல் வைத்து கறிகள் வைத்து தயிரோடு கூழோடு 'புதிர்' சாப்பிடக் கொடுக்க உண்ட மயக்கத்தில் கிடந்த சாமித்தம்பியும், செண்பகமும் மற்றக்குழந்தைகளும் கொஞ்சம் 'புதிர்' சோற்றைக் கறிகளோடு வாங்கிச்சாப்பிட்டு விட்டு இலையிலே கூழை வாங்கி நாக்கினால் நக்கித்திரிவார்கள்.

இனிமையான 'புதிர்' சாப்பிடும் அந்தச் சம்பிரதாய யுகத்தை நினைத்துப் பார்த்த சாமித்தம்பி வாத்தியார் "அப்பாடா! அந்தப் பொற்காலம் இனி எப்பொழுது வரப்போகுது?" என்று நினைத்து நீண்ட பெருமூச்சை விட்டவாறு மீண்டும் 'புதிர்' சாப்பிடுவதற்கு ஆயத்தமாகிறார்.■

# வாழ்வின் நிலை!

தினசரிப் பணிகளில் மனநிறைவேறியும்,
இன,சனவுறவினில் இனியபல்லூறியும்,
இல்லறப் பொய்கையின் நல்லறப் பூக்களின்
இனிமையில் நறுமணம் இதம்பட வருடியும்,
பட்டம், பதவிகள் காலடி தேடியும்,
பண்பொழுக்கம்மிகு நண்பர்கள் கூடியும்,
வசதியும், வாய்ப்புமாய் வருமதி நாடியும்
வனப்புற வாழ்வெழில் சிறப்புற வோடியும்....
ஏதோ... ஏதோ... இல்லாதொரு குறை!
எதையோ... எதையோ.. இழந்தபின் இந்நிலை!

*

எல்லாம் இருப்பினும், எல்லாம் நடப்பினும்
இல்லாதொரு நிலை சொல்லாதொரு நிலை!
கங்கையின் பொங்கலும், களிறிடும் பிளிறலும்,
வேங்கையின் உறுமலும், எரிமலைக்குமுறலும்
தனிமையின் பொருமலில் பகரவும், பகிரவும்
பகர்தலால், பகிர்தலால் விழல் நீராவதும்,
நண்பகற் கானலாய், நத்தையின் ஊர்தலாய்
நம்பிக்கை வைத்தவை ஆவதும், போவதும்....
ஏதோ... ஏதோ... இல்லாதொரு குறை!
எதையோ... எதையோ.. இழந்தபின் இந்நிலை!

*

விழிவழி நீர்மன வாசலைத் தொடுவதும்,
விரிகதிர் வெம்மையாய் வெண்மதி சுடுவதும்,
விடைகிடை யாதவோர் வினாவிடைமாய்வதும்,
விடிபொழு தேறியும் விம்மலிற் காய்வதும்,
இளம்பிறைக் கற்பனை கலைவதும், தேய்வதும்
இன்னபிற, துயர் மழையிலே தோய்வதும்
ஒலி, ஒளி அலைகளில் கனவுகள் கரைவதும்
இனியொரு வழியிலாப் பொழுதுகள் கழிவதும்....
ஏதோ... ஏதோ... இல்லாதொரு குறை!
எதையோ... எதையோ.. இழந்தபின் இந்நிலை!


*

ஏறாவூர்தாஹிர்

# குறுங்கதை

# பகல்கொள்ளை

வேல்அமுதன்



காலிறோட் மனிங்பிளேஸ் சந்திக்கு மினிபஸ் நேரத்திற்கு வந்துவிட்டது.

சந்தியில் பஸ்சிலிருந்து இறங்கிய தாமோதரம் பிள்ளையும் அவரது மனைவி தங்கம்மாவும் போகவேண்டிய இடம் கம்டன் லேனிலுள்ள அவர்களது மகளின் வீடு. அவர்களுக்குப் பயணக்களை. மகளின் வீட்டிற்கு நடந்து போகத் தெம்பு இல்லை.

சொல்லி வைத்தாற்போல் அவ்வழியே 'ராக்ஸி' ஒன்று வந்தது. அதில் தொத்திக் கொண்டனர். சில நொடிப் பொழுதில் அவர்களின் மகள் வீட்டு வாசலில் 'ராக்ஸி' போய் நின்றது.

"எவ்வளவு?" தாமோதரம்பிள்ளை 'ராக்ஸி ரைவரி'டம் விசாரித்தார்.

"தெசீய பனாஹாய்."

"அபி 'பிப்ரி' தமாய் குடுக்கிறது." தாமோதரம்பிள்ளைக்குப் பெரிதாகச் சிங்களம் தெரியாது. ராக்ஸி ரைவருக்குத் தமிழ் தெரியும் போலத் தெரியவில்லை.
"பாய். பாய் உதே பாந்தறே னேத? அப்பி ஹன்னே தெசீய பனாஹய்"

"உங்கக் வடி. அபி 'ஹன்றெட் தென்னம்"
"பாய் பாய் தெசீய பனாஹாய் ஓனமாய்"

அதேவேளை தாமோதரம்பிள்ளை திரும்பித் தங்கம்மாவைப் பார்த்தார்; அவருக்குக் கோபம் கோபமாக வந்தது. அவளின் கழுத்தில் பதினான்கு தங்கப்பவுண் தாலிக்கொடி பளபளத்தது. மஞ்சள் கொடியிற் தாலியைத் தொங்க விடும்படி பலமுறை வேண்டியும் அது அதுவரை பலிக்க வில்லை. ராக்ஸி றைவரைப் பார்த்தார். அவனின் முழி அவன் மேல் சந்தேகத்தை ஏற்படுத்தியது; கைக் கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தார். விடிவதற்கு இன்னும் ஒன்றரை மணித்தியாலம் இருந்தது.

அவன் கேட்ட இருநூற்று ஐம்பது ரூபாவைத் தனது 'மணிபேஸ்'சிலிருந்து இழுத்தெடுத்து ராக்ஸிக்காரனின் கையுள் திணித்தார்.

அந்நேரம்..........

தொலைவில் வெளிச்சம் தெரிந்தது! அது அண்மித்தபோது உற்றுப் பார்த்தார். அது ஒரு 'மீற்றேட் ரக்சி'(Metered Taxi)

# சொல்வளம் பெருக்குவோம் - 39

பன்மொழிப்புலவர். த. கனகரத்தினம்

## றோமன் வரிவடிவம்

தமிழ்பேசும் மக்களின் எல்லை **'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'** என்று தொல்காப்பியம் முதலாம் இலக்கண நூல்கள் கூறும். ஆனால், தமிழினம் இன்று இந்த எல்லையளவில் நின்றுவிடவில்லை. தமிழினம் உலகு தழுவி வாழ்கிறது. புலம் பெயர்ந்த மக்கள் இன்று பல நாடுகளிலும் வாழ்கின்றனர். தமிழர் ஒரு மொழியினர். ஒரே கலாசாரத்தினர். பல நாட்டினர். எல்லா நாட்டிலும் சிறுபான்மையினர். பற்பல இடங்களில் தூரதேசங்களில் வாழ்வதால் பல சூழ்நிலைகளில் வாழ்கின்றனர். இந்த நிலையில் தம் மொழியோடு, தம் கலை கலாசாரத்தோடு தம் இலக்கியத்தோடு தொடர்பு வைத்துக்கொள்ளாத சூழ்நிலையில் வாழ்கிறார்கள். இந்த நிலை ஒரு முடிபு இன்றி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறது. இந்த நிலையில் தமிழ் வரிவடிவம் பற்றி ஆராய்ச்சியாளர்களிடையே புதிய கருத்துக்கள் தோன்றி வருகின்றன. வழமையிலுள்ள அ, ஆ, க, கா போன்ற எழுத்து வரிவடிவங்களைப் பிற நாட்டவர் கற்பதில் உள்ள சிரமங்கள் உணரப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் றோமன் வரிவடிவத்தைத் தேவைக்கேற்பத் துணை வரிவடிவமாக ஏன் பயன்படுத்தக் கூடாது என்பது ஓர் கேள்வி. பாளி சமஸ்கிருத எழுத்துக்களை றோமன் வரிவடிவில் எழுதிப் பயன் கண்டுள்ளார்கள். நூல்களும் வெளிவந்தன. உயர் பரீட்சைகளும் றோமன் எழுத்துக்களை உபயோகித்து நடைபெறுகின்றன.

மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகள் தத்தம் மொழிகளை றோமன் வரிவடிவில் எழுதி வருகின்றனர். எமக்கு இவை வழிகாட்டுகின்றன. இம்முறையால் இந்நாடுகளின் மொழி வளர்ச்சி பெற்றிருக்கிறது. அழிந்து விடவில்லை. நாகரிகம், பண்பாடு என்பனவும் வளர்ச்சி குன்றவில்லை.

இவ்வாறு ஆராய்ச்சியாளர்கள் சிலர் கூறுகின்றார்கள். தமிழ் வரிவடிவை உபயோகித்து உச்சரிப்பது போல றோமன் வரிவடிவத்தில் உச்சரிக்க முடியாதென்று வாதாடுவார்கள் பலர். தமிழின் தனித்துவப் பண்பும் கெட்டுவிடும் என்று இவர்கள் கூறுவர்.

அடுத்து தமிழ்ப் பெயர்களை, பெயர்ச் சொற்களை றோமன் வரிவடிவத்தில் எழுதுவோரும் பல முறைகளைக் கையாள்கின்றனர். இது தரப்படுத்தப்படல் வேண்டும். (Standardized Form). தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதிலும் தமிழ்ச் சொற்களையோ, தமிழ்ப் பெயர்களையோ ரோமன் வரிவடிவத்தில் எழுதினும் ஒருமைப்பாடு காணல் அவசியமாகும். (Uniformity in the use of Roman Script) தமிழ்மொழி என்பதைத் 'தமில் மொலி' என்றோ, தமிழ் என்பதை 'தமில்' என்றோ, கந்தையா என்பதைக் 'கன்டையா' என்றோ வாசிக்கும் முறையில் அல்லது உச்சரிக்கும் முறையில் றோமன்

வரிவடிவு இருப்பின் அதன் பிரயோகம் குறைபாடுடையதாகும். அவ்வாறே ஊர்ப்பெயர்களில் யாழ்ப்பாணம் என்பதை யால்ப்பானம் என்றோ, கொழும்பு என்பதைக் 'கொலும்பு' என்றோ உச்சரிக்க நேருமாயின் தமிழின்பாடு எவ்வாறு இருக்கும்?

உரிய குறியீடுகளுடன் றோமன் வரிவடிவை உபயோகிக்காவிட்டால் பல சங்கடங்களும் நேரலாம். உதாரணமாக **ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்ற சொல்லும், ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம்** என்ற சொல்லும் ஒரே வடிவிலே - அதாவது ஒலிபரப்பு என்றே உச்சரிக்க நேரும்.

பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காக மாறின கதையாக இருத்தல் கூடாது. றோமன் வடிவில் அ/a, ஆ,aa, இ/i, ஈ/ii, உ/u, ஊ.'.uu, எ/e, ஏ/ee என்றாவறு அமையும். றோமன் வரிவடிவை உபயோகிக்கும்போது க் என்பதற்குக் 'K', ச் என்பதற்குத் 'C' என்றவாறு உபயோகிக்கலாம். ட என்பதற்கு Ta, த என்பதற்கு ta, ர என்பதற்கு 'ra', ற என்பதற்கு 'Ra', ல என்பதற்கு 'la', ள என்பதற்கு 'lha', ழ என்பதற்கு 'Zha' என்றவாறு எழுதலாம். இவ்வாறான ஒரு முறையைக் கையாண்டால் தமிழ் என்பதை 'tamizh' என்று எழுத நேரும். எழுத்துக்களுக்கு அமைய உச்சரிப்பையும் தமிழ் எனக் கற்றுக் கொள்ளலாம். உச்சரிப்பைப் கற்பிப்பதில் ஆசிரியரின் **பணி பெரும்பணியன்றோ!**
**ஒலியிழை நாடாக்களும் பயன்தருவனவாகும்.**

- சங்ககால இலக்கிய நூல்கள் பதினெண்மேல்கணக்கு, பதினெண்கீழ்க்கணக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளன. பதினெண்மேல்கணக்கில் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் அடங்கும். 'நற்றிணை,' நல்ல 'குறுந்தொகை', ஒத்த 'பதிற்றுப் பத்து', 'ஐங்குறுநூறு', ஓங்கு 'பரிபாடல்' கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு ('கலித்தொகை'), அகம்('அகநானூறு') புறம்('புறநானூறு') என இத்திறத்த **எட்டுத்தொகையும்**; திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநெல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை என்னும் **பத்துப்பாட்டும்** பதினெண்மேல்கணக்கில் அடங்கும். நாலடியார், நான்மணிக்கடிகை, கார்நாற்பது, களவழிநாற்பது, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மொழி ஐம்பது, திணை மாலை நூற்றைம்பது, இன்னிலை, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்பன பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகும்.

# தமிழ்க் கதைஞர் வட்டம் – (தகவம்)
# சிறுகதை மதிப்பீட்டு முடிவுகள்– 2011

| | எழுத்தாளர் | சிறுகதை | பத்திரிகை/ சஞ்சிகை |
|---|---|---|---|
| **முதலாம் காலாண்டு** | | | |
| **முதலாம் இடம்** | வி.ஜீவகுமாரன் | 'நாணயம்' | ஞானம் |
| **இரண்டாம் இடம்** | பா.தனபாலன் | 'அப்பாவேணும்' | ஜீவநதி |
| **மூன்றாம் இடம்** | வ.அநாதரட்சகன் | 'திருப்பம்' | மல்லிகை |
| **இரண்டாம் காலாண்டு** | | | |
| **முதலாம் இடம்** | தாட்சாயணி | 'பொய்மையும் வாய்மையிடத்து' | ஜீவநதி |
| **இரண்டாம் இடம்** | சூசை எட்வேட் | 'பக்தர்கள் செய்த பாவம்' | தினக்குரல் |
| **மூன்றாம் இடம்** | சுதர்ம மகாராஜன் | 'அவன் என் நண்பனாக இருந்தான்' | ஞானம் |
| **மூன்றாம் காலாண்டு** | | | |
| **முதலாம் இடம்** | வழங்கப்படவில்லை | - | - |
| **இரண்டாம் இடம்** | களுவாஞ்சிக்குடி யோகன் | 'மன்னிப்பீர்களா அம்மா' | தினக்குரல் |
| **மூன்றாம் இடம்** | தேவமுகுந்தன் | 'இவன்' | கலைமுகம் |
| **சிறப்புப் பாராட்டு** | எம்.எஸ். அமானுல்லா | 'ஒரு பெண்ணின் கதை' | ஜீவநதி |
| **நான்காம் காலாண்டு** | | | |
| **முதலாம் இடம்** | வி.ஜீவகுமாரன் | 'மாங்கல்யம் தந்துதானே' | ஞானம் |
| **இரண்டாம் இடம்** | எஸ்.முத்துமீரான் | 'முதியான் கண்டுத்தயிரு' | ஞானம் |
| **மூன்றாம் இடம்** | யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | 'மயான காண்டம்' | ஞானம் |

*பரிசளிப்பு, 09.12.2012 ஞாயிற்றுக்கிழமை, மாலை 5 மணிக்கு, கொழும்புத் தமிழ்ச் சங்க, சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறும். பரிசுக்குரிய எழுத்தாளர்கள், 0112508170 என்ற தொலைபேசி இலக்கத்தினூடு எம்முடன் தொடர்பு கொள்க.*

- வசந்தி தயாபரன்
செயலாளர்.


# ஈழ மகள் தேடுகிறாள் - 03

## ஒரு தாயின் தவிப்பு

(ஈழமகள் தேடுகிறாள் தொடர்ச்சி.....)

வெள்ளைச் சேட்டுப் போட்டோர் முன்
வெறிச்சோடித் தேடுகின்றோம்.
வெயில் மழ பாராம உழைச்ச - எம்
வெள்ள மனசுப் புள்ளயல

வெளியே கொணர்ந்து தாருங்கையா
விசயமுள்ள ஆளுகளே!
விசம் கூட கரையுதையா
வெயிலில் நாம் கதறயில



கலங்கிய கண்ணோடு
கதியத்து நிற்கிறோம் நாம்
கண்டுபிடிச்சுத் தாருங்கையா
கண்ணான உறவுகளை!

கொடூரம் தந்த யுத்தத்தால்
கொலையுண்டோர் எத்தனை பேர்
அத்தனையும் தேட வில்லை
அது மீளாது போனதுதான்

அடைபட்டுக் கிடப்போரை
அல்லல் பட்டுத் தேடுகின்றோம்
அழைத்திங்கு வாருங்கையா
அழுதழுது தேடுகின்றோம்.....

இறந்த உயிர் மட்டும்
இறைவனடி சேரட்டும்!
இருக்கும் உயிரை மட்டும்
எம்மோடு சேர்க்கட்டும்!

இறைவா.... நீ பாருமையா
எம்முயிரைக் காருமையா!

- புதுமை வாணன் -

(தொடரும்....)

தொடர் நாவல்

# மீண்டும் ஒரு காதல் கதை



20

- திருக்கோவில் யோகா.யோகேந்திரன்

"அந்தப் பெரியவர் கார்திகேயனுக் காகவும், உங்க மகளுக்காகவும் மட்டுமல்ல ராதாவுக்காகவும் நீங்க கண் பார்வை பெறத்தான் வேணும் ஜயலத்'

"என்ன ஒங்களுக்கு ராதாவ தெரியுமா?"

"தெரியுமாவா...? உங்கள ரெண்டு வருசமாகத் தேடித்திரிஞ்ச ஆள்தான் நான். ராதாவோட மச்சான் கண்ணன்!"

கட்டிலில் ஜயலத்தின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த என்னைத் தடவி என் கரங்களிரண்டையும் பற்றி "என்னைய மன்னிச்சுக்கோங்க டாக்டர். ஒங்கட வாழ்க்கையில வீணா குறுக்க வந்து கரச்சல் பண்ணிட்டன். சொறி... வெரி சொறி" என்று கெஞ்சி மன்னிப்புக் கேட்டார் ஜயலத்.

"சேச்சே..... அப்பிடியெல்லாம் சொல்லாதீங்க. கண்பார்வை கிடைக்கட்டும். எவ்வளவு காலம் போனாலும் ராதாதான் உங்களுக்கு மனைவி. இதில் எந்த மாற்றமும் கிடையாது." என்று ஒரே போடாகப் போட்டேன் நான்.

"நீங்களே இப்பிடி சொல்லலாமா டாக்டர். அது எப்பேர்ப்பட்ட பொண்ணு! அவ ஒங்களுக்காக பொறந்தவ. ஒங்களுக்காக வளந்தவ. நீங்கதான் டாக்டர் அந்தப் பொண்ணுக்கு சரியான ஆளு. நாம இல்லே." என மறுத்தார் ஜயலத்.

நான் விடவில்லை. "ஜயலத் உங்களுக்குத் தெரியாமலிருக்காது. சொந்த மாமி மகளையோ சொந்த மாமா மகளையோ கல்யாணம் கட்டக் கூடாதென்று மருத்துவ உலகம் சொல்லுது. அப்பிடி இருக்க ஏன் விடாப்பிடியாக அப்பிடிச் செய்ய வேணும்? அதுவும் இரண்டு டாக்டர்கள் அப்பிடி ஏன் செய்ய வேணும்? ராதா வேறு ஒருவரைக் கல்யாணம் செய்வதுதான் சரி. அந்த வேறு ஒருவர் ராதா விரும்பும் ஜயலத்தாக இருக்கட்டும்." என்றேன்.

"அப்படின்னா நீங்க என்ன பண்ணுவீங்க?" என்று கவலையோடு கேட்டார் ஜயலத்.

"ராதாவுக்கும் உங்களுக்கும் கல்யாணம் நடந்த பிறகு நீங்களும் ராதாவுமாகச் சேர்ந்து ஒரு பெண்ணைப் பார்த்து எனக்குக் கல்யாணம் கட்டி வைக்கமாட்டீங்களா?" என்று அவரைச் சமாதானப்படுத்தினேன் சிரித்தபடி."

அதன் பின் நாங்கள் இருவரும் நல்ல நண்பர்களானோம். மனம் விட்டுப்பேசிக் கொள்வோம். நான் அவரிடம் கேட்டுக் கொண்ட தெல்லாம் திருமணம் மட்டக்களப்பிலுள்ள இந்துக் கோவிலொன்றில் நடக்க வேண்டும். தாலிகட்டும் வரை இந்த விடயம் மிக ரகசியமாக இருக்க வேண்டுமென்பது மட்டுமே.

ஜயலத் கண் சத்திர சிகிச்சை செய்து பார்வை நரம்புகள் சீராக்கப்பட்டு பார்வை கிடைக்கும் நாள் நெருங்கும்போது ஜயலத் என்னிடம் தான் கண்விழிக்கும்போது முதன் முதலாக என்னைத்தான் அவர் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நான் கொண்டு போயிருந்த போட்டோ அல்பத்திலிருந்த ராதாவின் படமொன்றை எடுத்துப் பெரிதாக்கி அவர் கண் விழித்த அந்த வேளையில் அவரைப் பார்க்கச் செய்தேன். அவர் பார்க்க விரும்பிய என்னையும் ராதாவின் படத்தையும் ஒருமித்துப் பார்த்ததில் ஏகப்பட்ட சந்தோஷம் அவருக்கு!

ஜயலத்தை ‘டிஜ்சார்ஜ்’ செய்ததும் நான் தங்கியிருந்த அறைக்கு அழைத்துச் சென்று என்னுடனேயே தங்க வைத்திருந்தேன். என்னுடன் கிட்டத்தட்ட ஆறுமாதகாலம் வரை ஜயலத் தங்கியிருந்தார். அந்நாட்களில் அவரது ஒவ்வொரு செயற்பாடுகளும் பேச்சுவாக்கில் அவர் வெளிப்படுத்தும் கருத்துக்களும் என்னை வெகுவாக ஈர்த்தன.

எனக்கு ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் இந்துக்களின் வழிபாட்டு முறைகள் - சமயச் சடங்குகள், சம்பிரதாயங்கள் - உணவுப்பழக்கங்கள் என்று ஏராளமான விடயங்களைக் கேட்டுக் கேட்டு அறிந்து கொண்டார். இந்து மதத்தின் தத்துவங்ளை எனக்குத் தெரிந்த வகையில் அரைகுறையாக நான் சொல்வதைக் கேட்டு வியப்படைவார். கல்வி, ஒழுக்கம், சுகாதாரம், அரசியல், குருபக்தி, வாழ்க்கைமுறைகள், தர்மம் செய்தல், உடற்பயிற்சி எல்லாமே பழந்தமிழ் நூல்களின் மூலம் வெளிப்படுத்தப்படுவதை என் சில உதாரணங்கள் மூலம் புரிந்து கொண்டு ஆச்சரியப்படுவார். அவரும் எனக்குத் தமது சமய வழிபாட்டு முறைகள் சம்பிரதாயங்கள் பற்றிக் கூறுவார்.

ஜயலத் பற்றிய விடயம் ராதாவுக்கோ, மாமா, மாமிக்கோ தெரியாது. திருமணத்தின்போது ஜயலத்தைத் திருமணப்பரிசாக ராதாவுக்குக் கொடுக்க நினைத்தேன். நினைத்தபடி செய்தும் விட்டேன்.

இது எனக்கு இறைவனால் இடப்பட்ட கட்டளை. இல்லாவிட்டால் நமது சின்னஞ் சிறு நாட்டில் கண்டுபிடிக்க முடியாத ஒருவரை அந்தப் பெரிய நாட்டில் என்னிடமே கொண்டு வந்த சேர்த்திருப்பாரா, அந்த இறைவன்?

‘விதியை மதியால் வெல்லலாம்’ என்பது எதுகை மோனைக்குச் சரியாக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை அந்த விதிப்படிதான் மதி செயற்படுகிறது என நினைக்கிறேன். இங்கே முற்றுமுழுவதுமாக விதிப்படிதான் சகலமும் நடந்துள்ளது. நான் இடையிலே ஒரு கருவியாகச் செயற்பட்டிருக்கின்றேன். அவ்வளவுதான்.

ஜயலத் ஒரு பட்டதாரி ஆசிரியர். மிகச் சிறந்த எழுத்தாளர். உத்தமமான நற்குணங்கள் கொண்டவர். இப்போது ஒரு கோடீஸ்வரர். ராதாவை மணக்க முற்றிலும் தகுதியானவர். இவரின் நல்ல குணங்களால் கவரப்பட்டுத்தான்

அந்தத் தொழிலதிபர் கார்த்திகேயன் இவரைத் தன் வாரிசாக ஏற்றுக் கொண்டதாக என்னிடம் ஒரு தடவை டெலிபோனில் பேசும்போது கூறினார். இந்தத் திருமணவிடயம் எதுவுமே அவருக்கோ அவரது தங்கைக்கோ தெரியாது. இனித்தான் இது விடயமாக அவருடன் கதைத்து எல்லோரையும் அவரிடம் அழைத்துப்போக இருக்கிறேன்.

எனக்கும் ராதாவுக்கும் திருமணம் என்று உங்களையெல்லாம் அழைத்ததற்காக எல்லோரும் என்னை மன்னித்து நான் ஏற்றுக்கொண்டது போல இவர்களை மனசார ஏற்றுக் கொண்டு ஆசீர்வதியுங்கள். இது மட்டுமல்ல பக்கத்து மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் விருந்திலும் பங்கு கொண்டு வீடு செல்லுமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எல்லோருக்கும் நன்றிகள்" இவ்வாறு நீண்ட விளக்கம் கூறி உட்கார்ந்தான் கண்ணன்.

பிரமிப்புடன் கண்ணன் கூறிய விடயங்களைச் செவிமடுத்தவர்கள் அவன் பேசி முடிந்ததும் அவனைச் சூழ்ந்துகொண்டு கை குலுக்கியும் கட்டித்தழுவியும் ஆரவாரித்தனர்.

தன் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய கண்ணன் அத்தான் தன் விருப்பத்தை நிறைவேற்ற பட்ட சிரமங்களையும் அதற்காக மேற்கொண்ட ஏற்பாடுகளையும் கேட்டுக் கண்கள் பனிக்கப் பேச நாவெழாது பிரமித்து நின்று கொண்டிருந்தாள் ராதா..

**- கதை முற்றுப் பெற்றது -**

## தெறிகதிர்-32

**வித்யா நிகேதன**
**ஏ.எச்.எம்.அத்தாஸ்(ச.நீதவான்)**
**அதிபர்-I (ஓய்வுநிலை)**
**41, அரபாத் அகம்**
**முஸ்லிம் வீதி**
**வெலிப்பன்னை**

பேராசிரியர் மௌனகுரு 'செங்கதிர்' (56வது) இதழில் ஓர் உண்மையைச் சுட்டிக்காட்டியிருந்தார். அவர் போன்ற அனுபவ சாலிகள், அறிஞர்கள் பேச வேண்டிய விடயமே அது.

அன்றைய ஆளுமை நிறைந்த பாடசாலை அதிபர்களின் சாதனைகளை நினைப்பூட்டி இன்றைய யுகத்தில் ஆளுமையற்ற அதிபர்கள் நிலை எதிர்கால சமுதாயத்தை எங்கு இட்டுச் செல்லும்? என்ற கேள்வியே அடிநாதமாக இருந்ததைக் கண்டேன்.

இத்தகைய யதார்த்த நிலையை எடுத்துக்கூறி அனைவரையும் சிந்திக்க வைத்துள்ள பேராசிரியர் மௌனகுருவுக்கு எனது ஆழ்ந்த நன்றிகள் உரித்தாவதுடன் இவ்வுண்மையைப் பிட்டுக்காட்டிய அவரது துணிச்சலுக்கு எனது பாராட்டுக்கள்.

## வெளியிடப்பட்டுள்ள கூற்றுக்கள் சிலவற்றை திறனாய்வின் அடிப்படையில் நோக்க முயல்கிறேன்.

'கம்பனது கம்பராமாயாணத்தில் காணப்படும் கவிநயம்போல் வேறெந்த மொழி இலக்கியத்திலும் காணமுடியாது என்பது பன்மொழிப்புலவர் பலரது முடிவு' (**தமிழ்ப் பூங்கா 2007**) என்னும் கூற்றை நோக்குவோம். 'கம்பனது கம்பராமாயணம்' என்றால் கம்பனை விட வேறு பலர் கம்பராமாயணம் இயற்றி உள்ளார்கள் என்று பொருள் கொடுக்கும் அல்லவா? எனவே கம்பராமாயணம் என்று கூறினால் போதும். இங்கே எழுத்தாளர், பல பன்மொழிப் புலவர்களின் முடிவு என்று கூறுகிறாரே அல்லாது ஒரு பன்மொழிப் புலவரையாவது குறிப்பிடவில்லை. 'பல' என்னும் சொல்லே நிச்சயமாக எண்ணைக் குறிப்பிடும் சொல் அல்ல. 'பன்மொழிப் புலவர்' என்னும் கூற்றே வரையறை செய்யப்படாத கூற்று. எத்தனை மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர் பன்மொழிப் புலவர் என்று அழைக்கப்படலாம் என்று வரையறை செய்யப்படவில்லை.

உலகில் சுமார் 6000 மொழிகள் வழக்கில் உள்ளன என்று என்காட்டா கலைக்களஞ்சியம் (Encarta Encyclopedia) தந்துள்ளது. இந்த மொழிகளில் 68 மொழிகள் இலக்கிய வளம் உள்ள மொழிகளாகக் கருதப்படுகின்றன. இந்த மொழிகளில் அமைந்துள்ள இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றவர்தான் இந்த மதிப்பீடு சார் கூற்றை முன்வைக்கலாம். இப்படியான பன்மொழிப் புலவர் ஒருவரேனும் இருந்ததாகச் சான்றில்லை. எனவே இக்கூற்று ஆதாரமற்றது. எழுத்தாளர்கள் ஆதாரமற்ற கூற்றுக்களை முன்வைத்தால், இவை உண்மை என்று நிலைபெறும் அபாயம் உண்டு.

"தமிழைப்போலச் சொல்வளமுள்ள மொழி உலகத்தில் வேறெதுவுமில்லை." என்னும் கூற்று தரப்பட்டுள்ளது (**செங்கதிர் 43**). இக்கூற்றைத் திறனாய்வின் அடிப்படையில் நோக்குவோம். எல்லா மொழிகளைப் பார்க்கிலும் சொல்வளம் மிக்கது தமிழ் என்று கூறுவது மதிப்பீடாகும். மதிப்பீடு என்பது உரிய முறையில் தரவுகளைச் சேகரித்து அவற்றைப் புள்ளியியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து பெறும் முடிபே மதிப்பீடாகும். மேலும் மதிப்பீடு செய்ய முயலும் கூற்றுக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வரைவிலக்கணத்தையும் நிர்ணயித்தல் வேண்டும். அதாவது 'சொல்வளம்' என்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வரைவிலக் கணத்தையும் நிர்ணயித்தல் வேண்டும். வரைவிலக்கணத்தை நிர்ணயித்தபின் இந்த 68 மொழிகளில் உள்ள சொல்வளங்களை ஆய்வுக்கு உட்படுத்தல் வேண்டும். ஆய்வில் பெற்ற தரவுகளைப் பகுப்பாய்வு செய்து பகுப்பாய்வில் இருந்து ஒரு முடிபுக்கு வரலாம். இந்த முடிபின் நம்பகத்தன்மை எவ்வளவு என்றும் சதவீதத்தில் அறிதல் வேண்டும். அதன்பின்தான் மதிப்பீட்டை அடிப்படையாக அமைந்துள்ள முடிபு வெளியிடப்படல் வேண்டும். இல்லையேல் பிழையான தகவல்களைப் பரப்புவதாக அமையும்.

கணித அடிப்படையில் நோக்கினால் உலகில் 6000 மொழிகள் வழக்கில் உள்ளன என்றும் இந்த மொழிகளில் 68 மொழிகள் இலக்கிய வளம் மிக்க மொழிகளாகக் கருதப்படுகின்றன என்றும் ஏற்கனவே கண்டோம். ஒக்ஸ்போட் ஆங்கில அகராதியில் (Oxfort English Dictionary) சுமார் 600 000 சொற்கள் தொகுக்கப்பட்டு வரைவிலக்கணங்கள் வழங்கப் பட்டுள்ளன. தமிழில் சுமார் 75 000 சொற்கள் அகராதிகளில் தொகுக்கப் பட்டுள்ளன. மேலும் ஹவாட் பல்கலைக்கழகமும் கூகிளும் (Harvard University and Google) மேற்கொண்ட ஆய்வில் ஆங்கிலத்தில் 1,022,000 சொற்கள் அமைந்துள்ளதாகவும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 8500 சொற்கள் புதிதாகச் சேர்க்கப்படுகின்றன என்றும் அறியப்பட்டது. மேலும் ஆங்கில மொழியின் சொல்வளத்தைப் பெருக்குவதற்கு 50,000 கிரேக்க சொற்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே எவ்வித ஆதாரமும் இல்லாது "தமிழைப் போலச் சொல்வளமுள்ள மொழி உலகத்தில் வேறெதுவுமில்லை." என்று எழுதுவது ஏற்புடையது அல்ல.

'வணபிதா.தனிநாயகம் அடிகளார் அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குக் கல்வியல் துறை விரிவுரையாளராகப் பணியாற்றியமை பலர் அறிந்திருக்கவில்லை.' **(ஆசிரியம் - 5)** முதற்கண் இது தங்களுக்கு எப்படித் தெரியும் என்னும் கேள்வி எழும். எந்த விடயத்தையும் பலர் அறியமாட்டார்கள் என்பதுதான் தர்க்கரீதியான நியதி. உலகில் 7,000,000,000 மக்களுக்கு மேல் வாழ்கிறார்கள். இவர்களில் 3,500,000,000 க்கு மேல் உள்ளவர்கள் எந்த விடயத்தையும் அறிந்திருப்பது சாத்தியமானதா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது. எனவே "வணபிதா.தனிநாயகம் அடிகளார் அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்துக் கல்வியியற் துறை விரவுரையாளராகப் பணியாற்றினார்" என்னும் கூற்றே போதுமானது. பலர் அறிந்திருக்க வில்லை என்றால் பல்கலைக்கழக விடயங்கள் பலருக்குத் தெரியாது. அடிகளாரின் பணிகளை பலர் அறிந்திருக்கவில்லை. இந்த கட்டுரையாளர்தான் பல விடயங்களை அறிந்திருந்தார் போன்ற கூற்றுக்கள் எழலாம்.

எனவே இவ்வாறான மதிப்பீடு சார்ந்த கூற்றுக்களைத் தற்காலத் திறனாய்வின் அடிப்படையில் நோக்கினால் இவை ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல என்பது தெளிவாகிறது. எழுத்தாளர்கள் இவ்வாறு எழுதினாலும் வெளியிடுவோர் தம் வெளியிடும் கூற்றுக்களை நன்கு ஆய்ந்து வெளியிடுதல் நன்மை பயக்கும். அமெரிக்காவில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஊடகவியலாளர் கல்வி நிலையம் ஊடகத் துறையில் திறனாய்வு தொடர்பான சிந்தனையை வளர்ப்பதில் பெரும் பங்காற்றி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை**
B.ED(HONS)(Colombo)M.A;Msc;ED.D(Columbia)

# ‘வயிற்றெரிச்சல்’ கதைகள்

கதை - 05 - இணுவை இரகு

## ஒரு வாத்தியாரின் வயிற்றெரிச்சல்

நான் ஒரு பிரபல கல்லூரியின் கணித ஆசிரியர். சும்மா வெறும் கணித ஆசிரியர் இல்லை; தலைநகரிலே பிரத்தியேக ‘ரியூசன்’ மூலம் மட்டும் இலட்சக்கணக்கில் மாதாந்தம் உழைக்கிறேன். என்னைப் போலவே பல கணித ஆசிரியர்களை உருவாக்கியுள்ளேன். அவர்களும் என்னைப் போலவே பல்வேறு கல்லூரிகளில் கணித ஆசிரியர்களாக உள்ளார்கள்; ரியூசனும் கொடுக்கிறார்கள் - ஆனால் ஒருவரும் என்னை விஞ்சவில்லை!
இப்போதைக்கு விஞ்சவும் முடியாது!

தவிர பல கணித மேதைகளையும் நூற்றுக்கணக்கான பொறியியலாளர் களையும் உருவாக்கியுள்ளேன்.

இரவு பகலாக உழைக்கிறேன். ‘பாங்க் பலன்ஸ்’ தினமும் ஏறிக்கொண்டே போகிறது. கார், பங்களா, நல்லமனைவி, சிறந்த குழந்தைகள் எல்லாம் சரி!

நான் கற்பித்த மாணவர்கள் நல்லாசிரியர்களாக பொறியியலாளர்களாக என்னை மிகவும் மதிக்கிறார்கள்; போற்றுகிறார்கள்! தமது வீடுகளிலே ஒரு நல்ல காரியமென்றால் என்னை மனைவி சகிதம் அழைத்துக் கௌரவிக்கிறார்கள்!

இருந்தும் என்ன? இத்தனை என்ஜினியர்களை உருவாக்கிய நான் எப்போது என்ஜினியராவது? எட்டுமணிநேரம் மட்டும் வேலை செய்து கைநிறைய உழைப்பது? நான் ஒரு அதிபருக்குக் கீழே அவர் கட்டளைப்படிதான் வேலை செய்ய வேண்டி உள்ளது. நான் என்ஜினியராகி எனக்குக் கீழே பத்து இருபதுபேர் வேலை செய்வது எப்போது?

எப்போது தீரும் எனது வயிற்றெரிச்சல்?

# வாழ்க்கைத் தடம் - 08

- அன்புமணி



06.03.2010 அன்று பவளவிழாக்கண்டு அகவை எழுபத்தைந்தைத் தாண்டியும் இன்றும் கலை இலக்கிய செயற்பாடுகளில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் மூத்த எழுத்தாளர் அன்புமணி (இரா.நாகலிங்கம்) அவர்கள் தனது வாழ்க்கை வரலாற்றினை 'வாழ்க்கைத் தடம்' என்ற தலைப்பிலே இங்கே 'செங்கதிர்' வாசகர்களுக்கு வடித்துத் தருகிறார்.

## சில முக்கிய நிகழ்வுகள்.

### வில்லுப்பாட்டுப் பங்களிப்பு

ஒரு காலத்தில் வில்லுப்பாட்டு என்றால் அது மாஸ்டர் சிவலிங்கம்தான். இலங்கை முழுவதும் அவர் புகழ் பரவியிருந்தது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அவரது வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு அழைப்பு வரும். நான் அரசினர் கல்லூரியில் இலிகிதராகச் சேர்ந்தபோது அவர் அங்கு எஸ்.எஸ்.சி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றி எப்போதும் ஒரு மாணவர் கூட்டம் மொய்த்துக் கொண்டேயிருக்கும்.

அப்போது அங்கு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆசிரியராகக் கடமை ஆற்றிக் கொண்டிருந்தார். அவருடைய செல்லம் மாஸ்டர் சிவலிங்கம். மாஸ்டருக்கு 'நகைச்சுவைக்குமரன்' என்று பட்டம் வழங்கியதே புலவர்மணிதான்.

பிற்காலத்தில் மாஸ்டர் வில்லிசை நிகழ்ச்சி நடத்த ஆரம்பித்துவிட்டார். அப்போது நான் கல்வித்திணைக்களத்தில் இலிகிதராகக் கடமை ஆற்றிக் கொண்டிருந்தேன். 1964 - 65 காலப்பகுதியில் நான் அவரது வில்லுப்பாட்டுக் குழுவில் சேர்ந்திருந்தேன். அப்போது அக்குழுவில் கவிஞர்.செ.குணரத்தினம், முழக்கம் முருகப்பா, சித்தாண்டி சிவலிங்கம், பாஸ்கரன் முதலியோர் உறுப்பினராக இருந்தனர்.

வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு எங்கள் குழு வாடகைக் காரில்தான் பயணம் செய்யும். அப்போது திரவியம் என்பவர் ஒரு ஹோல்டன் கார் வைத்திருந்தார். பெரிய கார். அதில் நாங்கள் பயணம் செய்வோம். பயணம் நெடுகிலும் ஒரே பாட்டும், கும்மாளமும்தான். முழக்கம் முருகப்பா சீர்காழி கோவிந்தராஜனைப்போல் பாடுவார். சித்தாண்டி சிவலிங்கம் டி.எம். சௌந்தரராசனைப்போல் பாடுவார். வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின்போது இருவரது தனிப்பாட்டும் களைகட்டிவிடும்.

### வில்லுப்பாட்டு நிகழ்வுகள்.

இக்குழுவில் நான் மனேஜர் போலக் கடமை ஆற்றினேன். தங்குமிடவசதி, சாப்பாடு முதலிய வசதிகளைக் கவனிப்பது என் பொறுப்பு. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின்போது நான் 'மெலோடிக்கா' என்ற வாத்தியத்தை வாசிப்பேன்.

நாங்கள் பொதுவாக கோயில் நிகழ்ச்சிகளுக்கும், ஆண்டு விழாக்கள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் அழைக்கப்பட்டோம். பெருஞ் செலவில் எங்களை அழைப்பார்கள். எந்த வைபவம் ஆனாலும் எங்கள் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியே சிறப்பு நிகழ்ச்சியாக இருக்கும். எக்கச்சக்கமான கூட்டம் சேரும். இலங்கையின் பல பாகங்களுக்கும் எங்கள் வில்லுப்பாட்டுக் குழு சென்றது. யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு, மன்னார், திருக்கேதீஸ்வரம் முதலிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மறக்கமுடியாதவை.

ஒரு முறை யாழ்ப்பாணத்தில் காரைநகர், களபூமி திக்கம் என்ற இடத்தில் கோயில் நிகழ்ச்சி ஒன்றில் எங்கள் நிகழ்ச்சி நடைபெறவிருந்தது. முதல் நாளே யாழ்ப்பாணம் சென்றுவிட்டோம். பகல்பொழுது ஓய்விருந்தது. அதை வீணாக்காமல், பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்குச் சென்றோம். மட்டக்களப்பைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் பலர் அப்போது அங்கு மாணவர்களாக இருந்தனர். அவர்கள் எங்களுக்கு மிகவும் உற்சாகமான வரவேற்பு அளித்தார்கள். கூட்டமாகப் பேசிக் கொண்டிருந்தபோது பாட்டுக்குப்பாட்டு தமாஷாக இடம்பெற்றது.

அப்போது அங்கு மாணவர்களாக இருந்தவர்களில் ஆரையம்பதியைச் சேர்ந்த நடராஜா என்பவரும் இருந்தார். அவரும் ஒரு சிறந்த பாடகர். அன்று அவர் பாடிய "சொல்லாத நாளில்லை சுடர்மிகு வடிவேலா" என்ற டி.எம்.எஸ் இன் பாட்டு இன்றும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது.

## திருக்கேதீஸ்வர நிகழ்வு

திருக்கேதீஸ்வரம் ஆலய உற்சவத்தின்போது எங்கள் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்கள். பண்டிதர் வி.சீ.கந்தையா, திருமதி. கங்கேஸ்வரி கந்தையா தம்பதிகள். அன்று அவர்களது திருவிழா. அன்றைய நிகழ்வில் அவர்களது சமயப் பேச்சுகளும் இருந்தன. 'அழுகை' என்ற தலைப்பில் கங்கேஸ்வரி அம்மா பேசினார்கள். அபூர்வமான பேச்சு அது. இன்று நினைத்தாலும் கண்ணீர் பனிக்கின்றது.

இறைவன் அருள்வேண்டி எப்படி நமது சமய குரவர்கள் பாடிப்பரவினர் என்பதை மையமாக கொண்டது அவர் பேச்சு. மாணிக்கவாசகர் பற்றிக் குறிப்பிடும்போது, 'அழுதாள் ஒரு மாது. அவள் பெயர் செம்மனச் செல்வி. அவள் அழுகைக்கு இரங்கி, இறைவன் கூலியாளாக வந்தான். வைகைக் கரையில் அவள்பங்கை அடைப்பதற்கு மண்சுமந்து கொட்டினான். கூலியாக உதிர்ந்த பிட்டைப் பெற்றான். பிட்டு முழுவதுமே உதிர்ந்தது. கூலியான இறைவன் உதிர்ந்த பிட்டு முழுவதையும் தின்றான். ஆனால் அவளுக்குரிய வைகைக் கரைப்பங்கை அடைக்காமல் தூக்கத்தில் ஈடுபட்டான். அரண்மனை அதிகாரிகளால் பிரம்படி பட்டான். தன் சுயவடிவில் தோன்றி அனைவரையும் பரவசப்படுத்தினான்.' இவ்வாறு கங்கேஸ்வரி அம்மையாரின் பேச்சு தொடர்ந்தபோது சபையில் விம்மல் ஒலிகள் கேட்டன. அவ்வாறு பேசக் கூடியவர்கள் இன்று யார் இருக்கிறார்கள்? பண்டிதர் வி.சீ.கந்தையாவும், பண்டிதை கங்கேஸ்வரி கந்தையாவும் அபூர்வமான இலக்கியத்தம்பதிகள். அவர்களுடன் வாழ்நாள் முழுவதும் தொடர்பு

பட்டிருந்ததுடன் அவர்களது இறுதிக் காலத்திலும் தொடர்புபட்டிருந்ததை எண்ணும்போது நெஞ்சம் விம்முகிறது. அவர்களது வாழ்க்கை வரலாறு விரிவாக எழுதப்பட வேண்டும். சரி, நமது வில்லுப்பாட்டுக் கதைக்கு வருவோம்

## மாஸ்டர் சிவலிங்கத்தின் பெருமை

திருகோணமலையில் எங்கள் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தவர் 'திருமலை எழுதுவினைஞர் சங்கத் தலைவர்' திரு.சிவலிங்கம், கம்பீரமான தோற்றம் உடையவர். அன்று சங்க ஆண்டு விழா அல்லது அதுபோன்ற ஒரு முக்கிய நிகழ்வாக இருக்க வேண்டும். அழகுமிக்க திருகோணமலைக் கடற்கரையில் அமைக்கப்பட்ட திறந்தவெளி அரங்கில் எங்கள் நிகழ்ச்சி நடைபெற்றது. கடற்கரை முழுவதும் மக்கள் கூட்டம். எதிரே பத்திரகாளி அம்மன் ஆலயம். சற்றுத் தொலைவில் திருக்கோணேஸ்வர ஆலயம். இரண்டையும் இணைத்து மாஸ்டர் சிவலிங்கம் தனது பேச்சில் குறிப்பிட்டார். "இங்கே அம்மை, அங்கே அப்பன். சக்தி, சிவம் இரண்டும் இணைந்த இப்புண்ணிய பூமியில் எங்கள் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடாத்தக் கிடைத்தது எங்கள் பாக்கியம்." என்று அவர் குறிப்பிட்டபோது கரகோஷம் வானைப் பிளந்தது.

கொழும்பில் தினபதி, சிந்தாமணி பத்திரிகை ஆரம்பவைபவத்தை ஒட்டி எங்கள் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை மேற்படி பத்திரிகைகளின் பொறுப் பாசிரியரும், எழுத்துலக ஜாம்பவானுமாகிய அமரர் எஸ்.டி.சிவநாயகம் ஏற்பாடு செய்திருந்தார். அன்றைய வில்லுப்பாட்டு நிகழ்ச்சி மிகவும் அபாரம். மாஸ்டர் சிவலிங்கத்தின் சமயோசிதமான நகைச் சுவைத் துணுக்குகள் ஒவ்வொன்றுக்கும் கரகோஷம், கைதட்டல், ஆரவாரம். அன்றைய நிகழ்ச்சி நன்கு களைகட்டியது. எஸ்.டி.எஸ்க்கு மகிழ்ச்சி. எஸ்.டி.எஸ் பின்னர் மாஸ்டர் சிவலிங்கத்தைத் தன் பத்திரிகை நிறுவனத்தில் நிரந்தர உத்தியோகத்தராகச் சேர்த்துக் கொண்டார். மாஸ்டர் சிவலிங்கத்தின் 100வது வில்லுப்பாட்டு நிகழ்வு மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்றது. அதற்கான ஏற்பாடுகளை நானே செய்தேன்.

## எழுதுவினைஞர் சங்க ஆண்டுக்கூட்டம்

வில்லுப்பாட்டுக்கதையை இத்துடன் நிறுத்திவிட்டு மற்றொரு சம்பவத்துக்குச் செல்வோம்.

ஒரு காலத்தில், அரச இலிகிதர் சேவைச் சங்கம் மட்டுமே எழுதுவினைஞர் களுக்கான ஒரே தொழிற்சங்கமாக இருந்தது. அறுபதுகளில் அரசதமிழ் ஊழியர் சிங்களத் தேர்ச்சி பெற்றால்தான் சம்பள உயர்ச்சி வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்தது. தமிழ் இலிகிதர்கள் இதனை எதிர்த்தனர். அச்சங்கத்திலிருந்து பிரிந்து அரச எழுதுவினைஞர் சங்கம் என்ற பெயரில் ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கியது. தமிழ் எழுதுவினைஞர்கள் அனைவரும் அதில் இணைந்தனர். அதன் உறுப்பினரான கோடீஸ்வரன் என்பவர் பெயரில் அரசாங்கத்தின் 'சிங்களத் தேர்ச்சி'ச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் அரச எழுதுவினைஞர் சங்கம் வழக்குத் தாக்கல் செய்தது, வெற்றி பெற்றது. இது ஒரு பாரிய வெற்றி. அரசாங்கத்திற்கு எதிரான ஒரு வழக்கில் கிடைத்த முக்கியமான வெற்றி. எழுதுவினைஞர்கள் அனைவரும் மகிழ்ந்தனர்.

இப்படியான ஒரு காலகட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட எழுதுவினைஞர் சங்கத்துக்கு நானே தலைவராக இருந்தேன். செயலாளராகப் புவனேசன் என்பவர் இருந்தார். அந்த ஆண்டு அகில இலங்கை அரச எழுதுவினைஞர் சங்கத்தின் ஆண்டுவிழா மட்டக்களப்பில் நடாத்தப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை எமது மட்டக்களப்பு மாவட்ட எழுதுவினைஞர் சங்கம் மேற்கொண்டது.

கொழும்பிலிருந்து வரும் பிரமுகர்கள் தங்கும் ஏற்பாடு - வெளியூர்ப் பிரமுகர்கள் தங்குவதற்கான ஏற்பாடு. நூற்றுக்கணக்கான உறுப்பினர் களுக்கு மதிய போசனம் அனைத்தையும் எமது மட்டக்களப்புச் சங்கமே செய்தது.

## எழுதுவினைஞர் சங்க நடவடிக்கைகள்.

மட்டக்களப்பு நகரமண்டபத்தில் ஆண்டுவிழா நடந்தது. மட்/அரசினர் ஆசிரிய கல்லூரியில், மதியபோசனம் தயாரிக்கப்பட்டு அங்கிருந்து வாகனங்களில் சாப்பாட்டை மட்டக்களப்பு நகரமண்டபத்துக்குக் கொண்டு வந்து நகர மண்டபத்தின் முன் 'ஹோலில்' பாய்களை விரித்து அனைவருக்கும் சாப்பாடு பரிமாறப்பட்டது. எவ்வித பிரச்சினையும் இல்லாமல் ஆண்டு விழா சிறப்பாக நிறைவேறியது.

இந்த நிகழ்வுக்குப் பின் அ.எ.வி.ச.தலைமையகத்தில் மட்டக்களப்புக் கிளைக்கும் அதன் தலைவரான எனக்கும் நல்ல மதிப்பு ஏற்பட்டது. அப்போது அரச எழுதுவினைஞர் சங்கத்தின் தலைமையகம், கொழும்பில் 676, காலி வீதி என்ற இடத்தில் இருந்தது. தலைமைச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் என்ற வகையில் நான் ஒவ்வொரு மாதமும் கொழும்பு செல்லவேண்டியிருந்தது (எனது செலவில்). இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எனது கொழும்பு அலுவல்களையும் நான் கவனித்துக் கொண்டேன். மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக எழுது வினைஞர்களாகச் சேர்பவர்களைத் தேடிக்கண்டுபிடித்துச் சேர்ப்பதில் நான் முழுக்கவனம் செலுத்தினேன். இச்சங்கம் தனது வருமானத்தைப் பெருக்குவதற்கு மீன்பிடிக் கப்பல் ஒன்றை(TRAWLER) வாங்கி விட்டது. அதன் முன்னேற்றம் பற்றிய அறிக்கை ஒவ்வொரு மாதமும் எனக்கு வரும். தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டதால் அக்கப்பல் விற்கப்பட்டது. அதன்பின்னர் சங்கம் மேற்கொண்ட சுயவருமான முயற்சிகள் பற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை.

## வெள்ளம் 1957, புயல் 1978, சுனாமி 2004

இனி மற்றொரு முக்கிய நிகழ்வு பற்றிப்பார்ப்போம்,
கிழக்கு மாகாணத்தைத் தாக்கிய 1957 டிசம்பர் வெள்ளம், 1978 நவம்பர் புயல், 2004 டிசம்பர் சுனாமி முதலியவை மிகவும் பிரசித்தமானவை. இவை ஒவ்வொன்றிலும் நான் சம்மந்தப்பட்டுள்ளேன். 1957 டிசம்பர் வெள்ளம் தொடர்பான பல நிவாரணப் பணிகளில் நான் சம்மந்தப் பட்டுள்ளேன். ஆரையம்பதிக்கென ஒரு வெள்ள நிவாரணக்குழு உருவாக்கப்பட்டது. அதன் உறுப்பினர் என்ற வகையில் கச்சேரி, பிரதேச செயலகம், தனியார் நிறுவனம் நடாத்திய கூட்டங்களில் பங்குபற்றி

இந்நிறுவனங்கள் வழங்கிய உதவிகளைப் பெறுவதில் முன்னின்று உழைத்தேன். (இந்த வெள்ளம் காரணமாகவே ‘வீரகேசரி’ வாரமலரில் எனது ‘வெள்ளம்’ தொடர் சித்திரக்கதை வரையப்பட்டது)

மட்/கல்லடி ஸ்ரீராமக்கிருஷ்ண மிஷன் பல வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. நானும் இதில் சம்மந்தப் பட்டுள்ளேன்.

1978 புயல் 23.11.1978ல் ஏற்பட்டது. இதில் நான் பெரிதும் பாதிக்கப்பட்டேன். மேற்குறித்த தினத்திற்கு முதல் நாள், எனது நண்பரான ‘மூனாக்கானா’ ஆசிரியரும், மற்றும் சில ஆசிரியர்களும், கொழும்பில் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் செல்வதற்காகப் புறப்பட அவர்கள் என்னையும் உடன் வருமாறு வற்புறுத்தி அழைத்துச் சென்றனர். கொழும்பில் நாங்கள் விவேகானந்த மேட்டில் உள்ள Mody Hall மண்டபத்தில் தங்கியிருந்தோம். பகல்வேளையில் நேர்முகப் பரீட்சை முடிந்துவிட்டது. பின்னேரம் மழை ஆரம்பித்துவிட்டது. இரவு 8 மணிக்கு கொழும்பு - மட்டக்களப்பு ரயிலைப் பிடிக்க வேண்டும்.

## புயலில் ரயில் பயணம்

இரவு 7 மணிக்கு வெளிக்கிட்டு வெளியேற முடியாமல் மழைவிடும் வரையும் காத்திருந்தோம். அன்று ஸ்ரீ சத்தியசாயி பகவானின் பிறந்ததினம். கீழே உள்ள மண்டபத்தில் பஜனை வழிபாடு சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. நாங்கள் கீழே வந்து மேற்படி வழிபாட்டைச் சிறிதுநேரம் பார்த்துக் கொண்டிருந்தோம்.

மழை விட்டபாடில்லை. மழை இலேசாகத் தூறிக் கொண்டிருக்கும் போதே புறப்பட்டு, கோட்டை புகையிரத நிலையத்தை அடைந்தோம். ரயிலுக்குள் ஏறி எங்களுக்குரிய ‘பேர்த்’தில் அமர்ந்து கொண்டோம். உரிய நேரத்தில் ரயில் புறப்பட்டது. நாங்கள் ‘பேர்த்’தில் படுத்துக் கொண்டோம். இரவெல்லாம் மழை தூறும் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது.

கிழக்கு வெளிக்கும் நேரம். மட்டக்களப்புக்கு வந்தாகிவிட்டது என்ற எண்ணத்துடன் ரயிலின் ஜன்னல்களைத் திறந்தோம். ரயில் ஸ்தம்பித்து நிற்பது தெரிந்தது. என்ன ‘ஸ்டேஷன்’ என்று பார்த்தோம். பழுகாஸ்வெவ. அப்படியானால் ரயில் ஓடாமல் இந்த ஸ்டேஷனில் நின்றிருக்கிறது. மெல்ல மெல்ல எங்களுக்கு முழுவிபரமும் தெரிய வந்தது. இரவு முழுக்க புயல் அடித்திருக்கிறது, பழுகஸ்வெவக்கு இப்பால் ரயில்பாதை எங்கும் மரங்கள் முறிந்துகிடக்கின்றன. இதற்குமேல் புகைவண்டி போகாது. தரைப்பாதை எங்கும் மரங்கள் முறிந்து கிடப்பதால் எவ்வித வாகனப் போக்குவரத்தும் கிடையாது.

## புயலில் நடந்த கதை

வேறுவழியின்றி புகைவண்டியை விட்டிறங்கி மூட்டை முடிச்சுக்களைச் சுமந்து கொண்டு நடக்கத் தொடங்கினோம். (ரயில்பாதை வழியாக). சிலமணிநேரத்தின் பின் பொலனறுவையை அடைந்தோம். கைவசம் இருந்த பழங்கள் சிற்றுண்டிகளை உண்டோம். பக்கத்திலிருந்த கடை

ஒன்றுக்குச் சென்று பிஸ்கட், றஸ்க் முதலியவற்றை வாங்கி உண்டோம். அவர் பணம் பெற்றுக் கொள்ளவில்லை. பொலன்னறுவையிலிருந்து மீண்டும் ரயில்பாதை வழியாக நடக்கத் தொடங்கினோம். வெலிக்கந்தை 'ஸ்டேஷன்'. எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. மீண்டும் நடை. இருள் கவியும் நேரத்தில் புணானை 'ஸ்டேசன்'. புணானை அரசினர் பாடசாலையில் இரவைக் கழிக்கும் நோக்கத்துடன் மூட்டை முடிச்சுகளை இறக்கி வைத்தோம்.

சிறிது நேரத்தில் பாடசாலையின் அதிபர் வந்தார். பார்த்தால் சுப்பையா. மலையகத்தவர். எனக்கு நன்கு தெரிந்தவர். அடிக்கடி மட்டக்களப்பு கல்வித்திணைக்களத்துக்கு வந்து என்னைச் சந்தித்தவர். எங்கள் நிலைமையைத் தெரிந்துகொண்டு அவர் துரிதமாகச் செயற்பட்டார். எங்கிருந்தோ அரிசி, மரவள்ளிகிழங்கு எல்லாம் தேடிக் கொண்டு வந்தார். 'பிளேட்டு'களும் கொண்டுவந்தார். உதவியாளர்களைக் கொண்டு வகுப்பறையில் அடுப்பு மூட்டி சமையல் செய்து, மரவள்ளிக்கிழங்கு சொதி வைத்து எங்கள் எல்லோருக்கும் சாப்பாடு பரிமாறினார்.

நடந்த களைப்பு உண்ட களைப்பு எல்லாம் சேர்த்து அங்கேயே படுத்து உறங்கினோம். மெய்மறந்த தூக்கம். காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துத் தேநீர் அருந்தி பயணத்தைத் தொடர்ந்தோம்.

## கந்தசாமி செய்த உதவி

கொஞ்சதூரம் சென்றதும் 'வேன்' ஒன்று பின்புறமிருந்து வந்தது. எல்லோரும் கையைக்காட்டி அந்த வேனை நிறுத்தினோம். பார்த்தால் எங்கள் கணக்காளர் கெங்காதரம்பிள்ளையும் சக உத்தியோகத்தர்களும்.

நிலைமையை விளக்கினோம். ஆனால் எல்லோரும் செல்வதற்கு வேனில் இடமில்லை. எனவே எங்களுடன் வந்த நோயாளி கதிரேசனையும் அவருடைய இளம் மனைவி புஸ்பாவையும் அதில் ஏற்றி அனுப்பிவிட்டு நாங்கள் மீண்டும் நடையைத் தொடர்ந்தோம்.

அதிகாலையில் புணானையிலிருந்து புறப்பட்ட நாங்கள் ரயில்பாதை வழியே வந்து வாழைச்சேனையை அடைந்தோம். பசி, களைப்பு எல்லாம் எங்களை ஒரேயடியாக வாட்டின. என்ன செய்வது எங்கு செல்வதென்பது புரியவில்லை. கடைகள் எல்லாம் பூட்டியிருந்தன. மதியச்சாப்பாட்டுக்கு வழியில்லை. அப்போது எங்கிருந்தோ ஒருவர் ஓடிவந்து எங்கள் கைகளைப்பிடித்துக் கொண்டார். "வாங்க வாங்க வீட்டுக்குப் போவம். மத்தியானம் சாப்பிட்டுவிட்டுப்புறப்படலாம்" என்றார். அவர் ஒரு இளைஞர். பெயர் கந்தசாமி. ஆரையம்பதியைச் சேர்ந்தவர். வாழைச்சேனை காகிதாலையில் வேலை செய்பவர். வாழைச்சேனையில் தங்கியிருப்பவர். ஆபத்பாந்தவனாக வந்த அவரைக் கடவுளே அனுப்பிவைத்தார் என எண்ணியபடி அவருடன் சென்றோம். பரமதிருப்தியான மதியபோசனம். சுவாமி விவேகானந்தர் ஒரு முறை ரயிலில் சென்றபோது சாப்பாடு இல்லாமல் இருந்தபோது இறைவனே ஒருவரது மனதில் தோன்றிசுவாமிக்கு சாப்பாடு கொண்டுபோய்க் கொடுக்கும்படி கூறிய கதை எனக்கு ஞாபகம் வந்தது.

## மீண்டும் நடைப்பயணம்

கந்தசாமி, வாழைச்சேனை புகையிரத நிலையம் சென்று விசாரித்து வந்தார். இரவு 7 மணிக்கு புகையிரத நிலைய பணியாளர்களை ஏற்றிக் கொண்டு மட்டக்களப்புக்குச் செல்லும் என்ற தகவலைத் தெரிவித்தார். அப்பாடா! பிற்பகல் நன்றாக ஓய்வெடுத்து இரவு 7 மணிக்கு வாழைச்சேனை புகையிரத நிலையத்துக்குச் சென்று மட்டக்களப்புக்குச் செல்லும் வண்டியில் ஏறினோம். இரவு 8மணிக்கு மட்டக்களப்புக்கு வந்தோம். தெருவிளக்குகள் எரியவில்லை. திக்குத் தெரியாத காட்டில் செல்வதுபோல் பயணப் பைகளைச் சுமந்துகொண்டு நடந்தோம். கல்லடிக்கு வந்ததும் இரவு நேரத்தில் தொடர்ந்து பயணம் செய்யப் பயமாக இருந்தது. எங்காவது தங்கிவிட்டு காலையில் செல்லலாம் என்று தீர்மானித்தோம். எங்கு தங்குவது? மறுபடியும் ஒரு ஆபத்பாந்தவன் திரு.சிவலிங்கம் விஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரி. அவர் வீட்டில் மேசைலாம்பு எரிந்து கொண்டிருந்தது. யார் வீடு என்று தெரியாமலே அவர் வீட்டுக்குச் சென்று யார் என்று தெரிந்ததும் ஆனந்தமடைந்து அவர் கொடுத்த பிஸ்கட்டுக் களைக் காலிசெய்து பசிபோக்கிப் படுத்தெழும்பி அதிகாலையில் புறப்பட்டு நடந்தோம் கதிர்காமம் செல்லும் யாத்திரீகர்கள்போல. ஆரையம்பதியை அடைந்து எங்கள் வீடுகளைக் கண்டுபிடிப்பதே கஷ்டமாக இருந்தது. ஒருவாறு வீட்டை அடைந்தோம். நான் வீட்டுக்குச் சென்றபோது வீட்டில் உள்ளவர்கள் என்னுடன் முகங்கொடுத்துப் பேசவில்லை. எனது சோகக்கதையை மனைவியிடம் கூறி ஆறுதல்பெறலாம் என எண்ணியிருந்த எனக்கு அவள் என்மேல் எரிந்து விழுந்ததும் அதிர்ச்சியாகிவிட்டது. பாவம் அவள், புயல் அடித்த அன்று இரவு உதவிக்கு யாரும் இல்லாமல், குழந்தை குட்டிகளுடன் தவித்தசோகம் அவளுக்கு,

## சுனாமியின் கோரம்

1978 புயலைவிட மோசமான நிகழ்வு 26.12.2004ல் கிழக்கிலங்கையைத் தாக்கிய கடல் கொந்தளிப்பு. 26.12.2004 காலையில் வழக்கம்போல், மட்டக்களப்புக்கு மோட்டார் சைக்கிளில் புறப்பட்டேன்.அப்போது செல்வி. தங்கேஸ்வரி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். நான் அவருடைய செயலாளர். வீதியில் மக்கள் பரபரப்புடன் ஓடிக் கொண்டிருந்தனர். கல்லடிப்பாலத்தை அண்மிய வேளையில் கடல் ஊருக்குள் வருகிறது என்ற கதை என்காதில் விழுந்தது. நான் நம்பவில்லை. கடலாவது ஊருக்குள் வருவதாவது என்று எண்ணிக் கொண்டு கல்லடியில் வசித்த எனது தம்பியார் ரவிஆனந்தன் வீட்டுக்குச் செல்வதற்காகக் கல்லடிப் பிள்ளையார் கோயில் வீதியில் திரும்பினேன். மேற்கொண்டு செல்ல முடியவில்லை. கடல் தண்ணீர் வீதிக்கு வந்துவிட்டது. மட்டக்களப்புக்குச் செல்லமுடியவில்லை. கல்லடிப்பாலத்தில் தடை. மறுநாள் மட்டக்களப்புக்குச் சென்றேன். அல்லோல கல்லோலம். நாவலடி, கல்லடி, நொச்சிமுனை, காத்தான்குடி முதலிய கிராமங்களில் இருந்து வாகனங்களில் பிணங்களைக் கொண்டு வந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் குவித்தார்கள்.

தங்கேஸ்வரியும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் நின்று பகல் இரவு என்று பாராது மக்களுக்கு உதவி செய்தார்கள். அவரது வாகனத்தைக் கொடுத்து உதவினார்கள். எழுதி மாளாத சோகம், கடலோரக் கிராமங்களைக் காவுகொண்ட அந்தக் கடற்கோள் சுனாமி அதன் 7வது நினைவை (26.12.2011) அன்று இலங்கை எங்கும் நினைவு கூர்ந்து பிரார்த்தனை செய்தார்கள்.

**(தொடரும்.....)**

# தெறிகதிர்-32

மு.கணபதிப்பிள்ளை
'மூனாக்கானா'
கந்தசுவாமி கோயிலடி
ஆரையம்பதி - 03

## அன்புமணியைப்பற்றி......

இலங்கையின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான அன்புமணி இரா.நாகலிங்கம் அவர்களின் சுயசரிதம் 'செங்கதிர்' இதழில் தொடராக வருவது மகிழ்ச்சிக் குரியது. இதையொட்டி திரு.சபாரெத்தினம் அவர்கள் அன்புமணி பற்றிய சில குறிப்புக்களைக் கூறியிருந்தார். பக்கத்து வீட்டுக்காரனாகிய நானும் அவரை இளவயது முதல் பழகியவன் அறிந்தவன் என்ற வகையில் சில நிகழ்வுகளைக் கூறவிரும்புகிறேன்.

நான் 1981ம் ஆண்டு அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றபின் எனக்குச் சோம்பேறித்தனம் பிடித்து விட்டது. தொடர்ந்து தொழிலில் ஈடுபட்டதன் காரணமாகவும் இது இருக்கலாம். எனவே சிவசிவா என்று சாய்மனையில் சாய்ந்து கிடந்தாலும் இடைக்கிடை அன்புமணி அவர்களைச் சந்திப்பதற்காகச் சென்றுவருவேன். அவ்வேளைகளில் அவர் என்னிடம் அடிக்கடி கூறும் ஒரு வசனம். "நீங்கள் எழுதத் தொடங்குங்கள்" என்பதுதான். அடிக்குமேல் அடிஅடித்ததால் அம்மி மட்டுமல்ல என்பேனாவும் நகரத் தொடங்கியது. யுத்தகளத்தில் சோர்ந்து நின்ற அர்ச்சுனனை கிருஷ்ணபரமாத்மா கீதை மூலம் உற்சாகப்படுத்தியதுபோல என்னையும் உற்சாகப்படுத்தியவர். இதனால்தான் இந்த வயதிலும் இன்றுவரை எழுதிக்கொண்டேயிருக்கிறேன். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் 'தன்னைப்போல் பிறரையும் நேசி' என்று சொல்வார்கள். இதன்படி மற்றவர்களையும் உற்சாகப்படுத்தி உதவி செய்து அவர்களை உயர்த்திவிடும் உயர்ந்த பண்பு அவரிடம் இருந்தது. இதன் காரணமாகத்தான் நான் 'இலக்கிய நெஞ்சம்', 'கவிதை நெஞ்சம்' என்ற இருநூல்களை வெளியிட முடிந்தது. கையெழுத்துப் பிரதிகளை அவரிடம் கொடுத்துவிட்டால் போதும் ஏனையவற்றை அவரே செய்து அரங்கேற்றிவிடுவார். எழுது வினைஞர்கள் அதிகாரிகளிடம் கடிதங்களை நீட்டும்போது அதிகாரி கையெழுத்து இடுவதைப்போல நானும் கையெழுத்தைப் போட்டுவிடுவேன். ஏனையவை அவர் பொறுப்பு. இந்த ஒரு உயர்ந்த பண்பு அவரிடம் உண்டு. இதை அவரோடு புழங்கிய எல்லோரும் அறிவார்கள். கூத்திலே என்னை ஊக்கப்படுத்தி பல்கலைக்கழகமேடையிலே என்னை ஏற்றிமதிப்பளித்த பேராசிரியர் மௌனகுரு அவர்களையும், கவிஞராகவும், நூலாசிரியராகவும் என்னை உயர்த்திய அன்புமணி அவர்களையும் என்னால் என்றுமே மறக்கமுடியாது.

அன்புமணி அவர்களிடம் ஒரு திறமையும் இருந்தது. இது என்னை அதிர்ச்சியடைய வைத்தது. என்னுடைய 'லெச்சுமி கலியாணம்' என்ற கூத்து பல ஊர்களிலும் ஆடப்பட்டது உங்களுக்குத் தெரியும். இக் கூத்தைக் கரையாக்கன்தீவு என்ற ஊரிலுள்ள காளிகோவில் விழாவின்போது ஆடுவதற்காக அவ்வூரவர்கள் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். நிகழ்ச்சி நடத்த வேண்டிய தினத்தன்று பிற்பகல் வள்ளத்தில் புறப்படுவதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளை அக்கூத்திலே விதானையார் பாத்திரமேற்று நடிக்க இருந்தவர் சுகயீனம் காரணமாக அன்று வரமுடியவில்லை. என்ன செய்வதென்று கலங்கிக் கொண்டிருந்தபோது, "அந்த விதானையார் பாத்திரத்துக்குரிய பாடல்களைத் தாருங்கள். படித்துக்காட்டுங்கள்" என்று கூறினார். நானும் படித்துக்காட்டினேன். "நீங்கள் பயப்படாதீர்கள். நிகழ்ச்சியை நிறுத்தாதீர்கள். வாருங்கள் போவோம்" என்று வள்ளத்தில் ஏறிக்கொண்டார். வள்ளத்துக் குள்ளேயும் ஒத்திகை நடந்தது. இருந்தாலும் எனது இரத்த அழுத்தம் குறைய வில்லை. களரியில் ஆடினோம். அவரும் ஆடினார். அதற்குரிய நடிகரை விடத்திறமையாக ஆடிப்பாடினார். ஆடி முடிந்ததும் அவர்காலில் விழுந்து நன்றி தெரிவிக்க வேண்டும் போலிருந்தது. இப்படிப்பட்ட ஒரு திறமைசாலிதான் அன்புமணி என்பதைத் துணிவோடு கூறிக்கொள்கிறேன். அன்புமணி அவர்களின் பண்புக்கும் திறமைக்கும் இவை இரண்டு எடுத்துக்காட்டுகள்.






- கோத்திரன்

# அருள் மழையும் பெருவெளியும்!

**“ஆகமங்கள் எங்கே அறுசமயம்தான் எங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே - பாகத்து
அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யார் அறிவார் பேசு”**

**- திருக்களிற்றுப்படியார்**

தமிழர்களிடம் தத்துவங்கட்குக் குறைவில்லை. அவை சரியா தவறா என்ற விவாதங்கட்கும் குறைவில்லை. ஆனால் நிறைவானது எதுவோ அது குறைவானதாகத்தான் உள்ளது. உலகில் பக்தர்கள், ஞானிகள், அடியார்கள், வீரர்கள் என்று பலர். எனினும் வள்ளல்கள் என்போர் வரையறுக்கப்பட்ட ஒரு சிலரே. செம்பியன், குமணன், விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன் என முதல் ஏழும்; அக்கிரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன், கன்னன், அரிச்சந்திரன் என இடை ஏழும்; பாரி, எழினி, நள்ளி, மலையன், பேகன், ஓரி, காரி என கடை ஏழுமென இருபத்தொருவர் மாத்திரமே இனங்காட்டப்பட்டுள்ளனர். இவர்கள் எல்லாம் பொருட்செல்வத்தைக் கொடுத்து பெருமையடைந்தவர்கள். வாழ்வின் வறுமையை ஒழிக்கத் துணையானவர்கள். இந்தப் பத்தியின் கருப்பொருளான ‘வள்ளலார்’ எனும் வடலூர் இராமலிங்க மாமுனிவர் அள்ளக் குறையாத அருளமுதம் தந்தவர். மனவறுமைக்கு மருந்திட்டவர். அன்பையும், கருணையையும் அறமாக்கி மதமாக்கிக் காட்டியவர். எதிரிக்காகவும் இறைவனிடம் இறைஞ்சியவர். எண்ணற்ற பதிகங்களை இயற்றியவர். அண்டியோர் பசி அகற்றி அமுதிட்டு அணையாத அடுப்பினை ஏற்றி வயிற்றுப் பசிக்கும் மனவெறுமைக்கும் ஒருசேர உணவளித்திட்ட பெருமகன். அதற்காகவே ‘அருட்பிரகாச வள்ளலார்’ எனப் பெயர் நிலைத்தவர். “கண்மூடிப்பழக்கங்கள் மண்மூடிப்போக” என்றுரைத்தவர். ‘கடைவிரித்தேன் கொள்வாரில்லை’ என்று தனது மனவலியைச் சொல்லிவிட்டுப் போனவர். “தாகமாய் இருக்கிறேன்.” என்று யேசு ஆண்டவர் குறிப்பிட்டது தண்ணீர் கேட்ட கூக்குரலல்ல, அன்றைய அறிவிலிகள் பற்றிய ஆதங்கமான வார்த்தைகளே அவை. ‘கடைவிரித்தேன் கொள்வாரில்லை’ என்பதும் அப்படித்தான். மூடர்களே நீங்கள் தேடிப்போவதுதான் என்ன? என்பதுதான் அது.

பக்தர்கள் என்போர் மக்களிடையே வாழ்ந்து கடவுளை உணரவைக்க முற்படுகிறவர்கள். செதுக்கப்பட்ட உருவங்களிடம் இறைவனை இனங்காண வைக்கிறவர்கள். ஆனால் சித்தர்கள் இயற்கையின் வெளிப்பாட்டினை விளக்கி இறைவனை உணரவைக்கிறவர்கள். இந்தவகையில் பக்தர் பாதை வேறு; சித்தர் பாணி வேறு. பக்தர்களிடம் சாதியம் இருந்தது.

சனாதன கோட்பாடுகளும் தவிர்க்கமுடியாதவாறு சாத்திரங்களும் இருந்தன. சித்தர்களிடம் தெளிவான நுண்ணறிவுத் தேடல் இருந்தது. அது இறை வனைப் பற்றியது. மாத்திரமல்ல மனிதனைப் பற்றியதுமாக அமைந்தது. பக்தர்களின் விளக்கம் நீண்டிருக்கும். சித்தர்களின் ஆக்கம் சிறிதாக இருக்கும். 'திருமூலர்' அதற்கோர் உதாரணம். சந்தர்ப்பத்துக்காக தளர்ந்து போவார்கள் பக்தர்கள். சித்தர்தம் முடிவில் என்றும் விட்டுக் கொடுப்பில்லை. அதனால் இவர் 'கிறுக்கர்கள்' எனப்பட்டதுமுண்டு. சிலவேளைகளில் மக்களைவிட்டு விலகிவாழ்வதுண்டு. அது காடாகவும் - இருக்கும் வெளியாகவும் இருக்கும். இதயத்தின் எண்ணங்களை - அதை ஒளிவடிவில் உருவாக்கிப் பார்த்ததால் இறைவனுக்கு இவன் உருவம் கொடுக்க வில்லை. சைவசித்தாந்தம் கூட உருவ வழிபாட்டுடன் ஒத்துப்போகவில்லை. 'கேட்டாரும் அறியாதான் கேடொன்றுமிலான் கேளாதே எல்லாம் கேட்டான்.' என திருவாசகம் சொல்லியிருக்கிறது.

சித்தர்கள் மக்களை நேசித்ததால் வைத்தியத்தையும் உணர்ந்தார்கள். மூலிகைகளின் பயன்களை முதலில் கண்டவர்களும் மருத்துவமாக்கிய வர்களும் சித்தர்களே. 'போகர்' அதற்கோர் உதாரணம். அவரது 'நவபாஷாண முருகன் வடிவம்' இன்றும் நம்முன் உள்ளது. அவரே சித்த மருத்துவத்தின் தந்தை. இங்கேதான் ஒருவாதம் வருகிறது. 'வள்ளல் பெருமான்' ஒரு பக்தரா? சித்தரா? தமிழ் நாட்டில் தனது சமதர்மத்தை விதைக்க வள்ளலாரின் சன்மார்க்கக் கருத்துக்களை எடுத்துக் கொண்டவரும் பட்டிதொட்டியெலாம் பாதம் பதித்தவருமான தோழர் ப.ஜீவானந்தம் அவர்கள் இவர் ஒரு சித்தரே என்கிறார். ஏனெனில் போகரின் சித்தவைத்திய முறைமைகள் வள்ளலாரிடமும் இருந்தது என்கிறார் ஜீவா. தமிழகத்தில் சமதர்மத்துக்கு வழிவிட்ட 'சன்மார்க்கம்' பெரியாரின் சுயமரியாதைக்கும் துணைபோனது என்பது வரலாறு. 18ம் நூற்றாண்டில் 'வடலூரில்' தென்றலாக வீசத் தொடங்கிய சன்மார்க்கக் காற்றானது 19ம் நூற்றாண்டில் 'ஈரோடில்' புயலாக இறங்கியிருந்தது. தமிழகத்தின் தன்மான விடிவுக்கு வித்திட்ட பெருமை ஆன்மீக அடியாரான வள்ளல் பெருமானையே சாரும். "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்றவர். இந்த இரண்டு வரிகளை வைத்துக் கொண்டே ஜீவா இரண்டு மணிநேரம் பேசுவார் என்கிறார்கள்.

வள்ளல் பெருமானால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் புதிய சமுதாயப் புரட்சிக்கு மிகப்பெரும் தடையாக மடாலயங்களும் வர்ணாச்சிரமவாதிகளும் வெகுண்டெழுந்தனர். எப்போதும் ஒரு புதிய வரவுக்கு பழைய தலைமுறை அல்லது பகுத்தறிவு குன்றிய கூட்டம் முரண்பட்டு நிற்பதே இயற்கையானது. சாதியத்தையும் புரோகிதத்தையும் 'சன்மார்க்கம்' சாடிநின்றதைப் பொறுக்காதவர்கள் பணபலத்தையும், பதவியையும் சண்டித்தனத்தையும் காட்ட முற்பட்டனர். சன்மார்க்கம் சைவ சித்தாந்தத்தின் அடிப்படையானது என்று தெரிந்தும் தன்னை எப்போதும் எந்த இடத்திலும் 'இந்து' எனக் குறிப்பிட்டிருக்காத 'நாவலர் பெருமான்' ஏன் எதிர்த்தார் என்பது புதிராகவே உள்ளது. நாவலர் தொடக்கிய நிறுவனங்களின் பெயர்களிலும் 'சைவப்பிரகாச' என்ற பதம் இருக்கிறது. (பின்நாட்களில் நமது அறிவாளிகள் அதனை 'இந்து' என்று மாற்றியமை வேறுகதை) அந் நாட்களில் வள்ளலாரை மாத்திரமே சைவப்பிரகாச வள்ளலார் அல்லது

சிவப்பிரகாச வள்ளலார் என அழைத்துள்ளனர். இறுதிநாட்களில் இவர் உருவ வழிபாட்டை விடுத்து 'ஒளி' வழிபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தார். எனவே நாவலர் பெருமானின் 'சைவப்பிரகாச' வில் வள்ளலாரின் ஊடுருவல் இருக்கிறதா? என்பதை உன்னிப்பாக உணரவேண்டும். ஏனெனில் நீதிமன்றில் எழுந்து நின்று மதிப்பளித்ததோடு அவர் மிகப் பெரிய ஞானி என்றும் வள்ளல் பெருமானுக்கு நாவலர் பெருமான் நற்சான்று கொடுத்திருக்கிறார்.

'அருட்பா - மருட்பா' வாதத்தில் மறுவாதம் புரிந்த 'வாரியார்' சுவாமிகள்;

**"தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதும்யாம்**
**தாதாதா என்றுலகில் தானலைந்தோம் - போதாதா"**

(எழுதா - எழுதாக்குறைக்கு என்செய்வேன், நான் தாதாதா என்று தான் அலைந்தோம் போதாதா") என்றும்

**"கண்ணப்பன் ஏத்துநுதல் கண்ணப்ப! மெஞ்ஞான**
**விண்ணப்ப நின்றனக்கோர் விண்ணப்பம்....."**

எனத் தமிழ் கொஞ்சுகிறது. அது தேமதுரத்தமிழ், அதனால்தான் அது 'திருவருட்பா' என்றிருக்கிறார். பதினெட்டாயிரத்துக்கு மேற்பட்ட பிரபந்தங்கள் பாடிய ஒரே ஞானி வள்ளலார்தான். இரண்டு ஆண்டுகள் மாத்திரம் திண்ணைப் பாடசாலையில் பாடம் படித்த வள்ளலார் எப்படி இத்துணை இலக்கண - இலக்கிய வழுவற்ற பாடல்களைத் தரமுடிந்தது? ஏழு வயதில் இவரைப் பார்த்து "நீ யார் தம்பி. என்ன வாசிக்கிறாய்" எனக்கேட்ட அட்டாவதானம் சபாபதி முதலியாருக்கு வள்ளலார் பதில் இப்படி இருந்தது.

**"இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது மற்று**
**என்று வருமோ அறியேனே - துன்று மல**
**வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து**
**சும்மா இருக்கும் சுகம்"**

அந்த ஏழாம் பராயத்திலேயே மேடையேறிப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தவர் இவர். பண்ணிசைபாடி தேவாரங்களைத் தெவிட்டாமல் பேசிவந்திருக்கிறார். அந்த இளம் வயதிலேயே முருகன் மேல்பக்தி உண்டாயிற்று. அந்தப் பக்தியின் அடையாளமே "ஒருமையுடன் உனது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்....." என்பன போன்ற பாடல்கள் உருவாயின. எனினும் பிற்காலம் எச்சமயமும் சாராத சமரச சன்மார்க்கம் இவரது கொள்கையானது. சமயம் எதுவும் இழிவுடையதன்று என்பதும் சாதியம் பேசும் சமயம் சமத்துவத்தைத் தடுக்கின்றபோது அவற்றை வெறுத்தொதுக்கிட வேண்டுமென்பதும் சன்மார்க்கத்தின் கோட்பாடானது. "பசியோடிருப்பவனுக்கு முதலில் அதைப் போக்கிட வேண்டும். பசித்தவன் செவிகட்கு இறைபற்றிய எதுவுமே ஏறாது. பட்டினி கிடந்து இறைவனைத் தேடுவது பரம் பொருளை அறியாத பேதமையே" என்றவர். அதற்கான முதலில் ஆக்கியது 'சத்திய தருமசாலை' எனப்பட்டது. உடம்பு வளர 'சத்திய தருமசாலை', உயிர் வளர 'சத்திய ஞானசபை', உணர்வுகள்

உயர 'சத்திய வேத பாடசாலை' என்று 'சன்மார்க்க' திட்டங்கள் தலை தூக்கியபோதுதான் வர்ணாச்சிரமத்துக்கு வயிற்றெரிச்சலானது. 'கருணை' தான் அன்பு - அதுதான் தெய்வம் என்றார். தனக்காக அன்றி பிறர்க்காகவும் இறைஞ்சும் பெருமனம் கொண்ட துறவியே வள்ளல் பெருமான். இவரைப்போல இவருக்கு முன்பும் ஒருவர் இருந்தார். அவர் சமணமதத்தின் தலைமை தீர்த்தக்காரராக வாழ்ந்த 'மகாவீரர்' ஆவார். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற பாடல் வள்ளலால் உயிரினங்கட்கு அப்பாலும் அன்பினை அளித்தார் என்பதன் ஆதாரமே! கால்தனில் செருப்பணிந்தால் - நிழலில் நடந்தால் சிற்றுயிர்கள் சிதைந்து போகுமே என்பதற்காகப் பாதணி இன்றி பகற் பொழுதின் வெயிலில் வெறுங்காலுடன் நடந்த ஒரே துறவி வள்ளல் பெருமான். 'இந்தத் திருவுளத்துக்கு ஈடேது' என்று ஒருமுறை பேரறிஞர் அண்ணா பேசியிருக்கிறார்.

தமிழ் நாட்டில் சுயமரியாதையும் தமிழுணர்வும், ஆன்மீக எழுச்சியும் அருள்புனலாகப் பாய்ந்த 18ம் நூற்றாண்டின் வரலாற்றுநாயகர் வள்ளலார் என்றால் அது மிகையாகாது. "சுயமரியாதை இயக்கத்தின் வழிகாட்டி வள்ளலார்தான்" என ஜீவா, பெரியார், திரு.வி.க, அழகிரிசாமி, முனைவர் பேராசான் மு.வ, அண்ணா என சிநததனையாளர்கள் பலர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். 1935ல் பெரியாரால் நிர்வகிக்கப்பட்ட 'குடியரசு பதிப்பகத்தில்' இருந்து வெளியான 'இராமலிங்க சுவாமிகள் பாடற் திரட்டு' இதற்கோர் உதாரணம். அருட்பா ஆறாம் திருமுறையிலிருந்து நூறு பாடல்கள் இந்நூலில் உரையுடன் உள்ளடக்கம் பெற்றுள்ளன. "எழுத்தில் முழங்கிய வடலூரார் கொள்கையை செயலில் காட்டியவர் பெரியார்" என திருக்குறள் முனுசாமி குறிப்பிட்டுள்ளார். சுயமரியாதை இயக்கத்துக்குத் தான் வந்ததற்கு வள்ளலாரே காரணம் என காங்கிரஸ் முன்னாள் தொண்டரான கோவை ஐயாமுத்து எழுதுகிறார். "அண்மைக்கால தமிழகத்தின் அறிவு வரலாற்றில் வள்ளலார் ஒரு எல்லைக்கல் ஆகும்" தோழர் ஜீவாவின் நிலைப்பாடு இது. ம.பொ.சி. 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என ஒரு பெரிய நூலே எழுதியிருக்கிறார். 1970ல் வடநாட்டுக்காரரான 'இர்ஷித்' என்பவர் 'இராமலிங்க சுவாமிகளும் சுமரியாதை இயக்கத்துக்கான உறவும்' என நூல் ஒன்று வெளியிட்டி ருக்கிறார். 1972ல் மு.வளவன் என்பவரால் 'அருட்பாவும் அரசியல் இயக்கங்களும்' என்ற நூல் எழுதப்பட்டிருக்கிறது. 1948ல் 'வடலூரும் ஈரோடும்' என்ற புத்தகத்தை எழுதியவர் திருக்குறள் வி.முனுசாமி அவர்கள். திருமங்கலம் மணிமாறனின் 'ஒருசிலரில் ஒருவர்' என்பதும், சாமி சிதம்பரனாரின் 'வடலூராரின் வாய்மொழி'யும் 1959ல் வெளிவந்தவை. 'வடலூராரின் வாய் மொழி' பின்பு 'வள்ளலார் காட்டிய வழி' என மாற்றம் பெற்று மறுபதிப்பாகவும் வந்தது. பாவேந்தரின் மைந்தர் மன்னர்மன்னனின் 'கருப்புக் குயிலின் நெருப்புக்குரல்' என்பது 1985ல் வெளிவந்தது. 'திருவருட்பிரகாச வள்ளலார்' என்ற கடலூர் நாராயணசாமி நாயுடுவின் வெளியீடு, 02.10.1932 நடந்தேறிய வள்ளலாரின் 110வது பிறந்ததின விழாவில் ரசிகமணி டி.கே.சிதம்பரநாதமுதலியார் தலைமை ஏற்றுப் பேசிய நீண்ட சொற்பொழிவு என்பன 1932 நவம்பரில் வெளியிடப்பட்டவை. இச்சொற்பொழிவை 'குடியரசு' பத்திரிகையும் வெளியிட்டிருக்கிறது. சாமி சிதம்பரனாரின் இன்னொரு நூல் 'தமிழர் தலைவர்'. ஆய்வாளர் 'குணா'வின் 'தமிழர் மெய்யியல்' என்பனவும் வள்ளலார் பெருமை

பேசுபவை. வள்ளலாரின் 'திருவருட்பா' ஒரு பகுதி அவரது கையெழுத்திலேயே 2003ல் வ.உ.சி. நூலகம் வெளியிட்டிருக்கிறது.

தமிழ்நாடு ஆந்திர எல்லையில் காடும் மலையும் சேர்ந்த ஊர் சித்தூர். 'நக்ஸல்பாரி' களினால் பிரபலம் பெற்ற இடம். அந்த ஊரின் கோடியில் உள்ள ஒரு ஆச்சிரமத்துக்குச் சனங்கள் வந்தபோய்க் கொண்டிருக்கிறார்கள். காரணம் அங்குள்ள ஒரு சித்த மருத்துவ நிலையம். அங்கு பரணிதாசன் என்று ஒருவர் இருக்கிறார். இவர் ஒரு பிரம்மச்சாரி. என்றும் வெள்ளை உடையுடனே இருப்பார். சாமியார் வேடம் எதுவுமில்லை. இலவசமாக வைத்தியம் செய்கிறார். விரும்பினால் அன்பளிப்புச் செய்யலாம். பல்வகையான மருத்துவம் இவருடையது. ஓய்வு நேரங்களில் சிலைகள் வடிக்கிறார். இவரால் உருவாக்கப்பட்ட 'வள்ளலார்'. உருவம் நவபாஷாணத்தால் ஆனது எனச் சொல்லப்படுகிறது. அந்தச் சிலைக்கு தினமும் அபிஷேகம் நடக்கிறது. ஆராதனையும் இடம்பெறுகிறது. இதேபோல் இன்னும் இரண்டு சிலைகள் சரஸ்வதி, முருகன் இவரால் நவபாஷாணத்தில் செய்யப்பட்டவை எனச் சொல்லப்படுகிறது. அதற்கான ஆய்வுகள் இப்போ மத்திய அரசின் தொல்பொருள் ஆணையத்தால் நடாத்தப்படுகின்றன. வள்ளலாரின் மருத்துவ ஏடுகள் தனக்குக் கிடைத்தாக இவர் கூறுகிறார். தாம் செய்வது போகர் - வள்ளலார் வளர்த்த சித்த வைத்தியமே என்கிறார்.

இதேபோன்று இன்னொரு கதையுண்டு. ஒருமுறை ஆற்றமுடியாத வயிற்றுவலியுடன் ஒருவர் வள்ளல் பெருமானிடம் வந்தார். அவரை ஒரு இருக்கையில் அமர்த்திய வள்ளலார் குறிப்பிட்ட வலிப்புள்ள பகுதிக்கு எதிராக ஒரு கண்ணாடிப் பேழையில் நீரை வைத்தாராம். அதற்கு எதிர்ப்புறமாக நேரே கல்லுப்போன்ற ஒன்றை வைத்துவிட்டு அதையே சிலநிமிடங்கள் பார்த்துக்கொண்டிருந்தாராம். தெளிந்த அந்த நீர் சில விநாடிகளில் நீல நிறமாக மாறத்தொடங்கியது. அந்நீரை நல்ல வெயில் தகிக்கும் இடத்தில் கொட்டிவிட்டு வருமாறு இவர் பணித்தார். வந்தவரும் அப்படியே செய்தார். காரணம் அது நச்சுத்தனமானது, நிழல் விழும் இடத்தில் கொட்டினால் சிறிய உயிரினங்கள் இறந்துபோகும் என்ற கருணையின் திருவுளமேயாகும். வந்தவரின் அவஸ்தை தீர்ந்து விட்டது, வள்ளலாரோ இதை யாரிடமும் சொல்லிவிடக்கூடாது என்று சத்தியம் வாங்கிக்கொண்டார். வள்ளல் பெருமானின் பெருவெளிக்கலப்பின் பின் மூத்த சீடர் வித்துவான் வேலாயுதர் பிள்ளைக்கு இது சொல்லப்பட்டிருந்தது.

கோட நல்லூர் சுந்தரசுவாமிகள் மிக அற்புதர். அவர் தொட்டால் நெருப்பு வரும் எனச் சொல்லுவார்கள். அது நடந்தும் இருந்தது. ஒருமுறை இவரைப்பார்க்க அவர் வந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கிய பின் உரையாடத் தொடங்கினர். சிலமணி நேரம் கடந்தது. சுந்தர சுவாமிகள் புறப்பட்டுப்போனபோது அவரது சீடர்களில் ஒருவர் கேட்டார்; "சுவாமி தாங்கள் வள்ளலாருக்கு நேர் எதிரே உட்காராமல் சற்றுத் தள்ளி ஓரமாக உட்கார்ந்து பேசினீர்களே! ஏன்?" என்று. வள்ளல் பெருமானுக்கு நேராக நான் இருந்திருந்தால் தன் ஆத்மசக்தியால் என்னை ஈர்த்துவிடுவார். அது பெரிய மின்சக்தி போன்றது என்றாராம் சுந்தர சுவாமிகள். அவர்போனபின்பு இவர் மனம் கலங்குகிறார். கண்ணீர்

விடுகிறார். சீடர்கள் காரணம் கேட்டார்கள். வள்ளலார் சொன்னார். "இங்கு வந்துபோன திருமேனி ஆறுமாதத்துள் மறைந்து விடும். அதற்காகவே கலங்குகிறேன்" என. சொன்னதன்படியே சுந்தர சுவாமிகளின் மறைவு நடந்தது.

சிதம்பரம் திருவொற்றியூர் நெல்லிக்கா பண்டாரத்தெரு. வள்ளலார் ஒருமுறை அந்தத் தெருவில் நுழைந்தனர். ஊரார் தடுத்து "சுவாமி இந்தத் தெருவில் ஒரு சந்நியாசி 'திகம்பரராக' இருப்பார். இத் தெருவால் போவோர் எல்லோரையும் இதோ ஆடு போகுது மாடு போகுது கழுதை போகுது, நரிபோகுது என்றெல்லாம் சொல்லி எள்ளி நகையாடுவார். நீங்கள் இந்த வழிச் செல்ல வேண்டாம்." என்றனர். வள்ளல் பெருமான் சிரித்துவிட்டு அந்தத் தெருவாலே நடக்கலானார். எல்லோரும் வேடிக்கை பார்த்தனர். தெருவுள் இவர் தலை தெரிந்தவுடனேயே "இதோ மனிதர் வருகிறார். இதோ மனிதர் வருகிறார்." எனச் சொல்லிக் கொண்டே திகம்பரரான தன் உடலைப் பொத்தியபடி ஓடத் தொடங்கினார். அதன் பின் அந்த ஊரில் அவர் காணப்படவே இல்லை. அதே ஊரில் கோயில் மண்டபத்தில் இவர் தங்கினார். நள்ளிரவு இவரது காதணியை ஒரு கள்வன் லாவகமாகக் கழற்றினான். "ஏழை பாவம்" இவன் என்று எண்ணியவர் நித்திரையில் மறுபக்கம் புரள்வது போல் புரண்டு மற்றக்காதணியையும் கழற்ற வழி விட்டாராம். இது 'வள்ளல் கருணை' என்ற வாரியாரின் சொற்பொழிவில் கூறப்பட்டது.

உலகில் உள்ள மனிதர் முதல் நடக்கும் - நடவாத, அசையும் - அசையாத, நகரும் எல்லாமே மாற்றுப் பொருள் ஆகின்றன என்ற உண்மைத்தத்துவம் வள்ளலார் தந்தது. இதையே 'கால்மார்க்ஸ்' அவர்கள் "மாறும் என்பது மாறாது. மாறாதென்பது மாறும்" என்றிட்டார். மரணம் பயம் தருவது அல்ல. அதற்குப் பயப்படுகிறவன் உயிர் இருந்தும் செத்தவன். மரணத்தைப் பற்றிக் கவலைப்படாதவனே மரணத்தை வென்றவன். அவனே இறவாவரம் பெற்றவன் என்று இவர் பாடியிருக்கிறார். 'மரணம் வாழ்வின் முடிவு அல்ல' என்கிறது 'சத்தியவேதம்'.

கல்லாதவர்கட்குக் கல்வியை ஊட்ட முதியோர்கல்வி நிலையம் அமைத்தவர் வள்ளல் பெருமான். திருவள்ளுவரையும் திருக்குறளையும் பாமர மக்கள் படித்தறிய முதன் முதலில் வகுப்புகள் நடத்திய பெருமையும் இவரைத்தான் சாருகிறது. இந்த இரண்டையும் இந்தியாவில் முதலில் செய்து காட்டினார் இவர். 'இர்ஷத்' என்ற வடநாட்டார் இது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அருட்பா - மருட்பா பொறாமைப் போராட்டத்தில் பேசாமலே வெற்றியீட்டிய பெருமையர். தமிழ் நாட்டுக்கு வெளியிலும் சன்மார்க்கமும் திருவருட்பாக்களும் சென்றிருக்கின்றன. இலங்கைக் கோயில்களில் பாடப்பட்ட "ஒருமையுடன் உனது திருமலரடி....." மற்றும் பத்திரிகையாளர் ஈழகேசரி பொன்னையா அவர்களின் 'குரும்பசிட்டி சன்மார்க்கசபை' என்பன உதாரணங்கள்.

சமத்துவம் சார்ந்த சன்மார்க்கத்தின் முக்கிய நோக்கு பிறருக்காக வேண்டுதல் செய்தல் என்பது. இதுவே "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனத் திருமூலம் மூலம் வெளியானது. இதையே ஔவையார் "இவ்வள வேனும் இட்டுண்மின்" என உரைத்திருக்கிறார்.

இது உணவுக்காக மட்டுமல்ல உணர்வுக்காகவும்தான் கூறப்பட்டது. இவ்வழியைச் சாதித்தவர் இயேசு ஆண்டவர். அதனால் அவருக்குச் சிலுவை கிடைத்தது. இவருக்குக் 'கடைவிரித்தேன் கொள்வாரில்லை' என்றானது. மானுடப் பண்புகள் மரத்துப்போனால் 'மனிதம்' என்ன செய்யும்? எனது மக்களைக் கடைத்தேற்ற இயேசு தனது இரண்டாவது வரவை இந்தியாவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றவர் சுவாமி விவேகானந்தர் (பேராசிரியர் ரா.கணபதி அவர்களின் 'அறிவுக்கனலே! அருட்புனலே' என்ற சுவாமிஜியின் வாழ்க்கைச் சரிதம்-1956) அந்த இரண்டாவது வரவை நாம் உணரவில்லையே என்றொரு 'ஏக்கம்' இப்போது வருகிறது. "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்...." என்ற வள்ளலார் பாடல் அப்பரின் "மாசில் வீணையும் மாலை மதியமும்..." பாடலை மீட்டுகிறது. 'ரிக்' வேதத்தின் பத்தாவது மண்டலம் 90ம் அதிகாரத்தில் சுலோகங்களின் முதற்பகுதியில் பிரஜாபதியாகிய படைப்பின் தெய்வம் மனிதனாக உலகிற்கு வருவதையும் இரண்டாவது பகுதியில் இப்புருஷ பிரஜாபதி உலகின் பாவங்களுக்காகத் தன்னைப்பலி ஆக்குவதையும் அழுத்தி உரைத்திருக்கிறது. அப்படியாயின் இவ்வுலகத்தில் இயேசு பிரானின் வரவும் முடிவும் வள்ளல் பெருமானின் வரவும் முடிவும் ஒரே மாதிரி இல்லையா? வள்ளலார் 'மரணமிலாப் பெருவாழ்வு' என்று சொன்னதை 'சத்தியவேதம்' "மரணம் வாழ்வின் முடிவு அல்ல" என்றிருக்கிறது.

ஆண்டவர் இயேசுவின் சீடர்களிடையே இருந்ததுபோன்ற ஒற்றுமையீனமே வள்ளலாரின் மாணவர்களிடமும் இருந்தது. அதனாலேயே தன் தவத்தின் மகிமைகளையும் அரிய சித்தவைத்தியத்தின் தெளிவுகளையும் இவர் தெரிவிக்காமலேயே போய்விட்டார். ஏனெனில் நன்மைக்கானவை தீமைக்காகவும் திசைமாறிப்போய்விடலாம் என்ற பயமே. வள்ளலார் மறைவின்பின் வடலூரில் நடந்த குரோதச் சண்டைகளும் அவற்றை தீர்க்கப் பாடுபட்ட 'வாரியார்' சுவாமிகள் பட்ட அவஸ்தைகளும் அந்தத் தள்ளாத வயதில் தளராத உறுதியுடன் அவர் நீதிமன்றம் சென்று வந்ததும் இன்றும் நினைவில் நிற்பவை.

1823ம் ஆண்டு ஒக்டோபர் ஐந்தாம் திகதி வள்ளல் பெருமான் தோன்றிய நாள். தென்னாற்காடு மாவட்டமுள்ள சிதம்பரத்துக்குத் தெற்கே உள்ள 'மருதூர்' இவரது பிறப்பிடம். அப்பா இராமையாப்பிள்ளை. ஆன்மீகப் பிரசங்கம் செய்கிறவர். அம்மா சின்னம்மா. இவருக்கு அண்ணன் சபாபதிப்பிள்ளை - அப்பாவைப் பின்பற்றி தொழில் செய்கிறவர். சிறு வயதிலேயே அன்னையை இழந்த வள்ளலார் வளர்ந்தது அண்ணன் - அண்ணியிடம்தான். இவருக்கு இன்னொரு அம்மா அண்ணி. இவர்மேல் அத்துணை பாசம். அண்ணாவின் கண்டிப்புக்கு ஆளாகும்போது அண்ணியின் அன்பான அரவணைப்பு - தன் தத்துவங்களை எல்லாம் அந்தச் சிறுவயதில் அண்ணியிடம்தான் ஒப்புவிப்பார். அந்த ஏழுவயதில் அண்ணாவின் சுகவீனத்தால் ஒருநாள் அவரது கடமையை இவர் ஆற்றப்போய் அறிவுலகில் மேன்மை பெற்றார். 'சம்பந்தர்' பதிகங்கட்கு இந்த எழு வயது இளம் குருத்து எடுத்துரைத்த விளக்கங்கள் ஒரு மணி நேரம் தொடர்ந்ததாம். இப்படிப்பல நாட்கள் பக்தி இலக்கியம் நடந்தது, இவர் பாடசாலைப் படிப்பும் நின்று போனது. ஆடுமாடுகள் போன்ற விலங்கினங்கூட அசையாது நின்று இவரது பேச்சைக் கேட்குமென

ம.பொ.சி குறிப்பிடுகிறார். வேதாந்தம், சித்தாந்தம்; வடமொழிகள், தென்மொழிகள் இவருக்கு தாராளமாகவே இவர் நாவில் தவழ்ந்ததாக வள்ளலார் பற்றிய அ.சு.மணியன் எழுதிய "வள்ளலார் வாழ்க்கைத் தத்துவங்கள்" என்ற நூலில் காணக்கிடைக்கின்றது. இவரது நாட் குறிப்பொன்றின் ஆதாரப்படி 'அட்டமா சித்திகள்' இவரால் முடியு மெனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த எட்டுசித்திகள்; பூதவுடலை அணுபோல் சிறியதாக்குதல், மலைபோல் பெரியதாக்குதல், காற்றுப்போல இலேசாக்குதல், பளுவாக்குதல், அனைத்தையும் ஆளுதல், தன்வயப் படுத்துதல், கூடுவிட்டுக் கூடுபாய்தல், விரும்பியதை அனுபவித்தல் என்பன.

இவர்பற்றிய ஒரு அதிசயச் செய்தியொன்றுண்டு. இவரை நிழற்படம் எடுக்கப்பலர் முனைந்தார்கள். எடுத்தபடங்கள் எதிலும் இவர் உருவம் பதியவில்லை. இவரது சீடர் வித்துவான் வேலாயுதப்பிள்ளை இவருக்குத் தெரியாமல் டெல்லியிலிருந்து 'ராவுத்தர்' என்ற நிழற்படக் கலைஞரை அழைத்திருந்தார். அவரும் இவரது அசைவுகளை அச்சொட்டாகப் படம் பிடித்தார். டெல்லியில் அவை கழுவிப்பார்க்கப்பட்டன. ராவுத்தர் அதிர்ந்து போனார். படங்களில் எல்லாம் ஒரு புகைமண்டலமான பின்னணியுள் சிறிய ஒளிமாத்திரமே தெரிந்தது. இது நடந்து சிலகாலங்களில் இவருடன் நடுவெயிலில் சீடர்கள் நடந்து போனார்கள். அப்போதுதான் ஒரு அதிசயம் வெளிவந்தது. அது இவர் பின்னால் நிழல் இருக்கவே இல்லை என்பது. எனவே நிழல் விழாத ஒருவரை எப்படி நிழற்படம் எடுப்பது? என்ற உண்மை அவர்கட்குப் புரிந்தது. இந்த உண்மையை வெளியிட்டவர் ஒரு வெள்ளைக்காரர் ஆவார்.

1874 சிறீமுக வருடம் தைமாதம் 13ந்திகதி நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு சுற்றி நின்ற சீடர்களிடமும் அடியவர்களிடமும் விடைபெற்று ஒரு தீபத்துடன் சென்னை மேட்டுக்குப்பத்தில் உள்ள அறையொன்றில் நுழைந்தவர் அதன்பின் காணப்படவேயில்லை. சாளரங்கள் எதுவுமற்ற அந்த அறையின் பூட்டு மூன்று நாட்களின் பின் வெள்ளைக்காரரான கலெக்டரால் உடைக்கப்பட்டது. ஆனால் உள்ளே எதுவுமில்லை. இந்த அதிசயம் இன்னும் கண்டு பிடிக்கப்படவேயில்லை.

அறையுள் நுழையுமுன் வள்ளல் பெருமான் எழுதிய இறுதியான பாடல்:

**"பிச்சுலகர் மெச்சப் பிதற்றி நின்ற பேதையனேன்**
**இச்சையெலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே**
**அச்சமெலாம் தீர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன்**
**நிச்சலும் பேரானந்த நித்திரை செய்கின்றேனே."**


"மண்ணில் பிறந்தவன் ஏற்றத்தாழ்வின்றி வாழ்தல் வேண்டும். ஒருவன் இன்னொருவனுக்காக இறைவனிடம் மன்றாட வேண்டும். அதுவே வள்ளல் பெருமானின் சமரச சன்மார்க்கம். சோதியாய் வந்தது சுடராகிப்போனது. மரணமில்லாப் பெருவாழ்வு வள்ளலார்க்கு வாய்த்தது. சமயவாதிகள் சொல்லும் தவம், உண்ணா நோன்பும், வெயில் மழை பனி தாக்குதலும் நீரில் மூழ்குதலும் நெருப்பில் நிற்றலும் என்பர். திருவள்ளுவரோ உலகின் முயற்சியான் வரும் துன்பங்களைப் பொறுத்தலும் பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமையுமே என்கிறார்.

"தன் முயற்சி உடையார் வந்த துன்பங்களைத் தாங்குதலும் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமாகிய இரண்டுமே தவத்துக்கு உரு ஆகும். துறந்து காட்டிற்குப்போய் கண்மூடித் தியானிக்கும் உரு அன்று என்பதற்காகவே அறமே தவம் என நிறுத்தாது 'தவத்திற்கு உரு' என்றிருக்கிறார்.வேள்வி எனப்பிற உயிர்களுக்குத் தீங்கு செய்தமையை மறுக்கவே 'உயிர்க்கு உறுகண்' என்றிருக்கிறார். இவ்வகை இலக்கணங்கள் வள்ளலாரை வள்ளுவர் வழியில் காட்டி நிற்கின்றன.

**"உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை**
**யற்றே தவத்திற் குரு"**

(தவம் - குறள் - 261)

---



# இயக்கம்

இரவு.
கடலில் வந்துகொண்டிருந்த படகுகளில் ஒன்று மற்றதைப் பார்த்துக் கேட்டது:-

"அதோ.... கடற்கரையில் தன்னந்தனியாக நின்று ஒளிவீசும் கலங்கரை விளக்கத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"


"தெரியவில்லையே....." என்றது இரண்டாம் படகு.
முதல் படகு சொன்னது:-
"கூட்டமாகத்தான் பணி ஆற்றலாம் என்பதில்லை. தன்னந்தனியாகக் கூட ஒருவர் தொண்டாற்றலாம் என்று நமக்கு அது கூறவில்லையா?"

வார்த்தைகளை அது நறுக்கி வைத்தது:-

**"தனி என்றிருப்பினும்**
**பணி என்றிரு."**

நன்றி:- **'காசி ஆனந்தன் கதைகள்'**

# மட்டக்களப்பு மாநில
## மண்வாசனைச் சொற்கள்
## பட்டியல்– X



மட்டக்களப்பு மாநிலம் எனப்படுவது வடக்கே வெருகல் ஆற்றையும் தெற்கே குமுக்கன் ஆற்றையும் கிழக்கே வங்காள விரிகுடாக்கடலையும் மேற்கே ஊவாமலைக்குன்றுகளையும் எல்லைகளாகக் கொண்ட நிலப்பரப்பாகும். தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தையும் அம்பாரை மாவட்டத்தையும் உள்ளடக்கிய பிரதேசம் எனக் கொள்ளலாம். இப்பிரதேசத்திற்கென இப்பிரதேசத்தில் மட்டுமே வழங்கி வரக்கூடிய வட்டார வழக்குத் தமிழ்ச்சொற்கள் ஏராளம் உள்ளன. அவை படைப்பிலக்கியங்களிலும் இப்பிரதேச எழுத்தாளர்களால் எடுத்தாளப்படுகின்றன. அத்தகைய மண்வாசனைச் சொற்களை 'செங்கதிர்' வாசகர்களுக்காக இப்பகுதியில் மாதாமாதம் தொடர்ந்து தொகுத்துத் தருகிறார் எழுத்தாளரும் முன்னாள் வடகிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளருமான **திரு.செ.எதிர்மன்னசிங்கம்** அவர்கள்.

136. **நாசமறுவான்** - கூடாதவன்
137. **வழிசல்** - கெட்டவன்
138. **பாடாவாரி** - கடுமையான சுகயீனம்
139. **பம்மாத்து** - நடிப்பு
140. **சுணக்கம்** - தாமதம்
141. **குளப்படி** - தொல்லை
142. **தொந்தரவு** - கஷ்டம் கொடுத்தல்
143. **மாச்சல்** - சோம்பல்
144. **ஒண்ணா** - முடியாது
145. **ஏலா** - முடியாது
146. **வறட்டல்** - கறியை இறுக்கமாகச் செய்தல்
147. **பொருபொருக்க** - குழம்புக்கூட்டு இறுக்கமாக இருத்தல்
148. **வறுவல்** - வறுத்தெடுத்தல்
149. **சும்மா** - பகிடிக்காக
150. **கரள்** - தேய்காய்ப்பூவில் வரும் கரள்

# ஏனெஸ்ற் தளையசிங்கம் மக்கின்ரயர்
## (EARNEST THALAYASINGAM MACINTYRE)

**- எஸ்.பொ.**



ஐராங்கனியின் தமிழ்ப் பதிப்பு சம்மந்தமாக மீண்டும் மக்கின்ரயருடன் கலை - இலக்கியச் சல்லாபத்தில் ஈடுபடும் வாய்ப்பு விடிந்தது. ஐராங்கனியை எழுதும் பொழுது எவ்வாறு சோ∴பகிள்ஸ் உபகரித்த அன்ரிகனி அவர் மனத்திரையில் வலம் வந்திருக்குமோ, அவ்வாறே என் யாழ்ப்பாணச் செலவுகளின்போது பிரதான வீதியிலுள்ள யாழ்பா ஹொட்டலில் ஏ.ஜே.கனகரத்னா, அழகு சுப்பிரமணியம் ஆகிய இருவருடன் 'தாகசாந்தி' செய்தவாறே இலக்கியச் சல்லாபங்களிலே ஈடுபட்ட இனிய முன்னிரவுப் பொழுதுகள் என்மனசில் வலம் வந்தன. அங்கே தமிழின் வளத்தையும் வல்லமைகளையும் ஆங்கில மொழிமூலம் முன்னெடுத் தவர்கள் பற்றிய விமர்சனங்களும் எழும். ஆனந்தகுமாரசாமியின் தாய் ஆங்கிலமாது என்கிற காரணம், தமிழர் போற்றிய கலை விழுமியங்களை உலகறியச் செய்த தமிழ் உபகாரி ஆனந்த என்கிற உரிமை பாராட்டுதலை பொய்யாக்கிவிடுமா? முதலாவதாகத் தொகுக்கப்பட்ட உலகச் சிறுகதைத் தொகுதியில் தமிழரின் படைப்பு வல்லபத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய முதல்வன் அழகு. தமிழில் எழுதப்படாதபடியால் அது தமிழ் வேரடி ஆற்றல் அல்லாது போகுமா? 1956ஆம் ஆண்டின் தனிச்சிங்கள மசோதாவுக்குத் தன்னுடைய தமிழ் எழுத்தாற்றலைச் சமர்ப்பணஞ் செய்த குறுமுனி ஏ.ஜே.கனகரத்தினாவின் வழிகாட்டுதலினாலேயே 1956க்கும் பிற்பட்ட தமிழர் கலை - இலக்கிய முனைப்புகள் நெறிப்படுத்தப்பட்டன என்பது அவர் ஆங்கிலம் கற்பித்தார் என்பதினால் பொய்யாகிவிடுமா? யாழ்குடாவில் நாங்கள் பூஜித்த இன்னொரு பெயர் தம்பிமுத்து, கவிதைப் படைப்பை இன்னொரு கட்டத்திற்கு முன்னெடுக்க உழைத்த தம்பிமுத்து தமது சஞ்சிகையை ஆங்கிலத்திலேயே நடத்தினார் என்பதினால் அவர் யாழ்ப் பாணத்திலே பிறந்த கவிதை ஆளுமை என்பதை மறுக்க முடியுமா? ஆனந்த குமாரசாமி தொடக்கம் தமிழின் படைப்புச் சிறப்புக்கும் ஆளுமைக்கும் மரியாதையும் கௌரவமும் சம்பாதித்து தரும் பேருபகாரிகள் வரிசையிலே என்றென்றும் ஏனெஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரயருக்கும் சிறப்பிடம் உண்டு. அத்தகைய ஓர் ஆளுமையின் நூலுக்கு முன்னீடு எழுதுதல் சங்கையானது; கௌரவமானது.

தமிழ் ஈழரின் நவீன கலை இலக்கிய வரலாறு எழுத விழைந்த பேராசிரியர்கள் சிலரின் வித்துவச் செமியாக் குணத்தினால் அதாப்பியங்கள் எழுந்தன; வழுக்கள் மலிந்தன. அவற்றை நேர் செய்தமையையும் என் தமிழ் ஊழியமாக விரித்து கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக வாழ்கிறேன். அறிந்தோர் இதனை அறிவர். தமிழ் ஈழரின் நாடகக் கலையின் வாழ்வும் வளமும் சம்மந்தமாகப் பதிவாகியுள்ள அதாப்பியங்கள் சிலவற்றை

நேர் செய்வதற்கு இந்த முன்னீடு வகை செய்வதினால் தர்மமும் உவகையும் என்வசம்.

தற்கால நாடக இலக்கிய வளர்ச்சி பற்றி எழுதும் பொழுது இலேசாகக் கலையரசு சொர்ணலிங்கத்தைச் சுட்டிக்காட்டி, பின்னர் சு.வித்தியானந்தன் 1960களிலே துவக்கிய நாடகத்தின் மீளுருவாக்கம் என ஓங்காரம் எழுப்பி, பேராசிரியர் கா.சிவத்தம்பியின் 'கனத்த' பங்களிப்புக்குத் தேவாரம் பாடி அவருடைய சீடப்பிள்ளைகள் இன்று செய்யும் புதுப்பிக்கும் திருப்பணிகளைச் சிலாகிப்பதிலே வந்து நிற்கின்றது. நாடகம் கற்பிப்பதற்கான பாட விதானம் தயாரித்துவிட்டதாகத் தம்பட்டம் வேறு. மக்கின்ரயர் என்கிற தமிழ் ஈழரின் மிகப் பெரும் நாடக ஆளுமைக்கு எத்தகைய இடம் அதில் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை நாடக ஆர்வலர்கள் அறியும் வகையில் அறிக்கை செய்ய முடியுமா?

எழுபதுகளிலே, நான் ஸ்ரீலங்கா அரசின் நாடகக் குழுச் செயலாளராய் செயற்பட்ட காலத்தில் நாடகத் துறையிலே மீளார்வத்துடன் ஈடுபடலானேன். தமிழ் நாடக மேடையிலே தடம்பதித்த சுஹேர் ஹமீதுவுடன் நட்புக் கனிந்தது. மேடை நாடகம் பற்றிப் புதுக்கிய ஞானத் தேடல் துவங்கியது. லயனல்வெண்ட் தியேட்டரிலே வைத்து முதற் தடவையாக மக்கின்ரயரின் நாடகமேதைமையைப் பற்றி அவர் கூறினார். சந்திக்க முனைந்த போது அவர் அவுஸ்ரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து விட்டதாக அறிந்தேன். பின்னர் மக்கின்ரயர் சுத்த சுயம்புவான ஒரு பறங்கியர் என்கிற பிரச்சாரம் பரப்பப்பட்டு நாடகக் கலைக்கு அவர் ஆற்றும் தனிச்சிறப்பு வாய்ந்த பங்களிப்பு தமிழர் மான்மியமாகாது எனப் பல்கலைக் கழகத்தின் பெரும் பீடாதிபதிகள் அதாப்பியம் செய்த பொழுது நான் விக்கித்துப் போனேன்.

அவுஸ்திரேலியாவிலே, அவருடன் பழகிய பொழுதுதான் அழகு சுப்பிரமணியம் புனைகதைத்துறைக்கும், தம்பிமுத்து கவிதைத் துறைக்கும், ஏ.ஜே. கனகரத்தினா விமர்சனத்துறைக்கும் ஆற்றிய பங்களிப்பினை நிகர்த்ததும் மேலானதும் மக்கின்ரயர் மேடை நாடகத்தின் மேம்பாட்டிற்காகச் செய்துள்ள பங்களிப்பு என்கிற சத்தியத்தின் தரிசனம் ஏற்பட்டது. புலம்பெயர்ந்த தமிழர்களுடைய கலை - இலக்கிய பங்களிப்புக் குறித்துச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறை கருத்தரங்கு ஒன்றினை நடத்தியது. துறைத்தலைவர் பேராசிரியர் இந்திரா அழைத்ததினால் நானும் கலந்துகொண்டேன். என் பேச்சிலே மக்கின்ரயர் நாடகத்தின் மூலம் ஆற்றும் பங்களிப்பினைக் குறிப்பிட்டேன். அக்கூட்டத்திலே ராணிமேரிக் கல்லூரியின் ஆங்கில ஆசான் கவிஞர் தமிழச்சி தங்கப்பாண்டியனும் கலந்து கொண்டார். விளைவு?

DIASPORIC LONGING AND THE CHANGING CONTOURS OF RESISTANCE IN THE PLAYS OF ERNEST THALAYASINGAM MACINTYRE

எனும் ஆய்வு நூலைத் தமிழச்சி சமர்ப்பித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்திலே தமிழ் ஈழர் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற முன்னோடி என்ற பெருமையைத் தனதாக்கிக் கொண்டார். அத்துடன் இலங்கையின் வித்துவ உலகத்தின் அதாப்பியங்களுக்கு அப்பாலாக மக்கின்ரயரின் தனிச் சிறப்பு மிக்க நாடகப் பங்களிப்பினை உலகறியச் செய்தார்.

ஏனெஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரயர் தமது தமிழுணர்வினைச் சமரசஞ் செய்யாத மனிதர். மனிதநேயம் போற்றும் தமிழ் ஈழர். கிரேக்க நாடக மரபையும், நாட்டிய சாஸ்த்திரத்தையும் உள்வாங்கி உலகின் தலைசிறந்த நாடகமேதைகளான இங்கிலாந்தின் ஷேக்ஸ்பியர், அமெரிக்காவின் ஹென்றி மில்லர், ஐரோப்பாவின் பிரெக்ட் போன்றோருடைய பாணிகள் அனைத்தையும் ஒருசேர இலங்கையர் சுவைப்புக்கு முன்வைத்த நாடக மேதை. மொழிகளைக் கடந்த படைப்பு வடிவமாகவும் அவர் நாடகக் கலையை நேசிக்கிறார். மேடை நாடகத்தின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்யும் அனைத்துத் துறைகளையும் கற்றுப் பயின்று ஈடுபாட்டுடன் உழைக்கின்றார். நாடகம் எழுதுதல், இயக்குதல், நடித்தல், தயாரித்தல், மேடையேற்றுதல் என நாடகக் கலையின் ஊற்றாகவே அவர் வாழ்க்கை அமைந்தது. இலங்கையின் மேடை நாடகத்தினை புத்தாயிரத்துக்குள் பொலிவுறச் செய்தவரும் அவரே. சகல அர்த்தங்களிலும் பரிமாணங்களிலும் உலக நாடகக் கலையின் முன்னெடுப்புக்கே பங்களிப்புச் செய்துள்ள சாதனையாளர். இந்தச் சாதனை அபூர்வமானது. அத்தகையர் யாழ்ப்பாண வேரடி மண்ணிலே விளைந்தவர் என்பது குறித்துத் தமிழ் ஈழர் பெருமைப் படலாம். யாழ் மண்ணிலே தமிழராய்த் தமிழ் கற்றவர். ஆரம்ப கட்டத்திலே அவர் தன்னுடைய திறமைகளை நாடகக் கலையில் வெளிப்படுத்திய பொழுது 'யாழ்ப்பாணத்துப் பையன்' (Jaffna Boy) என்று விமர்சகர்களாற் செல்லமாக அழைக்கப்பட்டவர். நாடகம் அவர் சுவாசமாக மட்டுமல்ல அவருடைய தணியாத படைப்பு மூர்க்கமாகவும் வெறியாகவும் அமைந்தது. இலங்கை விமானப்படை உத்தியோகம் துறந்து முழுநேர நாடகக் கலைஞராக வாழவும் தீர்மானித்த விறுக்கர். அவரால் புலம்பெயர்ந்த தமிழுக்கு ஒரு கலை - இலக்கிய முகவரி கிட்டியுள்ளது.


தமது யாழ்ப்பாண வேர்களை சிரத்தையுடன் நினைவூட்டுகிறார். மாவிட்டபுரம் தமது பூர்வீகம் என்றும்,தம்முடைய தாத்தா கிறிஸ்தவராய் மக்கின்ரயர் என்கிற பெயரைப் பூண்டதாகவும் அவர் அன்னா ஹிச்கொக் என்னும் பறங்கிப் பெண்ணைக் காதலித்து வதுவை செய்தார் எனவும் வரலாறு சொல்லுகிறார். நான் சம்பத்தரிசியார் கல்லூரியிலே படித்த அதே காலகட்டத்தில் தமிழையும் ஒரு பாடமாகக் கற்றுச் சீனியர் பரீட்சையிலே சித்தியும் பெற்றுள்ளார். இந்த உண்மைகளை அறிந்த பிறகாவது தமிழ் நாடக வளர்ச்சியில் அவருடைய பங்களிப்பு உரிய முறையில் அங்கீகரிக்கப்படுமா? இலங்கையின் படைப்பு ஓர்மத்தை நாடக மேடையிலே நிலைநாட்ட அவரே நாடகங்களை எழுதினார். அவற்றின் எண்ணிக்கை சுமார் இருபது. அனைத்தும் மேடையேற்றப்பட்டுள்ளன. பெரும்பாலானவை நூல்களாகவும் வந்துள்ளன. இவற்றிலே சில தமிழர் பிரச்சினைகளை உணர்ச்சி வசப்படாது சிங்களரும் ஏற்றுக் கொள்ளும் வகையிலே முன்வைக்கின்றன. இன்றும் அவருடைய நாடகங்களிலே இனவேற்றுமை பாராட்டாது தமிழரும் சிங்களரும் நடிக்கின்றனர். மக்கின்ரயருடைய நாடக அக்கறைகள் உலகளாவியது. இன்று இலங்கையில் பயிற்சியிலுள்ள நாடக மேடையை உருவாக்கி நிலைபெறச் செய்ததில் அவருக்குப் பெரும்பங்கு உண்டு. தேரவாத பௌத்தத்தினை ஏற்றுள்ள சிங்களவர் மத்தியிலே, சுதேசியமான நாடகமரபு இருக்கவில்லை. பேராதனைப் பல்கலைக்கழகத்தின ஆங்கிலத்துறைத் தலைவரான லுடவைக் ஆங்கிலமொழி மூலம் நாடக மரபு ஒன்றினை அறிமுகஞ் செய்துவைத்தார். தனிச்சிங்கள மேட்டிமைக்கு அது ஒத்துப்போகவில்லை.

சிங்களப் பேராசிரியர் சரத்சந்திர பெரிதும் முயன்று கிழக்கிலங்கைத் தமிழர் மத்தியிலே வழக்கிலிருந்த கூத்து மரபு, நாட்டிய சாஸ்திரத்தில் பிரஸ்தாபிக்கப்படும் நாடகச் சங்கதிகள், கிரேக்க மொழி நாடகம் பற்றி முன்வைத்த கருத்துக்கள் எல்லாவற்றையும் கலவை செய்து 'மனமே', 'சிங்கபாகு' ஆகியவற்றை சிங்கள மரபுக்குகந்த நாடகங்களாக மேடையேற்றினார். அவை சிங்கள மேட்டிமையைப் பிரீதி செய்த அளவிலே வெற்றி பெற்றன. சிங்கள மொழிமூலம் பின்னர் நாடகத்தினை முன்னெடுக்க முனைந்தவர்களாலே சரத்சந்திர உருவாக்கிய பாணியைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியவில்லை. அது நச்சுக்கொடியைத் தூக்கித் தோளிலே போட்டுக் கொண்டு மரித்தது. இருப்பினும் சிங்களரின் மேடை ஆர்வங்கள் சிதறாது முன்னெடுக்கப்படுவதற்கு மக்கின்ரயர் உபகாரியாக விளங்கினார். சிங்கள நாடக விமர்சகர்கள் அவர் குறித்துப் பேசியும் எழுதியும் வருவதைப் பார்க்கும்பொழுது அவர் பங்களிப்புக் குறித்துத் தமிழ் ஈழர் சாதித்த மௌனம் நம்மை நாணச் செய்யும். மக்கின்ரயருடைய பிறிதொரு வெற்றி தமது நாடகங்களுக்கு அவுஸ்திரேலியாவிலுள்ள வெள்ளைக்கார மக்களையும் ஈர்த்ததாகும். இதனாலும் அவர் உலகநாடகக் கலைஞர் என்பது உறுதியாயிற்று.

சுதந்திரம் பெற்றதிலிருந்து தன்னுடன் தானே போர் தொடுத்து வாழும் பரிதாபத்திற்குரிய தேசமாக இலங்கை மாறிய அறுபது ஆண்டுகால வரலாற்றினை நடுவுநிலமை பிறழாது துணிவுடன் அணுகியுள்ளதுடன், துயருக்குக் காரணங்களாய் விளங்கிய மத்தியதரவர்க்கத்தின் மேல் நாட்டினரின் அபக்குவ, அதிகார மோக, கோழைத்தனமான தலைமைத் துவத்தைச் சாடுவதுடன், கிரேக்க நாடக - துன்பியல் நாடக மரபின் சாரத்தை ஜராங்கனியாக மக்கின்ரயர் படைத்துத் தந்துள்ளார். நாடகத்தின் பேசுபொருள் குறித்து அவர் தனது முன்னுரையிலே மனந்திறந்து பேசுகிறார். கூறியது கூறலைத் தவிர்ப்போம். இந்த நாடகத்தின் சுவையுள் திளைப்போம்.


வரவு 'ஓசை' 2012 - ஐப்பசி

காலாண்டு கவிதைச் சிறப்பிதழ்



குரல்: 07 இசை: 21

ஆசிரியர்: மூதூர் முகைதீன்

வெளியீடு: மூதூர் கலை இலக்கிய ஒன்றியம், நொக்ஸ் வீதி, மூதூர் - 05

விலை - 30/=

மனிதநேயம் மண்ணில் மலர ஒலிக்கும் ஓசை

தெறிகதிர்-33

# ஈழத்துப் படைப்புலகமும் விமர்சனமும் விமர்சகரும் – சில குறிப்புகள்

- பேராசிரியர் செ.யோகராசா

எனது உரையொன்றின் பதிவு தொடர்பாக விசுவாமித்திரனுக்கு ('செங்கதிர்' யூலை 2012) அளிக்கப்படவேண்டிய விளக்கங்களை ஈழத்து விமர்சன வளர்ச்சிப் புலத்திலே தரவேண்டியிருப்பது தவிர்க்க வியலாததாகின்றது.

எனினும், அதற்கு முன்னர் விசுவாமித்திரன் அடிச்சறுக்கி விழுந்திருப்பது பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது ஆய்வரங்க உரையில் கூறப்பட்டது, விசுவாமித்திரன் குறிப்பிட்டுள்ளது போன்று 'ஈழத்துப் புனைகதை இலக்கியம் குறிப்பாக நாவல் இலக்கியம் ஈழத்துமூத்த விமர்சகரின் பார்வை படாமையினாலேயே அது வளர்ச்சியடைந்திருக்கிறது' என்பதன்று. மாறாக 'ஈழத்து நவீன கவிதை மூத்த விமர்சகர்களின் பார்வைபடாமையினாலேயே வளர்ச்சியடைந்திருக்கிறது' என்பதேயாகும். ஆகவே இவ்வடிப்படையிலேயே என்னுடைய விளக்கம் அமைகின்றது.

ஈழத்து மூத்த விமர்சகர்கள் என்று கருதப்படுபவர்கள் பலரும் அறிந்துள்ளது போன்று பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோரே.

மேற்கூறிய இருவரும் ஏறத்தாழ ஐம்பதுகளின் நடுப்பகுதியளவிலேயே ஈழத்து விமர்சன உலகினுள் பிரவேசிக்கின்றனர். அவ்வேளையிலேயே பிரக்ஞை பூர்வமாக ஈழத்து இலக்கியம் என்பது உருவாகத் தொடங்கியது. அதனை முன்னெடுத்தோர்களுள் இம் மூத்த விமர்சகர்களிருவருக்கும் முக்கியமான பங்கு இருந்தது. தேசிய இலக்கிய உருவாக்கம், மண்வாசனை இலக்கிய உருவாக்கம் என்பன ஒருபுறமும் மரபுவழிப் பண்டிதர்களுடன் மோத வேண்டிய நிலை மறுபுறமும் அவர்களை எதிர் கொண்டிருந்தது. இவர்களிருவரும் மார்க்சிய இலக்கியக் கோட்பாட்டினை வரித்துக் கொண்டவர்கள். ஆதலின், அவ்வழிசார்ந்த முற்போக்கு இலக்கிய உருவாக்கத்திலும் அதிக சிரத்தை கொண்டிருந்தனர். தேசியம், தேசிய ஒற்றுமை, சமுக உள்ளடக்கம், சமுக விமர்சனம், மண்வாசனை, பிரச்சினை களுக்கான தீர்வு முதலான விதங்களிலே புனைகதை எழுதுபவராக ஈழத்துப் புதிய தலைமுறை எழுத்தாளர்களைத் தயார்படுத்துவது அவர்களது பொறுப்பாகவிருந்தது. இவ்வாறான எழுத்தாளர்கள் பலர் அடிமட்டத்தினராக விருந்தனர். இவ்விமர்சனர்களில் தங்கியிருக்க வேண்டியுமிருந்தனர்.

கவிதைத்துறையைப் பொறுத்தவரையில் ஒப்பீட்டு ரீதியில் நோக்கும்போது முற்போக்கு அணிக் கவிஞர்கள் எண்ணிக்கையளவிலே குறைவானதாகவே

இருந்தனர். (50, 60களில் மரபுவழிக்கவிதை வடிவங்களே முக்கியம் பெற்றிருந்தன.) மேற்கூறியபண்புகளைக் கொண்டிருக்கின்ற (மார்க்சிய வழிசார்ந்த) முற்போக்கு எழுத்தாளர்களும் கவிஞர்களுமே மூத்த விமர்சகர்களது பார்வைக்குட்பட்டனர். ஏனையோர் இவர்களால் கவனிக்கப்படுவது அரிதாகவே இருந்தது. முற்போக்குக் குணாம்சம் கொண்ட படைப்புகளாக இல்லாவிடினும் எழுதியோர் தம் நோக்குவழிப்பட்ட முற்போக்கு சார்புடையவரெனில் அங்கீகரிக்கப்பட்டனர். மூத்த விமர்சகர்களது முற்போக்கு வழிச்சென்றவராயினும் அவ் இலக்கியப் பார்வையில் நெகிழ்ச்சி கொண்டிருந்த நு.்.மானாலேயே 'மஹாகவி' இனங்காணப்பட்டார் என்பதும் நீலாவணனை முதன்மைப்படுத்திய 'மு.பொ' முற்போக்கு அணிசார்ந்தவரல்லர் என்பதும் இவ்வேளை நினைவு கூரத் தக்கவை.

எவ்வாறாயினும் நாவல், சிறுகதைத் துறையில் கொண்டிருந்த கரிசனையை கவிதைத் துறையில் மூத்தவிமர்சகர்கள் காட்டவில்லை என்பதே எனது அவதானிப்பாகும். அபிப்பிராயமாகும்.

நந்தினிசேவியரின் எழுத்துக்களை விசுவாமித்திரன் தான் தவறாகக் கூறியவிடயத்துடன் தொடர்புபடுத்தியிருந்தமையால் அதற்கு விளக்கம் கூறவேண்டிய அவசியம் இல்லாது போய்விடுகின்றது. விசுவாமித்திரனின் மற்றொரு வினா மூத்தவிமர்சகர்களுக்கு மாறுபாடான கருத்துக்கள் அவர்களுடன் நெருங்கிப்பழகுவோரால் முன்வைக்கப்படுவதும் சார்ந்துள்ளது. இதற்கும் ஒரு வரலாற்றுப் பின்புலமுண்டு. எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து முற்போக்கு அணிசார்ந்தவரே மூத்த விமர்சகர்களது குறைபாடுகளை எடுத்துக்கூறும் போக்கு உருவாக ஆரம்பித்திருந்தது. மூத்தவிமர்சகர்களது வழியிலே சென்றவராயினும் நு.்.மான், கவிதை தொடர்பான முற்போக்கு விமர்சனப் பார்வையைக்கண்டித்திருந்தார். (உ+ம்- 'அழியாநிழல்கள்' முன்னுரை). நு.்.மானுடன் இணைந்து இருபதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கியம் எழுதிய சி.மௌனகுரு, மௌ.சித்திரலேகா ஆகியோர் அதுவரைகால முற்போக்கு விமர்சகளது - மூத்தவிமர்சகரது பார்வைக்கு மாறான பல கருத்துக்களை தமது நூலில் முன்வைத் திருந்தனர்.

கைலாசபதி அவர்கள் தனது தமிழ்நாவல் இலக்கியம் நூலில் தெரிவிக்கும் சிலகருத்துக்களை (உ+ம் - நாவல் உலகின் இருண்டகாலம்) மறுதலித்து எனது கட்டுரை அவர்காலத்திலேயே மல்லிகையில் வெளிவந்தது.

சிவத்தம்பி அவர்கள் தலைமையில் தெல்லிப்பளை கலை இலக்கிய மன்றம் (தொண்ணூறுகளிலே) நடத்திய கருத்தரங்கொன்றிலே சிவத்தம்பி அவர்களின், 'உயிர்ப்பு' சிறுகதைத் தொகுப்பு முன்னுரை தொடர்பான எனது மறுப்புக்கள் சிலவற்றை வெளிப்படுத்தியிருந்தேன். மறுமலர்ச்சிக் காலக்கதைகள் தொகுப்புத் தொடர்பாக சிவத்தம்பி அவர்களது அபிப்பிராயம் தொடர்பாக ஆத்மா, மலர்ச்செல்வன் ஆகியோர் மட்டக்களப்பில் ஒழுங்கு செய்திருந்த கலந்துயைாடல் ஒன்றிலே மாறுபாடான கருத்துக்கள் என்னால் முன்வைக்கப்பட்டன.

மூத்தவிமர்சகர்கள் ஈழத்தின் ஆரம்பகால இலக்கிய சஞ்சிகைகள் தொடர்பாக ஆழமாக அவதானிக்கவில்லை என்ற மறுப்பினை எனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்தேன். (தொண்ணூறுகளின் ஆரம்பத்திலே நான் ஒப்பீட்டு ரீதியில் மட்டக்களப்பு நவீன இலக்கிய வளர்ச்சியின் தளர்ச்சி பற்றிக் கூறி பலத்த கண்டனங்களுக்குள்ளாகியமையும் இவ்வேளை நினைவிற்கு வரவே செய்கிறது. இது பற்றி வீ.ஆனந்தன், சிவரெத்தினம் ஆகியோர் பதிவு செய்துள்ளனர்.)

இவ்வாறு இன்னும்பல உதாரணங்களுள்ளன. விரிவஞ்சித் தவிர்க்கிறேன். நெருக்கமான உறவு சுதந்திரமான பார்வைக்குத் தடையாகவே இருக்கும். என்ற விசுவாமித்திரனின் சிந்தனை வேடிக்கையாகத் தோன்றுகின்றது.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களது போராளிகளுடன் நெருக்கமான உறவைப் பேணி வருதல் என்ற விசுவாமித்திரன் கூற்றில் வரும் 'போராளிகள்' என்பது அவரது சீடர்களையே கருதுவதாகக் கருதுகிறேன். உண்மையில் சிவத்தம்பி அவர்களுக்கு நெருக்கமான சீடர்கள் இருந்தனர் என்று பட்டியலிடுவது கடினமானது. அவர் எல்லோருடனும் நல்லுறவைப் பேணிவந்தவர் என்பது எனது அவதானிப்பு. ஒரு பேச்சிற்காக அவ்வாறு சீடர்கள் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் அவர்களது தொடர்புகள் காரணமாக பேராசிரியர் தொடர்பு அற்றுப் போவதற்கான சூழல் ஏற்பட வில்லை என்பதும் கவனத்திற்குரியது.

தவிர ஈழத்துப்படைப்புலகில் இது தொடர்பான தற்போதைய நிலை என்று விசுவாமித்திரன் எதைக் கருதிக் கேட்கிறார் என்பதில் குழப்பமுண்டு.

நாவல் இலக்கிய வளர்ச்சியின் தற்போதைய நிலை பற்றிக் கருதுகின்றாரா? விமர்சன வளர்ச்சியின் தற்போதைய நிலை பற்றிக்கருதுகின்றாரா? மூத்த விமர்சகர்கள் தொடர்பான எனது பார்வையின் தற்போதைய நிலைபற்றிக் கருதுகின்றாரா? என்பதே அத்தகைய குழப்பமாகின்றது. அதற்கான தெளிவினை விசுவாமித்திரன் தருவாராயின் எனது விளக்கமும் தொடரும்.

அது சரி, விசுவாமித்திரன் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு தவறான தகவலை தருவதற்குக் காரணம் அன்னாரது ஞாபகசக்தியின் பலவீனமா அல்லது பிழையான அவ்வாறான தகவல்கள் வேறொருவராலும் பதிவு செய்யப்பட்டதா? என்றொரு வினா என்னுள் எழுகின்றது. கூடவே லெனின் மதிவாணம் எனது அவ்வுரைபற்றி ஆரம்ப காலத்தில் சரியாகவும் (?) மறுபடி அண்மையில் அதனைப் பிழையாகவும் பதிவு செய்திருந்த நிகழ்வும் கிளர்கின்றது.

எவ்வாறாயினும் இனி வருங்காலத்தில் சரியாகவும் தெளிவாகவும் விளக்கங்கோருவதனை விசுவாமித்திரனிடமிருந்து வாசகர்கள் எதிர் பார்க்கின்றார்கள்!

# விசுவாமித்திர பக்கம்

## முன்னீடு

இந்தப் பக்கத்தில் 'நோக்கல்' பகுதியில் கே.எஸ்.சிவகுமாரன் அவர்களின் **'ஒரு திறனாய்வாளரின் இலக்கியப் பார்வை'** என்ற நூல் பற்றிய கண்ணோட்டம் இடம் பெறுகின்றது. இதனை எழுதிக்கொண்டிருக்கையில் அவர் பற்றிய தகவல்களுக்காக இணையப்பக்கங்களில் உலா வந்தபோது 'சிக்கிக் கொண்ட' ஒரு விடயமே இந்த முனைப்பு...

தமிழில் ஈழத்துத் திறனாய்வு முன்னோடி யார்? கே.எஸ்.சிவகுமாரனைப் பொறுத்தவரையில் விபுலானந்த அடிகள்தான் என்பது அவரின் உறுதியான பதில். இதை ஏற்க மறுப்பவர்கள் உண்டு. 'புலமைத் திமிர்' காரணமாகக் காதில் வாங்க மறுப்பவர்களும் உண்டு. அது பிரச்சினை இல்லை. ஆனால் இந்த விடயம் பற்றிய கருத்தாடல்களில் நம்மவர்கள் பெரிதாக ஈடுபட்டதாகத் தெரியவில்லை என்பதுதான் விசுவாமித்திரக் கவலை.

ஈழத்தின் முதல் தமிழ் நாவல் எது? மஹாகவியின் 'குறும்பா' தமிழுக்குப் புது வடிவமா? என்றெல்லாம் 'முன்னைய காலங்களில்' கச்சை கட்டிக்கொண்டு மல்லுக்கட்டியதை இரண்டாம் விசுவாமித்திரன் நினைத்துப் பார்க்கிறான்.

தமிழின் ஈழத்துத் திறனாய்வு முன்னோடி யார்? என்ற விடயம் தொடர்பில் நமக்குள் ஒருமித்த குரல் தேவையில்லையா? நமது பேராசிரியர்களும் பல்கலைக்கழகங்களும் 'இலக்கியத்தை வளர்க்கப் போவதாக மார்தட்டும்' பத்திரிகை சஞ்சிகைகளும் தமிழில் ஈழத்துத் திறனாய்வு முன்னோடி யார்? என்ற கேள்விக்குப் பதில் கண்டு பிடிக்கும் களத்தினைத் தயார்படுத்த மாட்டார்களா என்ற ஆதங்கம்தான் இன்றைய முனைப்பு.

# நோக்கல்

**நூல் – 'ஒரு திறனாய்வாளரின் இலக்கியப் பார்வை'**

**நூல் வகை – திறனாய்வுக் கட்டுரைத் தொகுப்பு.**

**ஆசிரியர் – கே.எஸ்.சிவகுமாரன்**






ஒரு படைப்பாளி எப்போது நூல் வெளியிடுகிறான் என்று ஆவலோடு காத்திருந்து வெளிவந்த உடனேயே நூல்நயம் என்றும், நயத்தல் குறிப்பென்றும்; நூல்மீதான பார்வை, சிறப்புக் கண்ணோட்டம், அவதானக் குறிப்புக்கள், இரசனைக்குறிப்புக்கள் எனப் பல்வேறு தலைப்புகளில் தமிழ் இலக்கியப் பிரதிகள் மீதான கருத்துக்கள் வெளியாகிப் படைப்பிலக்கிய முயற்சியின் பலமும், பலவீனமும் அறியப்படாத அவலம் நாள் தவறாமல் நடந்து கொண்டிருக்கின்றது. அபிப்பிராயம் கூறும் அனைவருமே விமர்சகர்கள் என்ற நிலை அதனிலும் துரதிஸ்டவசமானது. இத்தனைக்கும் மத்தியில் தமிழ் இலக்கிய முயற்சிகள் பற்றி கருத்துச் சொல்லும் செயல்முறை என்பது புனிதமான பணி என மனதிலிருத்தி நடுநிலை தவறாது காரியமாற்றும் கனவான்களும் நம்மிடையே உள்ளனர் என்பதுதான் பலவீனத்தின் உள்ளிருக்கும் நமது பலம்... அவ்வாறான பலத்திற்குக் காரணமான திறனாய்வாளர்களில் கே.எஸ்.சிவகுமாரனும் ஒருவராவார்.

கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். நீண்டகாலமாக கொழும்பை வசிப்பிடமாக்கிக் கொண்டவர். சில வருடங்கள் மாலைதீவு, அமெரிக்கா, ஓமான் போன்ற நாடுகளில் ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம் கற்பித்தவர். ஆங்கிலத்தில் இவர் எழுதிய கவிதைக்கு அமெரிக்க கவிஞர்கள் சபை விருது வழங்கிக் கௌரவித்திருக்கிறது. வடகிழக்கு மாகாண ஆளுனர் விருதும் கம்பன் கழக விருதும் பல விருதுகளும் பெற்றவர். 'சிவகுமாரன் கதைகள்', 'இருமை' ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்டவர். திரைப்படத் திறனாய்வில் அங்கீகாரம் பெற்றவர். தமிழ் இலக்கியத்தின் சகல துறைகளையும் தமிழ் தெரியாதோருக்கு அறிமுகஞ் செய்து வைத்தவர். அம்பது வருடங் களுக்கு மேலாக இலக்கியத்தில் கால்பதித்து இன்னமும் தளராது பல்துறை எழுத்தூழியம் செய்துவரும் இவரை பத்தி எழுத்தாளராகவும் திறனாய் வாளராகவுமே சமகாலம் அடையாளம் கண்டிருக்கின்றது.. வாசிப்பாலன்றி வால்பிடித்து தன்னை வளர்த்துக் கொள்ளாத ஆளுமைதான் சிவகுமாரன் அவர்கள்.

(2)

**'ஒரு திறனாய்வாளரின் இலக்கியப்பார்வை'** என்பது கே.எஸ்.சிவகுமாரன் அவர்களின் திறனாய்வு தொடர்பான ஒரு கட்டுரைத் தொகுப்பு நூலாகும். இது 2008 ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 1961 - 1996 வரையான முப்பத்தைந்து வருட கால இடைவெளிகளில் நூலாசிரியரினால் எழுதப்பட்டதும் வானொலியில் உரையாற்றியதுமான முப்பது கட்டுரைகள் இதில் உள்ளன. சென்னை மணிமேகலைப் பிரசுரம் 282 பக்கங்களில் இதனை வெளியீடு செய்துள்ளது. திறனாய்வுத் துறையின் புதிய திசை களைக் காட்டித்தந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள், நூலாசிரியர் பற்றிய தனது கணிப்பை நூலின் நுழைவாசலில் பதிவு செய்துள்ளார். வெளியீடு செய்யப்பட்டு அய்ந்து வருடங்களின் பின்னரும் அது பற்றிப் பேசுவதன் தேவையை அதன் உள்ளடக்கம் முக்கியத்துவப்படுத்தியுள்ளது..

விமர்சனம், திறனாய்வு, மதிப்பீடு ஆகிய சொற்கள் பொருள் வேறுபாட்டினைக் கொண்டிருப்பினும் இந்தக் கட்டுரை முழுவதும் வாசிப்பு வசதி கருதி திறனாய்வு என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. இத் தொகுப்பில் இருபத்தாறு திறனாய்வுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் பதினொன்று சிறுகதைகள் பற்றியன... அய்ந்து நாவல்கள் பற்றியன. அதேபோல் ஒரு கவிதைத் திறனாய்வும் ஒன்பது கட்டுரைத் திறனாய்வும் இடம் பெற்றுள்ளன. மேலும் திறனாய்வு பற்றி விஸ்தாரமாக விவரிக்கும் நான்கு கட்டுரைகளும் உள்ளன.

இவ்வாறான ஒரு நூலின் பயன் என்ன? ஐம்பது வருடங்களுக்கு முன்னர்வெளியான எழுத்துக்கள் பற்றிய திறனாய்வுமூலம் என்ன பயன் நமக்குக் கிடைத்துவிடப் போகின்றது? இதுபோன்ற நூல்களினால் பயன்கள் பலவுண்டு.

பழையவையும் புதியவையுமான பல தகவல்கள் இந்நூலில் உள்ளன. சி.சுப்ரமண்ய பாரதி கவிதைகள் மட்டுமல்ல கதைகளும் எழுதினார் என்பது எம்மில் எத்தனை பேர் அறிந்து வைத்துள்ளோம்? பாரதியார் அதிகம் கதைகள் எழுதாவிட்டாலும் சென்னை பூம்புகார் நிறுவனம் 1977ம் ஆண்டில் அவர் எழுதிய கதைகளைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளது.... சுவாமி விபுலானந்தர் இலக்கியத்தில் எவ்வாறு செயற்பட்டார் என்பது பற்றி.... பேராசிரியர் கைலாசபதியின் திறனாய்வு தொடர்பான ஆரம்ப முயற்சிகளைத் தொடர்ந்துதான் தமிழ்நாட்டிலே பல திறனாய்வு நூல்கள் வெளிவரத் தொடங்கின..... என்பனபோன்ற பல தகவல்களை இந்நூலிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இவை பதச்சோறுதான்.

இலக்கிய வரலாற்றைத் தெரிந்து கொள்ளவும் உதவக்கூடியது. இதனை வாசிக்கும் ஒருவர் நான்கு கால கட்டங்களைக் கடந்து செல்வதை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக வரதர் எழுதிய 'கயமை மயக்கம்' என்ற சிறுகதைத் தொகுதிபற்றிய திறனாய்வு இந்நூலில் உள்ளது. அதனை வாசிக்கும் போது சிறுகதை எழுதிய ஆண்டு. தொகுதி வெளியிட்ட ஆண்டு, திறனாய்வு வெளியான ஆண்டு, இதனை வாசிக்கும் நடப்பாண்டு ஆகிய நான்கு காலகட்டங்களை இலக்கியத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கிறோம். இந்நூலின் 180ம் பக்கத்தில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது. 'வரதரின் முதலாவது சிறுகதைத் தொகுப்பில் அவரது ஆரம்பகாலச் சிறுகதைகள் உட்பட 12 கதைகள் உள்ளன'. 'கயமை மயக்கம்' என்ற அத் தொகுப்பில் வரதரது இலக்கியக் கோட்பாடுகளின் விளக்கத்தைக் காணலாம். சி.வைத்தியலிங்கம், சம்பந்தன், இலங்கையர்கோன், சு.வே.போன்ற ஆரம்பகாலச் சிறுகதை ஆசிரியர்களைத் தொடர்ந்து வந்த 'வரதர்' என்ற திரு.தி.ச.வரதராஜன் 'மறுமலர்ச்சிக் குழுவை'ச் சேர்ந்தவர். அவரது கோட்பாடுகளில் அவரது முன்னோடிகளின் கோட்பாட்டின் தாக்கம் இருப்பது தவிர்க்க முடியாதது. அதேநேரத்தில் காலத்தின் போக்கிற்கேற்ப அவரது கதைகளும் செம்மை பெற்று வந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. திரு.வரதராஜனின் கதைகள் பற்றிப் பொதுவாக இங்கு குறிப்பிட்டுச் சொல்கையில் அவரது வெற்றி தோல்விகளையும் எடைபோட

முடிகின்றது. 'வரதர் ஈழத்தின் நல்ல சிறுகதையாசிரியர்களுள் ஒருவர்' இதனை வாசிக்கும்போது நாம் இலக்கிய வரலாறு மற்றும் கோட்பாடு என்பன பற்றியெல்லாம் அறிவூட்டம் செய்யப்படுகின்றோம்.

தெரிவு செய்யப்பட்ட காலகட்டத்துள் வெளியான சிறுகதை, நாவல் போன்ற படைப்பு முயற்சிகள் சிலவற்றின் தொகுப்பாகவும் இந்நூலைத் தரிசிக்கலாம்.

இளையதலைமுறையினருக்கான வழிகாட்டலை இந்நூல் செய்துள்ளது எனலாம். 'சி.சுப்பிரமணிய பாரதி ஒரு புனைகதையாளர்' என்ற திறனாய்வுக் கட்டுரையில் அவனுடைய புனைகதைகள் தமிழுக்குச் செழுமையூட்டி யுள்ளன. அவனுடைய கதைகள் சிலவற்றைப் பள்ளிக்கூட மாணவர்கள் பாடநூல்களிலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான திறனாய்வுப் பயிற்சிகளிலும் சேர்த்துக் கொள்ளல் விரும்பத்தக்கது. (பக்கம் 45) 'ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை அடைந்துள்ள வளர்ச்சியைக் கவனிக்கவும் மதிப்பிடவும் இலங்கையர்கோனின் சிறுகதைகள் உதவியுள்ளன.' (பக்கம் 81) இதுபோன்றவற்றை வழிகாட்டலுக்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

மேலும் கே.எஸ்.சிவகுமாரனின் எழுத்து முயற்சிகள் பற்றிய திறனாய்வு தொடர்பிலான வளர்ச்சி பற்றியும் இந்நூலினூடாக நாம் தெரிந்து கொள்ளலாம். அவரின் கவிதை பற்றிய திறனாய்வுதான் இந்நூலில் காலத்தால் முந்திய கட்டுரை ஆகும். அது **'கச்சியப்பர் மாதர்மதுவெறி'** என்ற கட்டுரையாக வந்துள்ளது. சுப்பிரமணியப் பெருமானுடைய திருமணத்தைக் காணச் சென்ற பெண்களின் மதுவெறி மயக்கம் பற்றி கச்சியப்பர் பாடிய இருபத்தைந்து பாடல்கள் பற்றிய திறனாய்வு அது. 1961ம் அண்டு புதினம் சஞ்சிகையில் வெளியானது. (சிவகுமாரன் அவர்களின்முதலாவது திறனாய்வுக் கட்டுரை இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்பது வெறும் ஊகம்தான்)

1962ம் ஆண்டில் புனைகதைகள் மீதான திறனாய்வுளை எழுதுவதிலேயே ஆசிரியர் கூடுதல் கவனஞ் செலுத்தியுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எஸ்.பொன்னுத்துரை எழுதிய 'தீ' என்ற நாவலை உட்படுத்தி இந்த ஆண்டில் மொத்தமாக எட்டு திறனாய்வுக் கட்டுரைகள் புனைகதை தொடர்பில் இந்நூலில் உள்ளன. இவை அனைத்தும் விமர்சனச் சாயல் கொண்ட திறனாய்வுகள் ஆகும். எடுத்துக் காட்டாக 'தீ' என்ற நாவல் பற்றி 'இதுவோரு குறிக்கோள் இல்லாத நாவல். நல்ல தமிழ் நாவல் வரிசையில் இடம் பிடிக்கத் தவறி விடுகின்றது. இரசனையை அருவருக்கச் செய்கின்றது. இலக்கிய மதிப்பை இது பெறத் தவறி விடுகின்றது. நாவலல்ல வெறும் எழுத்துத் தொகுப்பு' என எழுதியதை அவதானிக்கலாம். விமர்சனச் சாயல் கொண்ட திறனாய்வு என ஊன்றிச் சொன்னதன் நோக்கம் நூலாசிரியர் சிவகுமாரன் அவர்கள் 1995 இல் தெணியான் எழுதிய 'மரக்கொக்கு' என்ற நாவலுக்கு எழுதிய திறனாய்வுப் பார்வையில் விமர்சனச் சாயல் தென்படவில்லை என்பதுதான். 1962 இல் விமர்சனம் எழுதிய சிவகுமாரன் அவர்கள் 1995 இல் மிதவாதம் கொண்ட பார்வையினனாக மாற்றம் பெற்றிருப்பதைச் சொல்வதே

இக்குறிப்பின் நோக்கமாகும். திறனாய்வு என்றால் என்ன என்பதை நன்கு அறிந்து வைத்ததனாலேயே தான் ஒரு விமர்சகர் அல்லர் என்று 1986 இல் கூறியதான நூலாசிரியரின் வாக்குமூலம் இதனை உறுதிப் படுத்துகின்றது. (பக்கம் 237)

(3)

மீள் பிரசுரமாகி நூலில் வந்தள்ள கட்டுரைகள் அனைத்துமே சமகாலத்தில் மிகவும் பயனளிக்கத்தக்கதான திறனாய்வு முயற்சிகளின் பரந்த வெளியாக இக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

'விபுலானந்தர் தமிழ் திறனாய்வு முன்னோடி' என்பது நூலின் தொடக்கக் கட்டுரையின் தலைப்பாகும். இலங்கையின் முதலாவது தமிழ்த் திறனாய்வாளரே விபுலானந்தர்தான் என இந்நூலாசிரியர் தெளிவாக இக்கட்டுரையில் நிறுவுகின்றார். விபுலானந்தர் எழுதிய பல கட்டுரைகளை இதற்கென ஆதாரமாக்கியுள்ளார். அழகியல் உணர்வும் விஞ்ஞான மனப்பான்மையும் விபுலானந்த அடிகளாரை ஒரு திறனாய்வாளனாக ஆக்கியுள்ளமையை இக்கட்டுரையினூடே நாம் தெரிந்து கொள்ளலாம்.

பேராசிரியர் ஒருவரின் கூற்றுக்கு எதிராக விபுலானந்தரே தமிழ்த் திறனாய்வு முன்னோடி என சிவகுமாரன் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாக இணையத்தளத் தகவலொன்று தெரிவிக்கின்றது. இதன் மூலம் இக்கருத்தில் அவர் உறுதியாக இருப்பதாகத் தெரிகின்றது. இந்த உறுதிப்பாடானது நூலாசிரியரின் எழுத்து நேர்மையானது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

(4)

நூலின் பொருளடக்கத்தில் 'சு.வித்தியானந்தனின் தமிழியற் சிந்தனை' என்ற கட்டுரை காணாமற் போனது ஏமாற்றமாக இருந்தது. பொருளடக்கமும் உள்ளிருந்த கட்டுரைத் தலைப்புகளும் கண்ணுக்குள் தூசி விழுத்தின. சி.சுப்பிரமணியபாரதி-(சி.சுப்ரமணிய பாரதி), இலங்கையர் கோன் வெள்ளிப்பாதரசம்-(இலங்கையர்கோன் ஈழத்துச் சிறுகதை முன்னோடி), இளங்கீரன் - (இளங்கீரன்), கதைப்பூங்கா - (கலைப்பூங்கா), வ.இராசரத்தினம் - (வ.அ.இராசரெத்தினம்), வாழ்வும் வளமும் - (வாழ்வும் வழிபாடும்) என அச்சாகியிருந்தன. பின்னட்டையில் நூலாசிரியரின் புகைப்படம் தவிர்க்கப்பட்டிருக்கலாம். இவைபோன்றன நூலின் தரத்தையும் கனதியையும் குறைத்துவிடவில்லையாயினும் சொல்ல வேண்டும்போல் இருந்தது. அவ்வளவுதான்.

**'ஒரு திறனாய்வாளரின் இலக்கியப்பார்வை'** என்ற நூல் ஈழத்துத் தமிழிலக்கிய உலகில் ஒரு வலிதான ஆவணம் ஆகும். திறனாய்வாளர் என்ற வகையில் கே.எஸ்.சிவகுமாரன் அவர்களின் அனுபவமும் உன்னதமான பங்களிப்பும் அவர் வரலாற்றில் வாழ்வார் என்பதை மேற்படி நூல் பிரேரிக்கின்றது எனலாம்.

**- இரண்டாம் விசுவாமித்திரன்**

# பேராசிரியர் மௌனகுரு பக்கம்....

## வரலாறு உண்மையா? அல்லது கட்டமைக்கப்பட்ட கருத்தோட்டமா?



கிடைக்கின்ற ஆதாரங்களை வைத்துக்கொண்டு கட்டியெழுப்பப் படுகின்ற கருத்துருவே வரலாறாகும். வரலாறு எப்போதும் ஒரு கருத்துநிலை (ideology) சார்ந்ததாகவே இருக்கும். ஆளும் வர்க்கமே முதலில் வரலாற்றை எழுத ஆரம்பித்தது. அதிகாரத்திற்கும் ஆட்சியை மற்றவர் ஏற்பதற்கும் வரலாறு ஆளும் வர்க்கத்திற்கு அவசியமாகின்றது. அரசவையில் வரலாற்றைப் பொறிக்கும் அரசர்கள் இருந்துள்ளனர்.

இதனால் அரச குடும்பங்களினதும் அவர்கள் புரிந்த போர்களினதும் அவர்தம் செயல்களினதும் வரலாறாகவே வரலாறு கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இவ்வகையில் இலங்கை வரலாறும் அரசர்களினதும் உயர் குலங்களினதும் வரலாறாகவே கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டுக்குட்பட்ட சரித்திரவியலாளர் வரலாற்றைச் சுழலேணி முறையில் கண்டனர்.

சமுகத்தை மாற்றியமைக்க வரலாறு எழுதப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை 19ம் நூற்றாண்டில் மாக்ஸிஸம் தந்தது. ஆளுவோர் ஆளப்படுவோர் எனப்பிரிந்து நின்ற சமுகத்தில் ஆளப்படுவோர் பற்றிய வரலாறு அதன் பின் எழுதப்படலாயிற்று.

பின்னர் ஆளப்படுவோர் மத்தியில் பெண்கள் மேலும் ஒதுக்கப்படுவதற்கான கருத்துக்கள் மேனிலை பெற்றன. பின்னர் பெண்ணியல் நோக்கில் வரலாறு எழுதப்படலாயிற்று.

ஆளப்படும் குழுக்களான பழங்குடி மக்கள், நாடோடிக் குழுக்கள், பிற்பட்டசாதியினர். ஆகிய விளிம்பு நிலை மக்கள் கவனிக்கப்பட வேண்டும் என்ற கருத்துநிலை தோன்றியதால் அவர்களின் பார்வையில் வரலாறு எழுதும் போக்கு உருவானது.

மானிடவியல், சமுகவியல் கல்விநெறிகள் இச்சிந்தனைகள் வளர உதவியமை மாத்திரமன்றி இம்மக்கள் பற்றிய தகவல்களையும் தந்தன. மக்கள் பல்வகையினராகப் பிரிந்துள்ளனர் என்ற பன்மைத்தன்மை (Theory of difference) பின்நவீனத்துவ வாதிகளால் முன்வைக்கப்படுகின்றது. இதனால் வரலாற்றை ஒற்றை நோக்கில் பரிணாம வளர்ச்சியின் பிரதான சொல்லாடலாகப் பார்க்காமல் இதன் பன்மைத்தன்மையைச் சீர்தூக்கிப் பார்க்கும் சிந்தனைகளும் உருவாகின்றன.

வரலாறு உருவாக்கப்படும் ஒரு கருத்தோட்டமே. உருவாக்கம் அதிகார மயப்படுத்தப்படாது அமையவேண்டும்.

சமுகம் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கிறது. மேற்குலகில் வர்க்கங்களாகவும், இனங்களாகவும் பிரிந்த கிடந்தால் கிழக்குலகில் சாதிகளாகவும் குழுக்களாகவும், இனங்களாகவும் பிரிந்து கிடக்கிறது.

தனக்குள்ள உரிமை மற்றவருக்கும் உண்டென்ற உயரிய எண்ணம் வரும்வகையில் சரித்திரம் எழுதப்படவேண்டும்.

# விளாசல் வீரக்குட்டி



**மிதுனன்**

என்னடா பெரியதம்பி, நம்மட கிராமம் முழுக்க ஒரே சனக் கும்பலாக் கிடக்கு! என்னடா நடந்த? ஆரும் ஆத்தில குளத்தில தாண்டு செத்துப் பொயித்தாங் கலாமா?

என்ன? சவூதிக்கு பணிப் பெண் வேலைக்குப் போன நம்மட செல்லத்தம்பியர்ட பேத்தி சவுந்தரம்மா ஏஜன்ஜீயால ஏமாத்தப்பட்டு, அறுத்துக் கழுவின மீனப் போல வெறுங் கையோட திரும்பி வந்திருக்கிறாளா? என்ன பாவ இழவுடா இது!

அவள இவளப் பாத்து இவளுகளுக் கெல்லாம் ஆச கூடிப் பொயித்து! இருந்த நகநட்டுகளையெல்லாம் வித்துத் துலச்சி.... பெரிய எடுப்பில வெளிநாட்டுக்குப் போனவளல்லவா இவள்? புருசன் நல்லான் ராப்பகலாப் பாடுபட்டு உழைக்கிறதக் கட்டுமட்டாகச் செலவழிச்சி, கொஞ்சநஞ்சத்த மிச்சம்புடிச்சி வாழத்தெரியாம.... என்ன சீவியம்டா இது?

இனியென்ன செய்யிற? எல்லாத்தையும் உட்டெறிஞ்சி போட்டு பழையபடி வாழுறதான் புத்தி.

என்ன! ஏஜன்ஜியப் புடிச்சி வழக்கு வைக்கப் போறாளாமா? சேச் சேச்சே... இதெல்லாம் நடக்கிற காரியமில்ல! உனக்கும் தெரியும் தானே நம்மட மூதூர் பொட்ட றிசானாக்கு என்ன நடந்ததெண்டு? பாவப்பட்ட ஜென்மங்கள். இதப் பாத்தாவது நம்மடதுகளுக்கு மூள துறக்கிறல்லையா?

உழச்சாலும் திண்டாலும் ஊரோட கிடந்து சாகிறதான் நம்மளப் போல.. ஏழைகளுக்கு நல்லது! ஆனதால வெளிநாட்டுக்குப் போற ஆசைகள உட்டுப் போட்டு ஊரில மரக்கறிய வித்தெண்டாலும் நிம்மதியா வாழச் சொல்லு,

சரி பெரியதம்பி , எனக்கும் ஊரோணப்பட்ட வேலைகள் கிடக்கு, நான் பொயித்து வாறன்.

## ‘செங்கதிர்’ ஆண்டுச் சந்தா : ரூ1000/-க்குக் குறையாத இயன்ற அன்பளிப்பு

✯ **“செங்கதிர்”** இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலம் விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் நேரில் வழங்கலாம்.

**அல்லது**

✯ மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு, நடைமுறைக் கணக்கு இல : 113100138588996 க்கு வைப்பிலிடலாம்.

**People's Bank (Town Branch) Batticaloa.**

**Current account No.: 113100138588996 - For bank deposit**

**அல்லது**

✯ அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பில் மாற்றக் கூடியவாறு காசுக்கட்டளை அனுப்பலாம்.

**Post Office, Batticaloa - For money orders**

✯ காசோலைகள் / காசுக்கட்டளைகளை த.கோபாலகிருஸ்ணன் எனப் பெயரிடுக. **Cheques / Money orders in Favour of T.Gopalakrishnan**

பதிவு இல: DS/ MN/C/BR/1659

# ஏஞ்சல்ஸ்

## பியூட்டி றீட்மெண்ட் செண்டர்



உங்கள் அழகு சம்பந்தமான எந்தப் பிரச்சினையானாலும்

- பேர்சியல் (கோல்டன், பேர்ல்)
- முடி ( ஸ்ரெய்ட்னிங், கலரிங்)
- பொடி கெயார்
- மினி கெயார்
- முகப்பரு, அனாவசிய முடி நீக்கல்.

## தொடர்பு கொள்ளுங்கள்

இந்தியாவில் விசேட பயிற்சி பெற்ற பியூட்டிசியன்

ஏஞ்சல் கருணா

இல.29, தண்ணீர் கிணற்றடி வீதி,
பாலமீன்மடு,
மட்டக்களப்பு.

தொ.பே: 065 222 3663 / 077 9761 880 / 065 490 8000


வணசிங்கா பிரிண்டர்ஸ், 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.இல. : 0652227170